# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜூலை-2016
பருவம் 2 புனல் -22

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



# ‘விடுதலைவெளி’

‘ கட்டுக்கள் தளர்த்தி, இயல்பாய்த் துளிர்க்க மகளிர் கொண்டாட்டப் பயணம் ’

காட்டாறு குழு, அறிவியல் பண்பாட்டை நடைமுறைப்படுத்தும் மேலும் ஒரு முயற்சியாக, ‘விடுதலைவெளி 2016: கட்டுக்கள் தளர்த்தி, இயல்பாய்த் துளிர்க்க மகளிர் கொண்டாட்டப் பயணம்’ என்ற பெயரில் மகளிர் சுற்றுலாவைத் திட்டமிட்டது.

சராசரி மனிதனின் வீடுகளில் உள்ள பெண்களுக்குக்கூட, வருடம் இரண்டு முறையோ, மூன்று முறையோ பக்திச் சுற்றுலா என்ற பெயரில், கோவில்களுக்குப் போகும் சாக்கிலாவது வெளியூர்களுக்குச் சுற்றுலா செல்லும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால், கொள்கை - இயக்கம் என்று என்று இயங்கிக் கொண்டிருக்கும் பல முற்போக்கு இயக்கங்களின் தோழர்களின் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு அந்த வாய்ப்பும் பறிபோகிறது. இயக்க நிகழ்வுகளுக்குக்கூட அவர்கள் அழைத்து வரப்படுவதில்லை. வெளிஉலகத் தொடர்புகள் என்றால் அது, நெருங்கிய உறவினர்கள் மற்றும் ஜாதிக்காரர்களுக்குள் மட்டுமே இருக்கிறது.

பெரியாரியலை வாழ்வியலாக்குவது என்றால் கூட்டங்களுக்கு அழைத்துப் போவது மட்டுமல்ல; பெரியார் வாழ்வியலை ஏற்றுக் கொண்டவர்கள் தான் உறவினர்களாக இருக்கவேண்டும். இருக்க முடியும். அதற்குரிய வாய்ப்புகளை நாம் உருவாக்கிக்கொண்டே இருக்க வேண்டும். அப்படி ஒரு முயற்சியாகத்தான் இந்த மகளிர் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

திராவிடர் கழகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடும்ப விழாக்கள் நடந்து வருகின்றன. காட்டாறு குழுவும், த.பெ.தி.க, பெரியார் தி.க, தி.வி.க என எந்த இயக்கத்தில் இயங்கிய போதும் குடும்ப விழாக்களையும் குடும்பச் சுற்றுலாக்களையும் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது. பெரியாரியல் குடும்பங்கள் ஒன்றிணைய வேண்டும். இரத்தச் சொந்தங்களுக்கு நிகராக, இந்தக் கொள்கைச் சொந்தங்கள் உருவானால், ஜாதி ஒழிப்பில் அது ஒரு முக்கியப் பங்காக அமையும்.

2016 ஜூலை 1 ஆம் நாள் இரவு திருப்பூரிலிருந்து தொடர்வண்டியில் புறப்பட்டு நாகர்கோவில், களியக்காவிளை, மார்த்தாண்டம், திற்பரப்பு அருவி, பத்மநாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டிப்பாலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குப் பயணம் சென்றது.

உண்மையாகவே இப்பயணம் விடுதலை வெளியாக அமையவேண்டும் என்று யோசித்ததால், பயணத்தில் பயிற்சி வகுப்புக்கள் என்று எதையும் திட்டமிடவில்லை. ஆனால், கிடைத்த சில மணி நேரங்களில் இரண்டு முக்கிய விவாதங்கள் நடைபெற்றன. பெரியாரியலை நடைமுறைப்படுத்தும் போது பெண்களுக்கு எழும் சிக்கல்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தோழர்கள் புரட்சிக்கொடியும், தாமரைக்கண்ணனும் சிக்கல்களுக்கான பதில்களைக் கூறினர்.

அதைத் தொடர்ந்து, வீட்டுவேலைகளில் உள்ள பாகுபாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பெண்கள் ஒரு அணியாகவும், ஆண்கள் ஒரு அணியாகவும் விவாதித்தனர். வீட்டு வேலைகளில் பாகுபாடுகள் என்னென்ன இருக்கிறது? அவற்றை எப்படிக் களைவது? என்ற இரண்டு வகையாக அனைத்துப் பெண்களும், ஆண்களும் மனம் திறந்து கருத்துக்களை விவாதித்தனர். அனைவருக்குமே மனம்விட்டுப் பேசும் ஒரு தளமாகவும், எந்தத் தயக்கமும் இன்றிச் சிக்கல்களை விவாதிக்கும் இடமாகவும் விடுதலைவெளி விவாதங்கள் நடந்தன.

வீட்டுவேலைகள் எதிலும் இதுவரை பங்கேற்காத குற்றத்தை அனைத்து ஆண்களும் ஒப்புக்கொண்டனர். இனி வரும் காலங்களில், துணி துவைப்பது, வீடு சுத்தம் செய்வது, குழந்தைகளைக் கவனிப்பது, பாத்திரங்களைக் கழுவுவது போன்ற அனைத்து வீட்டு வேலைகளிலும் சரிபங்கு எடுத்துச் செய்வது என்று உடன்படிக்கை ஏற்பட்டது. ஆண்கள் செயல்படுத்துவார்கள் என நம்புகிறோம். இல்லாவிட்டால் அந்தந்த வீடுகளில் உள்ள பெண்கள் செயல்படுத்த வைப்பார்கள் என்பதைத்தான் உறுதியாக நம்புகிறோம். ஏனென்றால் அந்த அளவுக்கு உறுதியான மனநிலையை விடுதலைவெளி அளித்தது.

மார்த்தாண்டம் மாலை ஏட்டின் ஆசிரியர் தோழர் ஜெபக்குமார், தோழர் வைகுண்ட ராமன் ஆகியோர் சுற்றுலா சிறக்க அனைத்து உதவிகளையும் செய்தனர். திருப்பூர் வேணி, தாராபுரம் பூங்கொடி ஆகிய தோழர்கள் பயணத்தை ஒருங்கிணைத்துச் சிறப்பாக நடத்தி முடித்தனர். வரும் டிசம்பர் மாதத்தில் அடுத்த மகளிர் சுற்றுலா முற்றிலும் மகளிர் மட்டுமே செல்லும் வகையில் திட்டமிடப்படுள்ளது. கணவர்கள், குழந்தைகள், அண்ணன், தம்பி என அனைவரது தொல்லைகளையும் தவித்து முற்றிலும் விடுதலைவெளியாக அப்பயணம் இருக்கும்.

டிசம்பரில்

## கணவர்கள்–குழந்தைகளைத் தவிர்த்த முழுமையான ‘விடுதலை வெளி’



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
எரிதழல்
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு

**சட்ட ஆலோசனைக்குழு:**
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரம் & விற்பனைத் தொடர்பு:**
சி. விஜயன் 94881 79109
சேயூர் செந்தில்குமார் 90252 47411
ஜீவாநகர் குமார் 99944 77013
ஆ. பாண்டியன் 96591 12891
கடத்தூர் காந்தி 99428 76665
ஈரோடு வெங்கட் 97884 95774

**ஆன்லைன் சந்தா - நன்கொடை:**
பெரியகுளம் குமரேசன் 99943 65133


**ஆண்டுக்கட்டணத் தொடர்பு:**
திருப்பூர் வேணி 77084 58086

**வடிவமைப்பு:**
முகில் மீடியா 97873 20044

**அச்சு:**
க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ், சென்னை

**உரிமை, வெளியீடு, ஆசிரியர்:**
சி.விஜயராகவன் 99762 56821

**பொறுப்பாசிரியர்:**
சி. இராவணன் 97868 89325



# இந்தி, சமஸ்கிருதத் திணிப்புகளுக்கு எதிராகத் திராவிடர் பண்பாட்டை வாழ்வியலாக்குவோம்!

சமஸ்கிருதம் மற்றும் இந்தித் திணிப்புகளை எதிர்த்து தமிழ்நாட்டில் 1926 ஆம் ஆண்டிலிருந்தே சுயமரியாதை இயக்கம் போராடி வந்துள்ளது. தமிழ்நாட்டு வரலாற்றில் இந்தி, சமஸ்கிருதம் இரண்டுக்கும் எதிராக முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் தோழர் பெரியார்.

“நமது நாட்டின் ஷேமத்திற்காக என்று எந்தக் காரியம் ஆரம்பிக்கப் பட்டாலும், அவற்றை நம் நாட்டுப் பிராமணர்கள் கைப்பற்றிக் கொண்டு அதனால் தாங்கள் பிழைக்கும் படியாகவும், நமக்கு பெரிய ஆபத்து விளையும்படியாகவே செய்து விடுகிறார்கள்.... அதுபோலவே நமது தமிழ்நாட்டில் ஹிந்தி பிரசாரமும் பெரும்பாலும் பிராமணர்களுக்கே அனுகூலத்திற்காக செய்யப்பட்டு இருக்கிறது.” என்று 1926 லேயே தனது குடி அரசில் எழுதினார்.

தோழர் பெரியார், குடி அரசு - கட்டுரை - 07.03.1926

அதன்பிறகு 1931 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் நடந்த மாநாட்டில்,

“பழைய புராணக் கதைகளைச் சொல்லுவதைத் தவிர வேறு அறிவு வளர்ச்சிக்கும் மற்ற பொது விஷயங்களுக்கும் உதவாத சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளைத் தேசீயத்தின் பேரால் அரசியல் காரணங்களுக்காக வென்று படிக்கச் செய்வதானது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதாகுமென்று இம்மகாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடம் பரப்பவும், நவீனத் தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும், மற்ற தேசங்களில் எழும்பியிருக்கும் சீர்திருத்த முற்போக்கு உணர்ச்சிகளை நமது மக்களிடம் தோற்றுவிக்கவும், உலக பாஷையாக வழங்கிவரும் இங்கிலீஷ் பாஷையையே நமது வாலிபர்கள் கற்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது” என்று தீர்மானம் நிறைவேற்றனார்.

தோழர் பெரியார், குடி அரசு - தலையங்கம் - 14.06.1931



*பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனீயத்துக்கும் நன்மை செய்யவே இந்தி, சமஸ்கிருதங்கள் திணிக்கப்படுகின்றன. இந்த மொழிகளுக்குப் பின்னால் பார்ப்பனப் பண்பாடு திணிக்கப்படும் என்பதற்காகவே இந்த மொழிகளைப் பெரியார் எதிர்த்துள்ளார். அவர் சிந்தித்தது போலவே தற்போது சமஸ்கிருதத் திணிப்பிற்கு அடுத்த கட்டமாக, பார்ப்பன - வேதப் பண்பாட்டுத் திணிப்பும் தொடங்கி விட்டது.*

*மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், சமஸ்கிருதத் திணிப்பைத் தொடர்ந்து நாடு முழுவதும் வேதக்கல்விமுறையைப் புகுத்தியுள்ளது. சி.பி.எஸ்.இ கல்விமுறைக்கு இணையானதாக பார்ப்பன வேதக் கல்விமுறையைத் திணிக்கத் தொடங்கியுள்ளது. இது வேதக் கல்விமுறை ( Ved Vidya - Vedic education board) எனப்படும். இதற்கென மனிதவள மேம்பாட்டுத்துறையின் சார்பிலேயே, தனியாக ஒரு தன்னாட்சிக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. அதன்பெயர் மகரிஷி சண்டிபாணி ராஷ்ட்ரிய வேத வித்யா ப்ரதிஸ்தான் (MSRVVP).*

*இந்த MSRVVP என்ற நிறுவனம் மத்தியப் பிரதேச மாநிலம் ஊஜ்ஜயினியில் 1987 முதல் ஒரு தனியார் கல்வி நிறுவனம் போல இயங்கி வந்தது. இதுவரை இந்தியா முழுவதும் 450 பாரம்பரிய வேதக்கல்வி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, வேதக்கல்வியைப் பரப்பி வந்தது. மோடி அரசு உருவான பிறகு மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒருதன்னாட்சி பெற்ற நிறுவனமாகவே இயங்குகிறது. தேவி ப்ரசாத் திரிபாதி என்ற பார்ப்பனர் இதன் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார். வேதக்கல்வி முறையின் பாடத் திட்டங்கள், தேர்வுகளை இந்த நிறுவனம் நிர்வகிக்கும்.*
*சான்று: Ritika Chopra|New Delhi|Indian Express: May 23, 2016*

*இனி இந்நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் வேதங்களையும் ஒரு பாடமாக மாற்ற வழிவகை செய்யும். வேதப் பண்பாட்டைப் படிக்கவும், பரப்பவும் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் துறைகளை உருவாக்கும். பார்ப்பனப் பண்பாடான, வேதப்பண்பாட்டு மாநாடுகள், கருத்தரங்குகளை நடத்தும். பார்ப்பனப் பண்பாட்டைக் கட்டாயப்படுத்தும் இதழ்களையும், நூல்களையும் உருவாக்கும். கி.மு 1000 ஆவது ஆண்டுக்கு நம்மை பின்னோக்கி இழுத்துச் செல்லும்.*

*ஒரு குழந்தை பிறந்தவுடன் அதற்கு என்ன பெயரிட வேண்டும்? அக்குழந்தை எங்கு வாழ வேண்டும்? அக்குழந்தை படிக்க வேண்டுமா? வேண்டாமா? என்ன உண்ண வேண்டும்? என்ன உடை உடுத்த வேண்டும்? என்ன தொழில் செய்ய வேண்டும்? எப்போது திருமணம் செய்ய வேண்டும்? எப்படிக் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும்? அந்தக் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்? இறந்த பிறகும் என்ன செய்ய வேண்டும்? என அனைத்தையும் நிர்ணயிப்பவை இந்த வேதங்களும் சாஸ்திரங்களும் தான்.*

*புத்தர், அசோகர் காலங்களுக்குப் பிறகு இந்தப் பார்ப்பனப் பண்பாட்டுக்கு எதிராக மிகப்பெரும் பண்பாட்டுப் புரட்சியைத் தொடங்கி, தன் காலத்திலேயே பார்ப்பனப் பண்பாடுகளுக்கு மரண அடி கொடுத்தவர் பெரியார். நமது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நாம் நடத்தும் விழாக்கள், இல்ல விழாக்கள், ஊர் விழாக்கள், பழக்க வழக்கங்கள் என அனைத்திலுமே பார்ப்பனப் பண்பாட்டுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டை உருவாக்கி, பரப்பியவர் பெரியார்.*

*பெரியார் காலத்தில் தமிழ்நாட்டில் பெரும்பான்மை மக்களின் பண்பாடாக இருந்த திராவிடர் வாழ்வியல் பண்பாடு, பழக்க வழக்கங்கள் - கடந்த பல ஆண்டுகளில், பெரியார் இயக்கத் தோழர்களின் பண்பாடாகக் குறுகிப் போய்விட்டது. பல பெரியார் இயக்கத் தோழர்களே அவற்றைக் கடைபிடிப்பதில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

*இந்தச்சூழலில் தமிழ்நாட்டில் இந்தி, சமஸ்கிருத எதிர்ப்பு அலைகள் மீண்டும் உருவாகின்றன. அவை வெறும் இந்தி, சமஸ்கிருத மொழித் திணிப்புகளுக்கான எதிர்ப்புகள் என்ற அளவில் சுருங்கி விடாமல், பார்ப்பன - இந்து - வேதப் பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டை மீண்டும் நடைமுறைப் படுத்தும் நோக்கில் வீறுகொண்டு எழவேண்டும்.*

*'சொல்லுக்கு முன் செயல்' என்பது போல இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு எதிர்ப்பாளர்கள் முதலில் திராவிடர் பண்பாட்டைத் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்தத் தொடங்க வேண்டும். திராவிடர் வாழ்வியலை விளக்கும் வகையில் திராவிடர் பண்பாட்டுக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறவேண்டும். திராவிடர் இயக்கங்களின் தோழர்களும், பொறுப்பாளர்களும் பண்பாட்டுத் தளத்தில் தங்களது கடந்த காலச்செயல் பாடுகளையும் - செய்யப் போகும் சாதனைகளையும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.*

*திராவிடர் பண்பாடு குறித்த விவாதங்களை நடத்த வேண்டும். பண்பாட்டு, பழக்கவழக்கக் கையேடுகள் வெளியிடப்பட வேண்டும். மொழித் திணிப்புகளுக்கு எதிராக மட்டுமே இயங்குவதும் எதிர்வினையாற்றுவதும் நிரந்தரத் தீர்வாகாது.*

வேதப் பண்பாட்டு எதிர்ப்பு வரலாற்றை மக்களுக்குப் பயிற்றுவிப்போம்.

வேதங்களுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டை வாழ்வியலாக்குவோம்.






# கபாலியும் தலித்முரசும்

தலித் முரசு

கபாலி. இயக்குநர் பா.இரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள படம். தமிழ்நாட்டுத் திரைவரலாற்றில் இன்று வரை நடந்திருக்கும் வியாபாரங்களை மிஞ்சி, மிகப்பெரும் வியாபாரச் சாதனை படைத்துள்ளது. வெளிநாடுகளில் மட்டும் 1000 திரைகளில் வெளியாக உள்ள முதல் தமிழ்த் திரைப்படம் கபாலிதான்.

2016 ஆம் ஆண்டு ஏப்ரலில் விஜய் நடிப்பில் வெளியான 'தெறி' படத்தைத் தயாரித்த கலைப்புலி தாணுதான் இந்தப் படத்தையும் தயாரித்துள்ளார். தெறி படத்தை வெளியிடும்போது மிக அதிகமாக தொகை நிர்ணயித்துக் கொள்ளையடித்தவர் இவர். திரை அரங்க உரிமையாளர்கள் அரசு நிர்ணயித்த கட்டணங்களை விட அதிகமாகக் கட்டணங்களை வசூலித்துத்தான் போட்ட முதலை எடுக்க முடியும் என்ற நிலையை உருவாக்கியவர். இவரது தயாரிப்பில் வரும் கபாலி நாட்டில் மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தப்போவதாக பத்திரிகைகள் விளம்பரம் செய்கின்றன.

இயக்குநர் பா.இரஞ்சித் ஏற்கனவே இயக்கி வெளியான 'மெட்ராஸ்' திரைப்படத்திற்குத் தேவையற்ற பரபரப்புகளும், அளவுக்கு மிஞ்சிய புகழுரைகளும் வழங்கப்பட்டன. 'தலித் விடுதலையின் அடையாளம் மெட்ராஸ்' என்பது போன்ற தவறான பிம்பங்கள் உருவாக்கப்பட்டன.

தலித் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு இயக்குநர் இயக்கிய படம் வணிக ரீதியிலும் வெற்றிபெற்றது என்ற அளவில் அப்படம் பாராட்டப்பட்டிருந்தால் சரியானது தான். அதைத்தாண்டி, தலித் புரட்சி நடந்து விட்டது; தலித்தியம் வென்று விட்டது; தலித் விடுதலைக்குப் பாதை அமைக்கப்பட்டு விட்டது என்பது போல, இரஞ்சித்தே வெட்கத்தில் கூசிப் போகும் அளவுக்குப் பாராட்டுக்கள் நடைப் பெற்றன.

அந்த மெட்ராஸ் படமே கோபி என்ற இன்னொரு தலித் இயக்குநரின் கதையைத் திருடி, இன்னொரு தலித்தின் உழைப்பைத் திருடித்தான் உருவாக்கப்பட்டது. இயக்குநர் கோபி நீதிமன்றம் சென்றார். அதன் பிறகு அவர் அமைதியாக்கப் பட்டார். அதைப்பற்றிப் பேச இங்கு எந்தப் புரட்சியாளர்களுக்கும் நேரமில்லை. அந்த தலித் புரட்சியை ஞானவேல் ராஜா என்ற இடைநிலைச்சாதி வணிகர் தனது வணிக வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டார். அதே போல கபாலி நடத்தப்போகும் தலித் புரட்சியை கலைப்புலி என்ற வியாபாரப்புலி பயன்படுத்திக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு விதையாக இருக்கும் தோழர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு பற்றி விரிவாக விளக்கிய 'அம்பேத்கர்' படம் திரையிடுவதற்குத் தியேட்டர்களே கிடைக்கவில்லை. தலித் இயக்கங்களும், பெரியார் இயக்கங்களும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் போட்டி போட்டுக்கொண்டு அப்படத்தை தமிழ்நாடெங்கும் கொண்டு சென்றன. தலித் புரட்சிக்காகப் படம் எடுத்த ஞானவேல்ராஜாக்களும், கலைப்புலிகளும் அப்போது எங்கு சென்றார்கள் எனத் தெரியவில்லை. இயக்குநர் இரஞ்சித் அம்பேத்கர் படம் மக்களைச் சென்றடைய என்ன வேலை செய்தார்? எதுவும் செய்யவில்லை.

தமிழ்நாட்டில், பெரியாரியல்-அம்பேத்கரியலைப் பரப்புவதை வாழ்நாள் பணியாக ஏற்று, கடந்த 16 ஆண்டுகளாகத் தொடர்ந்து 'தலித்முரசு' என்ற ஏட்டை நடத்திவருகிறார் தோழர் புனிதப்பாண்டியன். தோழர் அம்பேத்கரின் ஜாதியை ஒழிக்க வழி எனும் நூலை பலமுறை பதிப்பித்து தமிழ்நாடெங்கும் பரப்பி வருகிறார். மிகப்பெரும் பொருளாதாரச்சிக்கலில் சிக்கி, அந்த ஏடு தொடர்ந்து வெளிவர இயலாத நிலையில் உள்ளது. புத்தகவெளியீட்டுப் பணிகளும் தடைபட்டுள்ளன. இதுதான் தலித் விடுதலையின் உண்மை நிலை.

திரைஉலகில் குறுகிய காலத்தில் மிகப்பெரும் உயரத்தை அடைந்துள்ள பா.இரஞ்சித் அவர்களை வாழ்த்துகிறோம். ஆனால் அவர் அந்த உயரத்தை அடைந்ததற்காக 'தலித் புரட்சியின் அடையாளம்' என்பது போன்ற போலியான பிம்பங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடாது. உருவாக்குபவர்களை அனுமதிக்கூடாது. அவர் இந்த உயரத்தை அடைந்ததற்கு அடிப்படையாக எண்ணற்ற பெரியாரிய - அம்பேத்கரியப் போராளிகள் உழைத்திருப்பார்கள். அவருக்கே அது தெரிந்திருக்காது.

இனியாவது, பொருளாதார ரீதியாக ஒரு தன்னிறைவு நிலையை அடைந்த பிறகாவது, உண்மையாகவே தாழ்த்தப்பட்டோர் விடுதலை, பெரியாரியல், அம்பேத்கரியல் ஆகியவற்றுக்காக உழைத்துவரும் தலித்முரசு போன்ற ஏடுகள் தடையின்றி வெளிவரத் துணைபுரியுங்கள். தலித் விடுதலை என்ற நோக்கில், கபாலிக்கு டிக்கட் எடுப்பவர்கள் முதலில் தலித்முரசுக்கு ஒரு ஆண்டுக்கட்டணத்தைக் கட்டிவிட்டு, டிக்கட் எடுங்கள். அதுதான் நேர்மை.

dalitmurasu@gmail.com,
https://www.facebook.com/dalit.murasu

இளங்கோவன் பாலகிருஷ்ணன்



# நொரநாட்டிய அப்பா

குடும்ப வாழ்க்கையும், குழந்தை வளர்ப்பும் கணக்குப் பாடம் அல்ல. ஒன்றும் ஒன்றும் இணைந்தால் இரண்டு மட்டும்தான் என்று உரத்து உறுதிப்படுத்துவதற்கு. உண்மையில் அவை ஒரு கலை. அக்கலையில் ஒன்றும் ஒன்றும் இணைந்தால் இரண்டுக்கும் மிகுதியென்றே ஆகப் பெரும்பாலும் அமைந்திருக்கும்.

இந்த உண்மை தெரியாதவர்கள்தான் குடும்ப வாழ்க்கை இப்படி மட்டும்தான் அமைந்தாக வேண்டும் குழந்தை வளர்ப்பு அப்படி மட்டுந்தான் அமைந்தாக வேண்டும் என்று நொரநாட்டியம் பண்ணுவார்கள். அந்த நொரநாட்டிய வகையில் வந்திருக்கும் படம் தான் இயக்குனர் சமுத்திரக்கனியின் அப்பா.

மருத்துவம் பெரும்பாலும் வணிகமயமாகி விட்டது. பணத்தைக் கறக்கும் உத்தேசத்தில் அவசியமே இல்லாமல் சிசேரியன் பண்ணுவது பரவலாகிவிட்டது. ஆனால் அதற்காக மருத்துவத் துறையில் மனிதர்களே இல்லை என்ற முன்முடிவுதான் இயக்குனருக்கு போலிருக்கிறது. எனவேதான் மருத்துவச்சி உதவியே இல்லாமல் தன்மனைவி குழந்தை பெற்றாக வேண்டும் என்று வீம்பு பண்ணுகிறார்.

ஒரு புள்ளைத்தாச்சிப் பெண்ணுக்கு பிரசவ வேதனையுடன் குழந்தையைப் பெறுவதா - அல்லது வேதனையில்லாமல் சிசெரியன் மூலம் குழந்தை பெற்றுக்கொள்வதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு. வல்லான் வகுக்கும் வாய்க்காலாக ஒரு ஆண்- அவன் கணவனாகவே இருந்தாலும் அந்தப் பெண் மீது அவள் விருப்பத்திற்குப் புறம்பாக இரண்டில் ஏதேனும் ஒன்றைத் திணித்தாலும் அது வன்முறையே.

அந்த வகையில் இவருடைய வீம்பு மனித உரிமை மீறலேயாகும். இந்த வீம்பினால் தாய்- சேய் இரண்டு உயிரையும் பகடைக்காயாக்குகிறார். பிரசவம் என்பது இயல்பான மனித உடலியல் சங்கதிதான் என்றாலும் மருத்துவர்களின் உதவி தேவைப்படும் தருணங்களும் உண்டு. அதனை வெளியில் நின்று கைகளைப் பிசைந்து கொண்டிருக்கும் ஆண்களால் தீர்மானித்து விட இயலாது. இயக்குனர் சொல்வதை ஒருவேளை கேட்டு இனி ஆண்கள் இப்படியே அடம் பிடிப்பார்களே யானால் அதில் உயிர்ப்பலிகளுக்கு இட்டுச் செல்லும் அபாயமும் இருக்கிறது.

இயக்குனரின் - கதாநாயகரின் அப்படியான முன்முடிவு, வீம்புமே குடும்ப வாழ்க்கையில் அவர் எடுக்கும் முடிவுகளிலும் வெளிப்படுகிறது. கணவன்- மனைவி இருவரும் சேர்ந்தே இருவரையும் பாதிக்கும் பொதுவான குடும்ப விசயங்களை- முடிவுகளை எடுக்க வேண்டும். மாறாக கணவனோ - மனைவியோ தனக்குச் சரி எனப்படும் சங்கதியை தனது இணையரின் மீது திணிப்பது குடும்ப வன்முறையாகும்.

கணவன் - மனைவி இருவரில் ஒருவர் செய்வது நூறு சதவீதம் சரியானதும், இன்னொருவர் செய்வது நூறு சதவீதம் தவறானதுமாக இருந்தாலும் கூட குடும்ப பொது விசயங்கள் இரண்டு பேரையும் அணைத்தபடி ஐம்பது சதவீத சரி- தவறுகளுடன் பயணப்படுவதே நல்ல குடும்பத்திற்கான அழகாகும்.

அதை விட்டு விட்டு ஒருவர் பிரிந்து போனாலும் பரவாயில்லை. நான் முடிவெடுப்பதுதான், சொல்வது தான் நடந்தாக வேண்டும் என நினைப்பதும், செயல்படுவதும் குடும்ப அடாவடியின் வகையில்தான் வரும். அதை ஆண் செய்யும் போது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாகவும் அடையாளம் காணப்படும்.

**ஒரு சுயமுயற்சிப் படம் ஒன்றில் குழந்தைக்கு பெயர் வைக்கும் நிலையில் தன் குலதெய்வத்தின் பெயரை மகனுக்கு வைக்கிறாராம்.... எல்லாம் உங்கள் சாதியை ஒட்டிய குலதெய்வமே தனது சக்தியால் பார்த்துக்கொள்ளும் என்றால் என்னத்துக்கு இத்தனை சுயமெனக்கெடலும் சமூகப்புரட்சியும்..**

குழந்தையின் வளர்ப்பில் தாயின் பங்களிப்பு முக்கியமானது. தாயைப் பிரிந்து வளரும் குழந்தை கின்னஸ் ரெக்கார்டில் இடம்பிடித்தாலும் அவன், குழந்தையில் தாய்மையை இழந்த இழப்பு ஈடு செய்ய முடியாததாகும்.

அதுபோல குழந்தை வளர்ப்பில் தாயின் முடிவுகளும் முக்கியமானவையே. அவளுடைய முடிவுகளில் சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும் கூட காலப்போக்கில் அவை சீர்படுவதற்கும் மாறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஒருவேளை மாறாவிட்டாலும் பிரிந்து செல்வதால் நேரும் தாக்கத்தை விட பெரிய பாதிப்பினை அது ஏற்படுத்தப் போவதில்லை.

எனவே மனைவி பிரிந்து போனாலும் சரி அவள் சொல்வது போல வளைந்து கொடுத்து குழந்தை வளர்க்கப் போவதில்லை என்று எந்த அப்பா முடிவெடுத்தாலும் அது யாருக்கும் பலன் தராத எல்லோரையும் நிரந்தரமாக காயப்படுத்துகின்ற வீம்புக் காரியமாகவே அமைந்திருக்கும்.

மருத்துவர்கள் பெரும்பாலும் வியாபார நோக்கில் செயல்படுகிறார்கள் என்பதற்காக மருத்துவரே இல்லாமல் பிரசவம் நடந்தாகவேண்டும் என்பது எப்படி ஒரு அறிவுக்குப் புறம்பான காரியமோ அது போன்ற அறிவுக்குப் புறம்பான காரியம்தான் பெரும்பாலான தனியார் பள்ளிகள் தவறு செய்வதால் எல்லா தனியார் பள்ளிகளும் அப்படியே இருக்கும் என முடிவெடுப்பதும். அதே சமயம் அரசுப் பள்ளி என்றாலே கரிசனத்துடன் அமைந்திருக்கும் என்ற முன்முடிவும். உதாரணத்திற்கு மாற்றுத் திறனாளிச் சிறுவனுக்கு இன்னொரு சிறுவன் டாய்லெட் போக உதவுவதாகக் காட்டி அரசுப் பள்ளி என்றாலே கரிசனமும் மனித நேயமும் பொங்குவதாக நம்ப வைக்க முயன்றிருக்கிறார்.

அப்பா - காட்டும் பெண்பாத்திரங்கள் எல்லாம் வேடிக்கையானவர்கள். அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி எந்த விசயத்துக்கும் அடங்க மாட்டார்கள் - அல்லது அழுது ஆர்ப்பாட்டம் இல்லாமல் எல்லா விசயத்துக்கும் அடங்கிப் போய்விடுவார்கள். எந்த விதத்திலும் வாழ்வில் பெண்ணுக்கென்று எந்தவித சுய சிந்தனையோ, பங்களிப்போ இருக்காது என்று உறுதியாக நம்புகிறார் போலிருக்கிறது.... பாவம் அவர் பார்த்த பெண்ணுலகம் சமகால வாழ்விற்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் அப்படி அமைந்து போயிருக்கிறது.

தொலைந்து போன மகனை திருநங்கை ஒருத்தி காப்பாற்றி ஆட்டோவில் கொண்டு வந்து பத்திரமாய் சேர்க்கிறார். அத்தகைய அரிய மனித நேயக்காரியம் செய்த மனுஷியை எப்படி நடத்தியிருக்க வேண்டும் இந்த அப்பா?

இஸ்லாமியப் பெண்ணையும், அம்பேத்கர் நகர் பெண்ணையும் வீட்டுக்கு அழைத்து காபி கொடுத்தது போல் அழைத்து நன்றி பாராட்டியிருக்க வேண்டாமா? குறைந்த பட்சம் சக மனுசியாக கொஞ்ச நேரம் அவள் கூட அமர்ந்து உரையாடவாவது செய்திருக்கலாமே.... அதென்ன தூரத்தில் நின்றபடி அவர் சைகையாலேயே வாழ்த்துச் சொல்லி அப்படியே விடை பெறுவது? ஒருவேளை அந்தப் பெண் ஒரு பாலியல் தொழிலாளியாகக் கூட இருக்கட்டுமே.... அதனால் என்ன?

உன் மகனைக் காப்பாற்றி மெனக்கெட்டு நீ இருக்கும் இடம் தேடி கொண்டு வந்து பத்திரமாக ஒப்படைத்த மனுஷியை நீ நடத்தும் லட்சணம் இதுதானா? திருநங்கையர் நல்ல காரியம் செய்வார்கள் - என்ற நல்ல சங்கதியைச் சொல்ல வந்த இயக்குனர், அவர்களை பதிலுக்கு இப்படி நடத்தினால் போதுமானது என்றா உபதேசிக்க விரும்புகிறார்? படத்தில் அடிக்கடி அப்பாவால் சொல்லப்படும் ‘மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற ஈகோ பார்க்கக் கூடாது’ என்ற தத்துவம் இதற்கு மட்டும் பொருந்தாதா?

மனித வாழ்வு பல வண்ணங்களால் ஆனது. இங்கு காதலிக்காதவர், காதலிப்பவர், சேர்ந்து வாழ்பவர், திருமணம் ஆனவர், இணையைப் பிரிந்து வாழ்பவர், இழந்து வாழ்பவர், மீண்டும் இன்னொரு துணையுடன் வாழ்பவர், குழந்தை பெற்றுக் கொள்பவர், பெற்றுக் கொள்ளாதவர் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வண்ணங்களில். இதுதான் முழுமையும் நேர்த்தியுமான வண்ணம் என்று உலகில் எதுவும் இல்லை. ஒவ்வொன்றும் அவரவருக்கு பிடித்த ஒவ்வொரு அழகுமிகு வண்ணங்களே.

இதில் ஏதேனும் ஒரு வாழ்க்கை ஒருவரால் விரும்பி வாழப்படுமானால் அது அதற்கான தனித்துவம் கொண்ட அழகுடையதாகும். அப்படி எந்தவொரு வாழ்வை வாழ்வதற்கும் எல்லோருக்கும் உரிமை உண்டு. இந்த அடிப்படைப் புரிதல் இல்லாமல் திருமணம் ஆகாமல் இருப்பது ஏதோ ஒரு தாழ்வான காரியம் போல் அப்பா - படத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளது அதிர்ச்சிதரும் சங்கதியாகும்.

எல்லோரும் காலாகாலத்தில் திருமணம் பண்ணியாகவேண்டும் என்றும், திருமணம் செய்யா விட்டால் எத்தனை ஒழுக்கத்துடன் இருந்தாலும் சமூக மரியாதை கிடைக்காது என்றும் உபதேசத்தில் இறங்குவது பொதுப்புத்தியை வெளிப்படுத்தும் ஆழமில்லாத மனிதநேயமற்ற படப்பிடிப்பாய் அமைந்திருக்கிறது.

சிவப்புச் சட்டை போட்டுக்கொண்டு கல்விக்கூடங்களில் நிகழும் அநீதியை எதிர்த்துப் போராடுகிறார் அப்பா. இதனால் கம்யூனிஸ்ட்டா, நக்ஸலைட்டா என்று கேட்கப்படுகிறேன் என்றும் சலித்துக்கொள்கிறார் அந்த ஹீரோ....

ஒரு சுயமுயற்சிப் படம் ஒன்றில் குழந்தைக்கு பெயர் வைக்கும் நிலையில் தன் குலதெய்வத்தின் பெயரை மகனுக்கு வைக்கிறாராம்.... எல்லாம் உங்கள் சாதியை ஒட்டிய குலதெய்வமே தனது சக்தியால் பார்த்துக்கொள்ளும் என்றால் என்னத்துக்கு இத்தனை சுயமெனக்கெடலும் சமூகப்புரட்சியும்.... ஆழமில்லாத சிந்தனையால் மனிதனின் மொத்த நம்பிக்கையையும் கலைத்துப் போடுவதான முரண்பாட்டு நிகழ்வு அது.

சாதிப்பெயரை தன் பெயருக்குப் பின் வாலாக ஒட்டவைத்துக் கொண்டு திரியும் ஒரு சில இந்தியப்பொதுவுடமைவாதிகளின் இரட்டை வேட சமூக நேயம் பார்த்து இந்த அரைவேக்காட்டுச் சிந்தனையையும் படித்திருப்பார் போலிருக்கிறது.

சரி இப்படி கரித்துக் கொட்டிக் கொண்டே இருந்தால் எப்படி... நல்ல விசயம் ஒன்னுமே இல்லையா என்ற கேள்வி எழும்.... நிறைய இருக்கிறது... இனி அது பற்றிப் பேசுவோம்.

ஒரு ஆவணப்பட - குறும்படத்திற்கான சங்கதியை திரைப்படமாக எடுக்கும் தில் ஒரு சில இயக்குனருக்கே உண்டு. இயக்குனர் சமுத்திரக்கனி அந்த ரகம்.

இதுவே மலையாளத்திலோ, பெங்காலியிலோ வந்திருந்தால் சப்டைட்டில் வாசித்து உச்சு கொட்டு வார்கள்.... இரானியப்படம் - ஜப்பானியப் படம் என்றால் “இதனால்தான் நான் இந்தியப் படங்களையே பார்ப்பதில்லை” - என்று நெட்டி முறிப்பார்கள்.

தமிழில் வந்துவிட்டது.... பாவம் என்ன செய்யப்போகிறார்களோ..... இன்றைய பெற்றோருக்கு குழந்தைகளின் மெடிக்கல் ஷீட்டும், வெளி நாட்டுக்கல்வியும் கௌரவச் சங்கதி. அதற்காக குழந்தைகளின் குழந்தைமையை கௌரவமாக கொலை செய்யவும் தயார் நிலையில் இருக்கிறார்கள்.

இச்சூழலில், நாமக்கல் கோழிப்பண்ணைகள் போல கல்விப்பண்ணைகள் அமைத்து அங்கு மதிப்பெண்கள் ஒன்றை நோக்கியே குழந்தைகளை ஓடவைக்கும் சித்திரவதை குறித்து - சமகாலத்திய சமூக அவலம் குறித்து அறச்சீற்றம் எழுப்பியிருக்கிறது அப்பா.

குழந்தையின் சுய அறிவினை - ஆளுமையினை இலக்காகக் கொள்ளாமல் மதிப்பெண் என்ற கடிவாளத்தில் சிக்கி குதிரை ஓட்டம் ஓடிக் கொண்டிருக்கும் சமகால குழந்தை வளர்ப்பினைக் குறித்த நிஜமான கவலையுடன் கூடிய அருமையான கலைப்படைப்பு, அப்பா.

குழந்தைகளின் பல்வேறு திறன்களை கவனத்தில் கொள்ளாமல் அத்திறன்களை வளர்த்து எடுக்காமல் மதிப்பெண் எடுக்காத குழந்தைகளை எல்லாம் ‘மக்குங்க’ என அடையாளம் இடும் சமூகச் சூழலை எதிர்க்கும் காத்திரமான புரட்சிப்படைப்பு - அப்பா.

இங்கு.... ப்ராஜக்ட் என்பன போன்ற பெயர்களில் மறைமுகமாக பணம் பிடுங்கும் வேலை செய்கின்றன தனியார் பள்ளிகளில் பெரும் பகுதியினர். ரிசல்ட் காட்ட வேண்டும் என்ற விளம்பர மோகத்தில் தனியார் பள்ளிகள் சில, பாஸ் பண்ண மாட்டார்கள் என்று கருதி எளியவர்களை பள்ளியை விட்டு வெளியேற்றி கல்வி வாய்ப்பினையே மறுக்கிறார்கள் இன்னொருபுறம்.

**அப்பா - காட்டும் பெண்பாத்திரங்கள் எல்லாம் வேடிக்கையானவர்கள். அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி எந்த விசயத்துக்கும் அடங்க மாட்டார்கள் - அல்லது அழுது ஆர்ப்பாட்டம் இல்லாமல் எல்லா விசயத்துக்கும் அடங்கிப் போய்விடுவார்கள். எந்த விதத்திலும் வாழ்வில் பெண்ணுக்கென்று எந்தவித சுய சிந்தனையோ, பங்களிப்போ இருக்காது என்று உறுதியாக நம்புகிறார்**

அந்த சூழலில் சுமாரான மதிப்பெண் பெற்று தனக்குப் பிடித்தமான நீச்சல் விளையாட்டில் கின்னஸ் சாதனை நிகழ்த்துகிறான் ஒரு மாணவன். டுடோரியலில் சேர்ந்து படித்து பாஸ் மார்க் வாங்கிய இன்னொரு மாணவன் கவிதைப் புத்தகம் போட்டு சமகால கவிஞர்களிடம் பாராட்டு வாங்கும் அளவிற்கு உயர்கிறான்.

இவற்றுக்கு மாறாக மதிப்பெண்ணை நோக்கியே துரத்தப்படும் மாணவனின் அவல முடிவு பெற்றோர் எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சங்கதி ஆகும். பள்ளிப் பருவத்தில் காமமும், காதலும் இயல்பு. இதை நேர்மையாக ஒப்புக் கொள்வதற்கு முதலில் பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவம் இருந்தால் மட்டுமே இதனால் நேரும் சவால்களை பாதிக்கு மேல் சமாளித்து விடலாம்.

“திருமணம் நடக்கும் முதல் நாள் வரை தன் மகன், மகளுக்கு காமம் பற்றி எதுவுமே தெரிந்து விடக்கூடாது. ஆனால் திருமண முதலிரவு அன்றே அவர்களுக்கு காமம் பற்றி எல்லாமும் தெரிந்து விட வேண்டும்” - என்ற விசித்திர எதிர்பார்ப்பு கொண்ட அம்மா- அப்பாக்களைக் கொண்டிருக்கும் இந்த சமூகத்தில் பள்ளிப் பருவத்தில் காமம் என்ற காட்சிகள் கசப்பான உண்மையாகவே இருக்கும்.

ஏனைய சினிமாக்காரர்கள் காட்டுவது போல அந்தக் காமத்தை உணர்வுபூர்வமாய் மட்டுமே காட்டிடாமல் மென்மேலும் படிக்கவும் உயரவும் ஒருவருக்கு ஒருவர் முட்டுக் கொடுக்கும் நேர்த்தியான காமமாய் காட்டியிருப்பது அழகு.

காமம் இல்லை என்ற மறுத்தலும் இல்லாமல்... காமம்தான் எல்லாம் என்ற மிகைத்தலும் இல்லாமல்... வாழ்வின் எத்தனையோ முக்கிய சங்கதிகளில் ஒன்றாக காமமும் வந்து கடந்து போவதாய் காட்டியிருக்கும் புரிதலும், படமாக்கலும் அருமை.

இது தவிர இஸ்லாமியப் பெண் முதல் மதிப்பெண் பெறுவது, காதல் மூலம் மதத்தை, ஜாதியை உடைக்கும் முயற்சி, குழந்தைகள் என்று ஒதுக்காமல் பொறுப்புக்களை ஒப்படைக்கும் பாங்கு ஆகிய சங்கதிகள் கூடுதல் அழகானவை. எல்லோரும் பார்க்க வேண்டிய நல்ல படம் என்ற பரிந்துரையோடு...




அரசூர் அ.ப.சிவா

# மாதொருபாகனும் செயற்கைக் கருத்தரிப்பும்

இன்னிக்கு எங்க மருத்துவமனையில என தினமும் ஏதாவது ஒரு கதையை சொல்வது என் துணைவியின் வழக்கம். அன்று சொன்ன கதை. ஒரு பெண்ணுக்கு செயற்கைக் கருத்தரிப்பு செய்தார்களாம். அதாவது குழந்தை இல்லாத தம்பதிகள் பரி சோதனைக்கு வந்தால் அதில் ஆணுக்கு விந்தணுவில் உயிர் அணுக்கள் குறைவாக இருந்து பெண்ணிடம் குறை இல்லாமல் இருந்தால் பெண்ணின் கரு முட்டையை வெளியே எடுத்து அதில் ஏற்கனவே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் யாரோ ஒரு முகம் தெரியாத ஆணின் குறைபாடில்லாத விந்தணு ஊசி மூலம் கரு முட்டையில் செலுத்தி கரு உருவாக்கி மீண்டும் பெண்ணின் கருப்பையில் வைத்து விடுவார்கள்.

இதை மட்டுமே செய்யும் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் ஏராளமாக தமிழகத்தில் உள்ளன. என்ற செய்தியை பேசிக்கொண்டிருக்கும் போதே இன்னிக்கு அறிவியல் வளர்ச்சியில் இவை நடைமுறை சாத்தியமாகி இருக்கிறது. ஆனால் இச்செய்திகளை 75 ஆண்டுகளுக்கு முன்பே பேசியிருக்கிறார் பெரியார். அவர் மருத்துவரும் அல்ல, விஞ்ஞானியும் அல்ல. இவை அனைத்தும் அவர் பெண்கள் மீது இருந்த அக்கறையில் சொல்லியிருக்கிறார் எனச் சிலாகித்துக் கொண்டிருக்கும் போதே வீடு வந்தடைந்தோம்.

தொலைக்காட்சியில் அப்போது அச்செய்தி ஓடியது பொருத்தமாகவே இருந்தது. பெருமாள் முருகனின் மாதொருபாகன் நாவல் மீதான தடை நீக்கம் என்ற செய்தி அது. குழந்தை இல்லாத ஒரு பெண் குழந்தைப் பேறுக்காக வேறு ஆணை நாடுகிறாள். அது அங்குள்ள கோவில் தேர்த் திருவிழா இருட்டில் வழக்கமாக நடப்பது என்பதாக அக்கால நடை முறையை, தான் சேகரித்த ஆதாரங்களோடு அதே பகுதியில் பிறந்து வளர்ந்த இன்னும் சொன்னால் அதே சமூகத்தைச் சேர்ந்த நாவலாசிரியர் பதிவு செய்தார்.

நாவல் வெளியாகி பல வருடங்கள் கழித்து சில அரசியல் காரணங்களுக்காக அந்நாவலின் சில பக்கங்கள் கொளுத்தப்பட்டது அதன் பின் நடைபெற்ற நிகழ்வுகள் எல்லாம் அனைவருக்கும் தெரிந்ததே இன்று அறிவியல் வளர்ச்சியால் நடைபெறும் செயற்கைக் கருத்தரிப்பு ஏறக்குறைய அன்று நடைபெற்ற அந்நிகழ்வுக்கு ஒப்பானதே. என்ன அன்று கரு முட்டையை வெளியே எடுத்து ஊசி போடுவது சாத்தியமில்லை . அதனால் நேரடியாக உடலுறவு வைத்தார்கள். அதுவும் இருட்டில் ஆடவன் யார், என்ன ஜாதி என்று கூட தெரியாமல் அது போலவே இன்றும் விந்தணு கொடுத்த ஆண் யார் என்ன ஜாதி என தெரிவதில்லை.

மாதொருபாகன் நாவல் தங்களைக் கேவலப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் குறிப்பிட்ட கொங்கு வேளாளர் சமுதாயப் பெண்கள் யாரும் செயற்கைக்கருத்தரிப்பு மையத்தை நோக்கிச் சென்றதில்லையா? ஏன் கொங்கு மண்டலத்தில் செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் எதுவும் இல்லையா? செயற்கைக்கருத்தரிப்பு மூலம் பிறந்த குழந்தைகள் குறிப்பிட்ட அந்த ஜாதி அடையாளத் தோடு வாழ்வதில்லையா?

ஆண், பெண் சேர்க்கை என்பதே இல்லாமல் குழந்தை பெற்றுக் கொள்வது என்பது சாத்தியமான இக்காலத்தில் கூட மானுட வரலாற்றின் நீட்சியில் எப்போதோ நடைபெற்ற செயல் எங்கள் கேவலப் படுத்துகிறது எனச் சொல்லும் கொங்கு வேளாளக் கவுண்டர் சமூகத்தினர் ஏன் செயற்கைக் கருத்தரிப்பு மையங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழவில்லை? கற்பு என்ற பெயரில் இந்துமதம் மூளையில் ஏற்றி வைத்திருக்கும் விலங்கை உடைத்தெறியும்வரை எதுவும் சாத்தியமில்லை.

மாதொருபாகன் நாவலில் சொல்லப் பட்டதுபோல அந்தப் பகுதியில் நடைபெற்றது போன்ற சம்பவங்கள் கொங்கு வேளாளக் கவுண்டர் சமூகத்தில் மட்டுமல்ல. எல்லாச் சமூகத்திலும் உண்டு இந்தியா முழுவதுமே அனைத்து ஜாதிகளுமே கலப்பினங்களே. ஜாதி பிறப்பில் இல்லை மூளை யிலேயே உள்ளது .

எழுதி முடிக்கும் முன் அடடே என்றேன். என்னாச்சு என்றார் என் துணைவி. கடைசியில் என்னையும் சீரியசாக எழுத வைத்து விட்டார்களே...

சி.இராவணன்

# சுயமரியாதையுடன் வாழ இந்து மதத்தைவிட்டு வெளியேறுங்கள்!

## தோழர் பெரியார் நம்பி அவர்களின் நேர்காணல்

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள சாலைப்புதூர் என்ற கிராமத்தில் 23.06.16 அன்று கோவில் திருவிழா நடைபெற்றுள்ளது. அதன் ஒரு கட்டமாக அன்று இரவு ஆடல் பாடல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியைக் காண கிராமத்திலுள்ள அனைத்து ஜாதியினரும் சென்றுள்ளனர். கலைநிகழ்ச்சியைப் பார்க்க வரும் மக்கள் அமர்வதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் சாலைப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமுதாய இளைஞர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். அதற்காக அவர்கள் பிற்படுத்தப்பட்ட ஜாதியினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களுக்காக பிற்படுத்தப்பட்டோரிடம் நியாயம் கேட்ட தோழர் பெரியார்நம்பியும் கடுமையாகத் தாக்கப்பட்டார். அந்தத் தீண்டாமை வன்கொடுமை நிகழ்வு பற்றிக் கடந்த ஜூன் இதழில் செய்தி வெளியிட்டிருந்தோம். ஒட்டன்சத்திரம் பகுதியில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்துவரும் தீண்டாமை வன்கொடுமைகளுக்கு எதிராக நேரடியாகக் களத்தில் இயங்கிக்கொண்டே இருப்பவர் தோழர் பெரியார்நம்பி.



**ஒட்டன்சத்திரம் பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கடைப்பிடிக்கப்படும் தீண்டாமை கொடுமைகள் பற்றிக் கூறுங்கள்?**

ஒட்டன்சத்திரம் பகுதி முழுக்க தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்து ஆடுகிறது. தீண்டாமையின் அனைத்து வடிவங்களும் இந்தப் பகுதியில் நடைமுறையில் உள்ளன. காலில் செருப்பணிந்து செல்லக்கூடாது, சைக்கிளில் செல்லக்கூடாது, பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கக்கூடாது, தேனீர் கடைகளில் இரட்டைக் குவளை, உணவகங்களில் தரையில் அமர்ந்து உண்பது, வணிக நிறுவனங்களில் கடை வாடகைக்கு விட மறுப்பது, பஞ்சாயத்துத் தலைவர்களைத் தரையில் அமர்ந்து பணி செய்ய சொல்வது, பஞ்சாயத்து அலுவலர்கள் தரையில் அமர்ந்து பணி செய்வது என பல்வேறு கொடுமைகள் இந்த பகுதியில் உள்ளன. சில மாற்றங்கள் நடந்துள்ளன. ஆனால் பல இடங்களில் இந்தக் கொடுமைகள் உள்ளன. என்னுடைய வாழ்க்கையிலே கூட நடந்துள்ளன.

நான் முதல்முறையாக அஞ்சல் பணியாளராக புதுஅத்திக்கோம்பை என்ற பகுதிக்குச் சென்றேன். அந்தப் பகுதியில் பலவிதமான தீண்டாமைக் கொடுமைகள் நடைமுறையில் உள்ளன. அந்த ஊரில் கொங்கு வேளாளர், காப்பிலியக் கவுண்டர், பிள்ளைமார், அருந்ததியர் என, பல சமூகங்கள் உள்ளன. அந்த ஊரின் தலைவர் வெள்ளைசாமி என்பவர் ஒக்கலிகர் சமூகத்தில் பரவலாக தமிழகம் முழுவதும்

அறியப்பட்டவர். யாரும் அங்கே செருப்பணிந்து செல்ல முடியாது. நான் வேலைக்குச் செல்லும் போது எனக்கும் அந்த நிலை ஏற்பட்டது. நான் தைரியமாக அவர்களிடம் வாதம் செய்தேன்.

“நான் ஒரு அரசு ஊழியன். என்னை பணி செய்ய விடாமல் தடுத்தால் எனக்கு ஒன்றும் இழப்பு கிடையாது. அதனால் செருப்பணிந்து தான் வருவேன், உங்கள் ஊருக்கு தபால் வெண்டுமென்றால் என்னை அனுமதியுங்கள். இல்லையென்றால் நான் செல்லுகிறேன்” எனக் கூறினேன்.

அவர்கள் ஊர்கூட்டம் போட்டு இவன் தி.க கட்சியில இருக்கான், ஏற்கனவே நமது மக்கள் மீது பி.சி.ஆர். வழக்கு கொடுத்துள்ளான். இவனிடம் நாம் வீம்பு பிடிக்க வேண்டாம், இவனை மட்டும் செருப்பு போட்டு செல்ல அனுமதிப்போம்னு முடிவு செய்தாங்க.

**அரசுப் பணியில் இருந்தவர்களுக்கும் தீண்டாமைக் கொடுமைகள் இருந்தா?**

இன்று வரை அஞ்சலகப் பணியாளர்களுக்குத் தீண்டாமைக் கொடுமைகள் இருக்கின்றது. அரசு அலுவலகங்களில் அஞ்சல் துறை மட்டுமல்ல, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை, சத்துணவு, காவல்துறை என அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஒட்டன்சத்திரம் பகுதியில் தீண்டாமை உள்ளது. அதிலும் குறிப்பாக அஞ்சல் ஊழியர்களுக்கு உள்ள தீண்டாமை மிகவும் கொடுமையானது. 2009 ல் ஆனந்தவிகடனில் ஒட்டன்சத்திரம் பகுதியில் நடக்கும் தீண்டாமைகள் பற்றிச் செய்தி வெளியானது. அதில் அஞ்சலகத்தில் நடக்கும் தீண்டாமை பற்றி பதிவு செய்யப்பட்டது அதன் பிறகு ஓரளவிற்கு மாறியுள்ளது. ஜாதி வலுவாக கட்டமைக்கப்பட்டிருப்பது கிராமங்களில்தான். அதனால் கிராமப்புறங்களில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தீண்டாமை உள்ளது. இது இந்தியாமுழுவதும் உள்ளது.

அதிலும் அஞ்சல் துறையில் உள்ள தீண்டாமை வித்தியாசமானது. போஸ்ட் மாஸ்டர் தலித்துகளாக உள்ள பகுதிகளில் இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் அஞ்சலகங்களை அதிகமாக பயன்படுத்துவதே இல்லை. இதனால் வருவாய் இழப்பு ஏற்பட்டு பல அஞ்சலகங்கள் மூடும் நிலைக்கே சென்றது. போஸ்ட் மேன்களாக தலித் உள்ள பகுதிகளில் அவர்கள் சைக்கிளில் செல்லக்கூடாது, செருப்பணிந்து செல்லக் கூடாது தரையில் அமர்ந்துதான் பணி செய்ய வேண்டும் என பல கொடுமைகளை அனுபவிக்கின்றனர். ஓரளவிற்கு விழிப்புணர்வுள்ள எனக்கே இந்த நிலை என்றால் மற்றவர்களுக்கு சொல்லவா வேண்டும்?

லெக்கையன் கோட்டை என்ற பகுதியில் 30 க்கும் மேற்பட்ட தொட்டிய நாயக்கர் குடும்பம் வசிக்கிறது. அந்தத் தெருவில் தலித்துகள் வீதிக்குள்ளேயே செல்ல முடியாது. பிற்படுத்தப்பட்டவரே செருப்பணிந்து செல்ல முடியாது. ஜக்கம்மா என்ற அவர்களின் குலதெய்வம் பழிவாங்கிவிடும், பில்லியை ஏவிவிடுவார்கள், கைகால் முடக்கிவிடுவார்கள் என்ற பயத்தை ஏற்படுத்தி தங்கள் தீண்டாமையை நிலைநிறுத்திவந்தார்கள்.

அந்த ஊருக்கு நான் பணிக்குச் சென்றபின்பு முதலில் மீண்டும் ஒரு சண்டை வேண்டாம் என அந்த தெருவில் யோசித்து யோசித்து சென்றேன். அப்போது “பார் அவனே பயந்து செல்கிறான்” என மக்கள் பேச ஆரம்பித்தனர். அப்போது நான் முடிவு செய்தேன். ஜாதிக்கலவரமே வந்தாலும் பரவாயில்லை என முடிவு செய்து அந்தத் தெருவில் செருப்பணிந்து வேகமாக நடக்க ஆரம்பித்தேன். இப்போது இரண்டு ஊர்களிலும் மக்கள் செருப்பணிந்து நடக்கிறார்கள். 1992 வரை யாரும் செருப்பணிந்து வரமுடியாது.

மற்ற துறைகளைப் பொருத்த வரை வருவாய்த் துறை மிகவும் மோசமாக இருந்தது. கிராம உதவியாளராக (தலையாரி) இருப்பவர்கள் கீழேதான் அமரவேண்டும். அந்தப் பதவியில் 90% பேர் தலித்துகளாக இருப்பார்கள். அவர்கள் கீழே பாய் விரித்து அமர்ந்து எழுதுவார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் கிராம அதிகாரியைப் பார்க்க வந்தால் அவர்கள் இருக்கையில் அமர்வார்கள். ஆனால் கிராம உதவியாளராக இருக்கும் தலித்துகள் கீழே அமர்வார்கள். அவர்கள் அதை எதிர்த்து அவர்கள் எதுவும் பேசவில்லை. நாம் அரசுக்குப் புள்ளிவிவரங்களோடு தெரிவித்தபோதும் எந்த நடவடிக்கையும் இல்லை. சமீபத்தில் கிராம அரசு உதவியாளர் சங்க ஒன்றிய பொறுப்பாளர் சின்னச்சாமி பணி ஓய்வு பெற்றபோது அவருக்கு நடந்த பாராட்டு விழாவில் காட்டாறு ஏட்டின் சட்ட ஆலோசகர் தோழர் ஜெயராஜ் கலந்துகொண்டார். அந்த நிகழ்வில் டி.ஆர்.ஓ, ஆர்.டி.ஓ, தாசில்தார் என பலரும் கலந்து கொண்டனர். அந்த நிகழ்ச்சியில் ஜெயராஜ் அவர்கள் ஒட்டன்சத்திரம் பகுதியில் கிராம உதவியாளர்களுக்கு நடக்கும் தீண்டாமை பற்றி அவர் தனது கண்டனத்தை பதிவு செய்தார். அதன் பிறகு சில மாற்றங்கள் வந்துள்ளதாக தெரிகிறது. எங்கள் பகுதி கிராம உதவி அலுவலர்க்கு இருக்கை வழங்கப்பட்டுள்ளது.

சத்துணவு, மற்றும் ஊட்டச்சத்து மய்யங்களில் நிலவும் தீண்டாமை மிகவும் கொடுமையானது. ஆயா வேலையில் தலித்துகள் இருந்தால் பிரச்சனை இல்லை. ஏனெனில் அவர்கள் வேலை குழந்தைகளைச் சுத்தம் செய்வது ஆகும். ஆனால் சமையல்காரராகவோ ஊக்குனராகவோ இருந்தால் அவர்கள் சந்திக்கும் கொடுமைகள் அதிகம். தலித்துகள் மேற்கண்ட பொறுப்பில் இருந்தால் அங்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் குழந்தைகளை அனுப்புவதில்லை. ஒட்டன்சத்திரம் காவல்நிலையத்தில் 2008, 2009 களில் வேலை செய்த மகாமுனி என்கிற உதவி ஆய்வாளராக (சட்டம்-ஒழுங்கு) இருந்தவர் ஒரு தலித், அவருக்குக் கீழே வேலை செய்த பெருமாள் (வன்னியர்) என்கிற தலைமைக்காவலருக்கு பணி பிரித்து கொடுப்பது சம்மந்தமாக இருவருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டில்

பணியில் இருந்த உதவி ஆய்வாளரை நகரத்தின் மய்யப்பகுதியில், கடைவீதியில் சீருடையில் பணியில் இருந்த உதவி ஆய்வாளரை திட்டித் தாக்கினார். இருவரும் கட்டிப் பிடித்துச் சண்டை போட்டனர், அனைவரும் வேடிக்கை பார்த்தனர். யாரும் அதைத் தட்டிக் கேட்கவில்லை. சண்டையை வேடிக்கை பார்த்த யாரும் சாட்சி சொல்ல வரவில்லை. நான் சாட்சி சொல்லி வழக்குப் பதிய வைத்தேன். தலைமைக்காவலர்க்கு தண்டனை அளித்து பணி மாறுதல் செய்யப்பட்டார்.

**அரசு ஊழியர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் கடை நிலை ஊழியர்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைக்கொடுமைகள் பற்றி பேசியதா?**

இல்லை. இடதுசாரித் தொழிற்சங்கங்கள்கூட தீண்டாமை பிரச்சனையை கண்டுகொள்ளவில்லை. மேலும் அவர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டபோது கூட அமைதியாகத்தான் இருந்தார்கள். இந்த நேரத்தில் தான் தோழர் பெரியார் தொழிற்சங்கங்களை பற்றிக் கூறியது நினைவுக்கு வருகிறது. தொழிற்சங்கங்கள் ஊழியர்களுக்கு சம்பளம் போதவில்லை, போனஸ் போதவில்லை, விடுப்பு குறைவாக இருக்கிறது என போராடு கிறார்களே ஒழிய மானத்தைப் பற்றியோ, சுய மரியாதையைப் பற்றியோ அவர்கள் கவலைப்படுவ தில்லை. தொழிற்சங்கம் என்பது சங்கத் தொழிலாக உள்ளது என்றார். இன்றைக்கும் அதேநிலைதான் நீடிக்கிறது. யாரும் அரசு ஊழியர்களுக்கான தீண்டாமை, வன்கொடுமை பற்றிப் பேசுவதில்லை.

**அரசு அலுவலகம் அல்லாமல் மற்ற இடங்களில் நடை பெறும் தீண்டாமைக் கொடுமைகள் பற்றி கூறுங்கள் .**

ஒட்டன்சத்திரம் பகுதிகளில் அனைத்து இடங்களிலும் தீண்டாமைத் தலைவிரித்து ஆடுகிறது. தேனீர்க்கடைகளில் 147 ஊர்களில் 200க்கும் மேற்பட்ட கடைகளில் இரட்டைக்குவளை முறை நடைமுறையில் உள்ளது. பொருளூர் என்ற ஊரில் 3 டம்ளர் முறை உள்ளது. கிராமங்களில் உள்ள அனைத்து உணவகங்களிலும் தீண்டாமைக் கடைப்பிடிக்கப் படுகிறது. உணவகங்களில் சரிக்குச் சரியாக அமர்ந்து உண்ண முடியாமை, பொதுஇடங்களைப் பயன் படுத்த முடியாமை, பேருந்து நிறுத்தங்களில் சமமாக அமர முடியாது, தனிச்சுடுகாடு, கோவில் திருவிழாக் களில் பங்கேற்க முடியாமை, பொதுச்சாவடிகளில் அமர முடியாது, பொது நிகழ்ச்சிகளில் இருக்கையில் அமர முடியாமை, 100 நாள் வேலைத்திட்டங்களில் பாகுபாடு என அனைத்து வடிவங்களிலும் தீண்டாமை தலைவிரித்து ஆடுகிற ஒரு பகுதியாகும்.

இரட்டைச் சுடுகாடுகளை அரசே கட்டிக் கொடுக்கிறது. அனைத்துக் கிராமங்களிலும் அரசு நிதியிலே தனி சுடுகாடு கட்டப்படுகிறது. ரிசர்வ் பஞ்சாயத்துக்களில் தலைவராக வரும் தலித்துகள் அனுபவிக்கும் கொடுமைகள் மிகமிகக் கொடுமையானது. அவர்கள் இருக்கைகளில் அமர முடியாது. துணைத் தலைவர் தலைவர் போல நடந்து கொள்வார். சிந்தலப்பட்டி, வாகரை, அப்பனூத்து, இன்னும் நிறைய பஞ்சாயத்துகள் உள்ளன.

**கம்யூனிஸ்ட்டுகளின் அலட்சியம்**

கேதையறும்பு பஞ்சாயத்துத் தலைவர் ஒரு கம்யூனிஸ்ட் அவருக்கே பல தீண்டாமைக் கொடுமைகள் நடைபெறுகிறது. ஒட்டன் சத்திரத்திலே மிகப்பெரிய ஜாதி வெறியரான லெக்கையன்கோட்டை பஞ்சாயத்துத் தலைவர் பூபதி இவருக்கு நற்சான்றிதழ் கொடுப்பார்.

எப்படி எனில் “அவன் ரெம்ப நல்லவண்டா, நாம உக்காரச் சொன்னாலும் உக்கார மாட்டான், தண்ணீரை ஊற்றச்சொல்லித்தான் குடிப்பான்” என்று ஜாதித் திமிரோடு பதில் சொல்லுவார். கேதையறும்பு பஞ்சாயத்துத் தலைவருக்காக இதுவரை கம்யூனிஸ்ட்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அத்திக்கோம்பை பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் பேபிபெருமாள் என்பவர். அவருக்கு அடுத்து துணைத்தலைவராக இருப்பவர் தேன்மொழி குணசேகரன் என்பவர் ஆவார். தலைவர் பெயருக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் துணைத்தலைவர் பெயர் போட்டு வரும். தலைவர் தலித் என்பதால் அவருக்கு வரவேண்டிய அரசு கடிதங்கள் கூட தேன்மொழி குணசேகரன் பெயருக்கு தலைவர் என பெயர் போட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 36 ஊராட்சிகளில் 22 ஊராட்சிகளில் அருந்ததியர்கள்தான் எழுத்தர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பல பேர் கீழே அமர்ந்து எழுத்து பணி செய்கிறார்கள். அவர்களுக்கான சங்கங்கள் இந்த தீண்டாமைக் கொடுமை பற்றி பேசுவது இல்லை.

**ஃபண்டு கிராமங்கள்**

ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஜாதிக் கொடுமைகளைச் செய்வற்காக நிதி சேர்க்கப்படுகிறது, ஜாதிமறுப்புத் திருமணங்களைத் தடுப்பதற்கும், அவர்களை அடியாட்கள் மூலம் பிரிப்பதற்கும், பிரிக்க முடியவில்லை என்றால் கொலை செய்வதற்கும் அதை மறைக்க அரசு அதிகாரிகளுக்குப் பணம் கொடுக்கவும் நிதி சேகரிக்கப்படுகிறது. அதனால் இப்பகுதி கிராமங்களுக்கு ஃபண்டு (Fund) கிராமங்கள் என்றே பெயர் உள்ளது.

**பண்ணை அடிமைகள்**

விவசாய நிலங்களுக்கு வேலைக்குப் போகிற வர்கள் அனுபவிக்கும் தீண்டாமைக் கொடுமைகள் அளவுக்கு அதிகமானது. விவசாயக்கூலி என்று சொல்லுவதை விட பண்ணை அடிமைகள் என சொல்லலாம். இப்போது சில மாறுதல் வந்துள்ளது. ஆனால் எனக்குத் தெரிய நானே பண்ணை அடிமை யாகச் சென்றுள்ளேன். எனது அண்ணனுக்குத் திருமணம் ஆன போது அவருக்குப் பதிலாக நான் பண்ணை அடிமையாகச் சென்றுள்ளேன்.

24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைக்க

வேண்டும். ஆடு மாடுகளுக்கு அமைக்கப்பட்டுள்ள மாட்டு கொட்டகையில் படுத்து கொள்ளவேண்டும். காலையில் 4 மணிக்கு மேல் எழுந்திருத்து வேலை செய்ய ஆரம்பித்தால் இரவு 8 மணி வரை வேலை செய்ய வேண்டும். அதற்குக் கூலி ஆண்டுக்கு 2, 3 மூடை சோளம் கொடுப்பார்கள். பண்டிகைக் காலங்களில் மீந்து போன உணவு, கெட்டுப்போன உணவு எனக் கொடுப்பார்கள். வேலைக்குப் போகும் பெண்கள் பாலியல் தொல்லைக்கும் ஆளானார்கள். பெண்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவு. ஆண்களுக்கு 5 ரூபாய் என்றால் பெண்களுக்கு 1.75 ரூபாய் ஆகும். பண்ணையில் அடிமையாக இருப்பவர்கள் திருமணம் ஆகிவிட்டால் தங்கள் மனைவிகளை நிலவுடமையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். அதை ஒரு விழாவாகவே நடத்துவார்கள். இந்த நிலை 1985 காலங்களில் மாறுகிறது. உணவுப்பயிரிலிருந்து, பணப்பயிருக்கு மாறும் போது பண்ணை அடிமை முறை மாறியது. ஆனால் அதற்குப் பின்பும் குறைந்த கூலி, தீண்டாமைக் கொடுமை என எதுவும் குறையவில்ல.100 நாள் வேலைத் திட்டம் இந்த மக்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஆகும்.

கந்து வட்டியில் மக்கள் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள், கோவில் திருவிழாக்களை ஒட்டி பணம் வாங்குகிறார்கள், பணம் செலுத்து வதற்காக கடுமையாக உழைக்கிறார்கள், கட்ட முடியாத போது வட்டி கொடுத்தவர்கள் ஜாதி வெறியோடு திட்டுவது, பாலியல் சுரண்டல்கள் என பல கொடுமைகள் நடைபெறுகிறது. அரசு கந்து வட்டியை ஒழிக்க சட்டம் போட்டாலும் நடை முறையில் இல்லை. மக்களும் தங்களுடைய மூடநம்பிக்கைகளை கை விட்டால்தான் இந்த கொடுமையிலிருந்து மாற முடியும். மைக்ரோ பைனான்ஸ் என்ற பெயரில் பெரிய தொழில் அதிபர்கள் மக்களைச் சுரண்டுகிறார்கள்.

**திருவிழாக்களில் தீண்டாமை**

திருவிழாக்களில் தீண்டாமை அதிகம். பறை அடித்தல், தெருக்கூட்டுவது, கழிவுகளைச் சுத்தம் செய்வது என அனைத்து விதமான இழிவுகளைச் செய்ய வேண்டும். அவர்கள் வீடுகளில் போய்ச் சாப்பாடு வாங்குவது என பல அவமானங்கள் நடக்கும். எங்கள் பகுதித் திருவிழாவில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றாகச் சாமி கும்பிடுவார்கள். ஆனால் சக்கிலியருக்கு மட்டும் அனுமதி கிடையாது. இதில் பள்ளர்களை மட்டும் தனியாக அழைப்பார்கள். அம்பிளிக்கை அருகில் அம்மன் தேர் எங்கள் பகுதிக்கு வர வேண்டும் என்று கேட்ட இளைஞர்களை காவல் நிலையத்தில் வைத்தே 4 நாட்கள் கடுமையாகத் தாக்கினார்கள், அனைத்து அருந்ததிய மக்களும் காலில் விழுந்து மன்னிப்பு கேட்ட பின்பு விடுதலை செய்தனர். இதை முன்னின்று நடத்தியவர் அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆவார்.

**காய்கறி மார்க்கெட்டில் கொத்தடிமைகள்**

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் நடக்கும் கொடுமை மிகவும் கொடியது. அங்கு அனைவருக்கும் சங்கம் உள்ளது. முதலாளிக்கு, தரகர்களுக்கு, லாரி டிரைவர்க்கு, கிளீனர்க்கு என அனைவருக்கும் சங்கம் உள்ளது. ஆனால் மூட்டை தூக்குபவர்களுக்கு மட்டும் சங்கம் இல்லை. ஏனெனில் 90 சதம் பேர் அருந்ததியர். அதனால் யாரும் சங்கம் வைக்க முடியாது. அதை மீறி முயற்சி செய்தால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். 300க்கும் மேற்பட்ட கடைகளில் வேலை செய்யும் லோடுமேன் யாருக்கும் அமைப்பு சாரா தொழிலாளர் வாரியத்தில் பதிவு இல்லை. இதுவரைக்கும் 10க்கு மேற்பட்ட தொழிலாளி பணியின்போது இறந்திருப் பார்கள். அவர்களுக்கு எந்த இழப்பீடும் கிடையாது. நகரங்களில் யாருக்கும் கடை கொடுக்க மாட்டார்கள்.

**இந்து இயக்கங்கள் இந்துக்களுக்காக போராடுவதாக கூறுகிறார்களே இந்த தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்களா?**

தீண்டாமைக் கொடுமைகளுக்குப் பாதுகாப்பு அரணாக இருப்பவர்களே, இங்குள்ள இந்து இயக்கங்களின் மாவட்ட நிர்வாகிகள்தான். இங்கு மதமும் ஜாதியும் கைக்கோர்த்து கொள்கிறது. அப்பாவி தலித் இளைஞர்களை ஏமாற்ற வேண்டு மென்றால் அவர்கள் "இந்துக்களே ஒன்று படுங்கள்" என்று கூறலாமே தவிர களத்தில் ஒன்றும் செய்ய வில்லை. இந்து அமைப்புகள் ஒரு இடத்தில் தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்த வரலாறே இல்லை. ஜாதியும் தீண்டாமையும் தான் இந்து மதம்.

**இந்த ஜாதி – தீண்டாமைக் கொடுமைகளை மாற்ற ஒட்டன்சத்திரம் பகுதியில் வேலை செய்தவர்கள் யார்?**

**ஜேக்கப் செரியன், ஜேக்கப் தரியன்**

1960 களில் கிறித்துவ நிறுவனங்கள் செய்த வேலையை நாம் நினைவு கூரவேண்டும். பெரிய நிறுவனம் எதுவும் செய்யவில்லை. இரண்டு தனி நபர்கள் செய்த வேலை மிகவும் முக்கியமானது. ஜேக்கப் செரியன், ஜேக்கப் தரியன் என இரு கிறித்துவர்கள் ஒரு தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து வேலை செய்தார்கள். ஜேக்கப் தரியன் ஒட்டன்சத்திரத்தை மட்டும் மய்யமாக வைத்து வேலை செய்தார்கள். டாக்டர் செரியன் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களை மய்யமாக வைத்து வேலை செய்தார்கள். மதத்தைப் பரப்ப வந்தாலும் மனிதநேயம் அவர்களிடம் இருந்தது. தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக தலித்துகள் இருப்பதால் அவர்கள் மத்தியில் வேலை செய்தனர்.

தலித்துகளின் உணவு முறை, கெட்டுப்போன உணவு, சுகாதாரமில்லாமை என பல காரணங்களால் தலித்துகளை அதிகமாகப் பாதித்தது. எனவே அவர்களை மய்யமாக வைத்து வேலை செய்தார்கள். அப்படிச் செய்யும் போது அவர்களுக்குக் கல்வி விழிப்புணர்வு தேவை என முடிவு செய்து அம்பிளிக் கையில் ஒரு பள்ளியை ஆரம்பித்தார். அதில் தலித் மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இந்தப் பகுதியில் அதிகம் அவருடைய சாந்தி நிகேதன்

பள்ளியில் படித்தவர்கள் தான். நல்ல கல்வி மக்களுக்கு கிடைத்தது. ஒரு கலைக்கல்லூரியையும் ஆரம்பித்தார். தொழுநோய் ஒழிப்புக்கு என்று வந்த தொகை 90 லட்சத்திற்கு மேல் வந்ததைக் கல்விக்குச் செலவு செய்தார் அதிலும் தலித் மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். பள்ளியை அரசு உதவி பெறும் பள்ளியாக மாற்றினார்.

கீரனூர், வாடிப்பட்டி பகுதியில் அரசிடம் பேசி புறம்போக்கு நிலங்களைக் கேட்டு வாங்கி ஒவ்வொரு தலித்துக்கும் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என பிரித்துக் கொடுத்து அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தினார். பெத்தேல்புரம் என்ற பகுதியை மலைப்பகுதியில் உருவாக்கி அருந்ததிய மக்களுக்கு வீடுகட்டிக் கொடுத்து அவர்களுக்கு நிலம் கொடுத்தார். இன்று அந்த பகுதியில் பணப்பயிர் விளையும் இடமாக உள்ளது. அவர் செய்த உழைப்பு நான்கு தலைமுறை பாதுகாக்கப் பட்டது. அவர் இருக்கும் வரை பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தார். 2014 ல் இறந்தார்.

**பெரியார் தொண்டர் ரங்கசாமி**

எங்கள் பகுதியில் தையல் தொழிலாளியாக இருந்த ரங்கசாமி என்பவர் பெரியார் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு சுயமரியாதை கொள்கைகளை மக்களிடையே பரப்புகின்றார். பள்ளர், மற்றும் அருந்ததிய மக்கள் இழிவு வேலைகளைச் செய்யக்கூடாது எனச் சொல்லி அவர்களை தடுக்கிறார். இதனால் பிற்படுத்த மக்களிடையே எதிர்ப்பு வருகிறது. பின்னாளில் ஊராட்சி மன்றத் தலைவராக வந்த பிறகுதான் எங்கள் பகுதிக்குக் குடிநீர் என்ற அடிப்படை வசதி கிடைத்தது. அதற்கு முன்பு தோட்டங்களில் காத்திருந்து அவர்கள் ஊற்றும் போது பிடிக்க வேண்டும். சாக்கடை, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தார். மேலும் ஒரு தோட்டத்தை உருவாக்கி அதில் கிணறு வெட்டி தலித் இளைஞர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கிறார். அதற்கு முன் பிற்படுத்தப் பட்டவர்களின் தோட்டங்களில் உள்ள கிணறுகளில் தலித்துகள் இறங்க முடியாது. இதனால் இவரை இவர் சார்ந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் ஊர் விலக்கம் செய்தனர்.

**திராவிடர் கழகம்**

நான் வெறும் கடவுள் மறுப்பாளராக தி.க வுக்கு வந்தேன். எனக்கு, பெரியாரை அறிமுகம் செய்தவர்கள் வெறும் கடவுள் மறுப்பாளராகத் தான் அறிமுகம் செய்தனர். தோழர் தாமரைக்கண்ணன் அவர்களின் தொடர்பு ஏற்பட்ட பிறகு, எங்களுக்குள் நாங்கள் செய்த விவாதங்கள் ஜாதிஒழிப்பு நோக்கி எங்களைத் தள்ளியது. பெரியார் என்றாலே ஜாதி ஒழிப்புக்கான தலைவர் தான் என உணர்ந்தோம். நான் அமைப்பில் உள்ள போது 1988-ல் ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தேன். தோழர் எம்.ஏ. கிரிதரன் கலந்து கொண்டார். மாட்டுச்சந்தைக்குப் பெயர் பெற்ற இந்த ஊர் ஆன்மீகத்தலம், எனவே இங்கே கடவுள் இல்லை என்பது போன்ற கூட்டத்தை நடத்தக்கூடாது என ஊரே திரண்டு 300 க்கும் மேற்பட்ட மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து கையில் பயங்கர ஆயுதங்களுடன் ஊர்வலம் வந்தனர். நாங்கள் காவல்துறை உதவியுடன் பொதுக்கூட்டத்தை நடத்தினோம்.

அங்கே எனக்கு பொதுக்கூட்டம் நடத்த உதவியாக இருப்பவர் தி.முக வைச் சேர்ந்த ரங்கசாமி என்பவர், பெரியார் தலைமையில் மறுமணம் செய்து கொண்டவர். அவர் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் என்னிடம் நீ ஒரு எஸ்.சி. என்பதால் தான் இவர்கள் மிரட்டுகிறார்கள். இவர்கள் மீது பி.சி.ஆர். சட்டத்தில் கேஸ் கொடு என்றார். எனக்கு பி.சி.ஆர். என்றாலே என்னவென்று தெரியாது. நான் மற்றவர்கள் முன்பு பொதுஇடத்தில் பொதுக் கூட்டத்தில் சேர் போட்டு உட்கார்ந்ததுதான் காரணம். எனவே நானும் 7 பேர் மீது வழக்கு கொடுத்தேன். மறுநாள் வரச்சொன்னார்கள். நானும் தோழர் தமிழ்த்தென்றலும் சென்றோம். எனக்கு எதிராகச் சாட்சி சொல்ல எங்கள் உறவினர்கள் இரண்டு லாரி நிறைய அழைத்து வரப்பட்டார்கள். அவர்கள் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றார்கள். நான் வழக்குப் பதிவு செய்ய முடியுமா? இல்லை எங்கள் தலைவர் வீரமணி அவர்களிடம் சொல்லி மேலே பார்த்துக் கொள்ளவா? எனக் கேட்டேன். அதன் பின்பு வழக்குப்பதிவு செய்யப் பட்டது. அவர்கள் சமாதானமாகப் போகலாம் என்று என்னிடம் மன்னிப்பு கேட்டார்கள். அதன் பிறகு எனக்குப் பெரிய தைரியம் வந்தது. அதுதான் நான் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக நடந்த முதல் நிகழ்வு.

என்னுடைய அஞ்சலக வேலையே ஒரு பெரியார் தொண்டர் நல்லை அழகுபண்டியன் என்பவர் பரிந்துரையில் கிடைத்ததுதான். அந்த வேலையில் இருக்கும் போதுதான் இரண்டு கிராமங்களில் செருப்பணிந்து செல்லும் உரிமையை நிலை நாட்டினோம்.

100 க்கும் மேற்பாட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்துள்ளோம். அவற்றில் சில பயங்கர வன்முறையில் முடிந்துள்ளன. ஒரு திருமணத்திற்கு பழனி தோழர்கள் பெண்ணை அடைத்துவைத்துதள்ள வீட்டை முற்றுகையிட்டு அடித்து மிரட்டி பெண்ணை மீட்டு திருமணம் செய்தனர். மற்றொரு திருமணம் அன்றைய அமைச்சர் மடத்துக்குளம் சி.வி.சண்முகவேலு உறவுப்பெண். 100க்கும் மேற்பட்ட அடியாட்களுடன் வந்து காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அதனையும் மீறித் திருமணம் நடந்தது. இதனை ஒட்டி ஜூ.வி. யில் செய்தி வந்தது. பல எதிர்ப்புகளையும் மீறிப் பல்வேறு திருமணங்கள் நடந்துள்ளது. அனைத்திற்கும் திராவிடர் இயக்கங்களும், இந்தப் பகுதியின் திமுகவை சேர்ந்த அண்ணன் மோகன் அவர்களும் ஆதரவாக இருந்தனர்.

பெரியார் திராவிடர் கழகம்

தோழர் கொளத்தூர் மணி தலைமையில் செயல்படும் போது இரட்டைக்குவளை மற்றும் தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டியலெடுக்கத் தலைமைக் கழகம் வலியுறுத்தியதைத் தொடர்ந்து ஒட்டன்சத்திரம் பகுதியில் நிலவும் அனைத்து வடிவமான தீண்டாமைக்கொடுமைகள் பட்டிய லிட்டு, கடையின் பெயர், நடத்துபவர் பெயர், தெரு, ஊர் என 200க்கும் மேற்பட்ட தேனீர்க்கடைகள், முடிதிருத்தகங்கள், உணவகங்கள், இரட்டைச் சுடுகாடு, அலுவலகங்களில் தரையில் அமர வைப்பது என அனைத்தும் பட்டியலிட்டு பெரியார் முழக்கத்தில் வெளியானது. அந்தப் பட்டியலின் பிரதியை பெற்று தோழர் எவிடன்சு கதிர் அவர்களும் களத்தில் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டார்.

அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. தமிழகத்தில் இரட்டைக்குவளையே இல்லை என டி.ஜி.பி. அறிக்கை வெளியிட்டார். அடுத்த அறிக்கையில் சமத்துவத் தேனீர் விருந்து நடத்த நிதி ஒதுக்கி செய்தி வெளியிட்டது. அரசிடம் பேச்சு வார்த்தையின் போது நீங்கள் நடவடிக்கை எடுங்கள் இல்லை என்றால் உடைப்போம் என அறிவித்தோம். திட்டமிட்டபடி ஒட்டன்சத்திரம் பகுதியில் தேனீர்க் கடைகள் உடைக்கப்பட்டன. 500க்கும் மேற்பட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டத்தில் ஆதித்தமிழர் பேரவையைத் தவிர வேறு எந்த தலித் அமைப்பும் கலந்து கொள்ளவில்லை. நமது பட்டியலும், போராட்டமும் உச்சநீதிமன்றம் வரை சென்றது. முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மார்கண்டேய கட்ஜூ தனது தீர்ப்பு ஒன்றில் நமது பட்டியலை மேற்கோள் காட்டி தீர்ப்பளித்தார். ஆனந்தவிகடனில் வெளியான கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**அரசு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சனையில் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

தீண்டாமை வழக்குகள் முறையாகப் பதிவு செய்ய வேண்டும். அரசு தீண்டாமைக் கொடுமைகள் ஒழிய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த வடிவத்தில் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டாலும் கடைப்பிடிப்பவர்கள் மீது அவர்களின் வாழ்வாதார உரிமைகளான வாக்களிக்கும் உரிமை, ரேசன் கார்டு ஆகியவற்றை பறிக்க வேண்டும். தீண்டாமையை கடைப்பிடிக்கும் வணிக நிறுவனங்களின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும். ஒரே சாதிக்குள் திருமணங் களைத் தடைசெய்யவேண்டும். சாதிக்கலவரத்தைத் தூண்டும் ஊர் திருவிழாக்களைத் தடை செய்ய வேண்டும். ஒரே சாதிக்குள் வரன் தேடும் நிறுவனங் களைத் தடை செய்ய வேண்டும். தனிச்சுடுகாடு முறையைத் தடைசெய்து மின்மயானங்களை மூன்று ஊராட்சிகளுக்கு ஒரு மின்மயானத்தை உருவாக்க வேண்டும்.

இந்தப் பகுதியில் தொழிற்சாலைகளை உருவாக்கி அனைத்து பிரிவினருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அரசு நிவாரணங்கள் தலித் மக்களுக்குச் சரியாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஆதிக்கம் நிறைந்த பகுதியில் தாழ்த்தப்பட்டவரையே காவல்துறை அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் 25 சதவித இடஒதுக்கீட்டை நிரப்புவதில் தலித் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை 200 நாட்களாக மாற்ற வேண்டும். அரசு அலுவலகங்களில் கடைப்பிடிக்கப் படும் தீண்டாமையைக் கண்டு கொள்ளாத அரசு தலைமை அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்ய வேண்டும். சாதி மறுப்புத் தம்பதியினரின் வாரிசு களுக்கு இடஒதுக்கீடு வழங்கவேண்டும்.

**அரசியல் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?**

அரசியல் கட்சிகள் தங்களை ஆதிக்க சாதிகளின் பிரதிநிதியாகத்தான் காட்டிக் கொள்கிறார்கள். இந்தப் போக்கு மாற வேண்டும். இங்கு கம்யூனிஸ்ட்கள் கூட சாதிப் பிடியில் சிக்கியுள்ளனர். கட்சியின் மாவட்டச் செயலாளர்களை இடஒதுக்கீடு அடிப்படையில் நிரப்ப வேண்டும். பொதுத் தொகுதியில் தலித் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி பெற வைக்க வேண்டும். சாதி ஒழிப்பு நடவடிக்கைகளில் கட்சி ஈடுபட வேண்டும். வன்கொடுமையில் ஈடுபடும் கட்சியினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சி பொறுப்பாளர்களுக்கு பெரியார், அம்பேத்கர் கருத்துக்களை வகுப்புகளாக எடுக்க வேண்டும்.


**முற்போக்கு இயக்கங்கள் என்ன செய்ய வேண்டும்?**

பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்ஸிய இயக்கத் தோழர்கள் தங்கள் இல்லங்களில் இந்து மத வாழ்வியலைக் கடைப்பிடிக்காமல் உண்மையான மதச்சார்பற்ற வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். சாதி மறுப்பு / சடங்கு மறுப்புத் திருமணங் களையே செய்ய வேண்டும். இயக்கத் தோழர்களும், தலைவர்களும் சாதிமறுப்புத் திருமணங்களுக்கே செல்வோம் என உறுதி எடுக்க வேண்டும். அதையே பரப்புரையாகவும் செய்ய வேண்டும். அரசியல் தளத்தில் சாதியற்றோர் இடஒதுக்கீடு வேண்டி போராட வேண்டும். பண்பாட்டுத் தளத்தில் இந்து ஆரியப் பண்பாட்டிற்கு எதிரான பண்பாட்டை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

**தலித் மக்கள் என்ன செய்ய வேண்டும்?**

தலித் மக்கள் நம்மை இழிவு செய்யும் இந்து மதத்தை புறக்கணிக்க வேண்டும். தோழர் அம்பேத்கர் மதம் மாறிய போது வெளியிட்ட 24 கட்டளைகள் அனைத்தையும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். சுயமரியாதையோடு வாழவேண்டும். யாரிடமும் பணிந்து பேசக் கூடாது. குறிப்பாக இந்து மதத்தை விட்டு வெளியேறி சுதந்திர மனிதர்களாக வாழ வேண்டும். பெரியார், அம்பேத்கர் கொள்கை களை கடைப்பிடித்தால் விடுதலை உணர்ச்சி தானாக பீறிட்டுக்கிளம்பும்.

பொள்ளாச்சி சி.விஜயராகவன்



# கல்வி வள்ளல் காமராஜர்

## பன்முகத்தன்மை

திராவிடர் இனப் பெருமக்கள் மற்றும் காட்டாறு அறிவியல் பண்பாட்டு மாத இதழின் தொடர் வாசிப்பாளர்கள் அனைவருக்கும் வணக்கம்!. ஜூலை 15 என்பது தனிமனிதரான கல்வி வள்ளல் காமராசரின் (15.07.1903 – 15.07.2016) 114 ஆவது பிறந்தநாள் மட்டுமல்ல....!.

புராண இதிகாச காலங்களில் துவங்கி மன்னர்களின் ஆட்சிகளில் வளர்ந்து, ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைப் பிடித்து 'மெக்கலா' கல்வி முறை வருகிற வரை கடவுளின் பெயரால், மதம், மனு, கீதை மற்றும் வர்ண அடிப்படையில் 5000 ஆண்டுகள் கல்வி மறுக்கப்பட்ட சமூகமாக திராவிடர் இனம் இருந்தது.

நீதிக்கட்சி, திராவிடர் இயக்கம் தோன்றி உழைத்த உழைப்பின் பயனாக ஓர் அளவிற்குக் கல்வி உரிமையைத் திராவிடர்கள் பெற்றார்கள். இதற்காக பல்துறை தலைவர்கள் உழைத்திருந்தாலும் கலகக்காரத்தோழர் பெரியாரின் பெரும் முயற்சியில் கல்வி வள்ளல் காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆன பிறகுதான் கல்வியின் பரவலில், பெரும் புரட்சி தமிழகத்தில் ஏற்பட்டது.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள்; "ரோம் ஒரே நாளில் கட்டப்படவில்லை" (Rome Was Not Built In A Day) என்று, பல காலம் பல வகையில் முயன்றும் எடுத்துக் கொண்டு காரியத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணாமல் சோர்ந்து போகின்றவர்களைப் பார்த்து அவர்களுக்கு ஊக்கம் உண்டாக்குவதற்காக இந்தப் பழமொழியைச் சொல்வார்கள்.

தடைகள், தேக்கம், பின்னடைவு, தோல்வி, இன்னல்கள், முதலியன, சாதனையாளர்கள் எதிர்கொள்ள வேண்டியவை! எடுத்த எடுப்பிலேயே தொடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும் என எதிர்பார்க்காமல் தொடர்ந்து வரும் தொல்லைகளை வெல்லும் வகை தெரிந்து செயல்பட்டால், உரிய காலத்தில் சாதனைகளைக் காணலாம் என்பது இப்பழமொழி உணர்த்தும் பொருள்.

அந்த பொருளை வாங்கிக்கொள்ளும் பாடமாகப் பெருந்தலைவர் காமராசரின் வாழ்வு திகழ்கிறது. எதிர்ப்புகளையும் ஏளனங்களையும் தொல்லை களையும், தோல்விகளையும் படிக்கட்டுகளாக கொண்டு சாதனையின் உச்சிக்குச்சென்றவர் அவர். வாருங்கள் தோழர்களே கட்டுரைக்குள் செல்வோம்.

**பக்தனா இருக்கிறதைவிட யோக்கியனா இருக்கணும்!**

தலைவர் காமராஜ் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் வந்த நேரத்தில் ஒரு கிராமத்தில் பாழடைந்த கோவிலைப் பார்த்தார். அந்தக் கோயில் பழம் பெருமை வாய்ந்தது. ஆனாலும், சிதிலமடைந்து கிடந்தது. சுற்றுப்புற மதில்கள் உடைந்து பிரகாரம் திறந்து கிடந்தது. அங்கங்கே ஆடு மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. கோவில் கோபுரத்திலெல்லாம் மரம், செடி, கொடிகள் வளர்ந்து கிடந்தன. கோவில் குருக்கள் எப்போதாவது வந்து பூஜை செய்து மணியடிப்பார்.

சற்றும் எதிர்பாராமல் தலைவர் கோவிலுக் குள்ளே போய்விட்டார். சுற்றியிருந்த நாங்கள் அனைவரும் அவருடன் சென்றோம்.

நான் கடவுள் நம்பிக்கையில்லாத நாத்திகன் இது தலைவருக்கும் தெரியும். தலைவர் கோவில் வாசலில் இருந்த கல்வெட்டுகளையெல்லாம் துடைத்துவிட்டுப் பார்த்தார். பலிபீடம், கொடிமரம், நந்தி இருந்த இடங்களில்யெல்லாம் போய் நின்று உற்றுக் கவனித்தார். இவரது ஒவ்வொரு செய்கையும் கட்சிக்காரர்களுக்கு வியப்பாக இருந்தது. கோவிலுக்கு வந்து உள்ளே சாமி கும்பிடப் போகாமல் எது எதையோ பார்த்துக்கொண்டிருக்கிறாரே என்று மற்றவர்கள் பேசிக்கொண்டனர்.

ஆனால் எனக்கு அவரைப்பற்றி நன்றாகத் தெரியும் கோவில்களில் கொடுக்கும், பிரசாதங்களை வாங்கிக் கொள்வார். விபூதி பூசிவிட்டால் மறுக்க மாட்டார். பரிவட்டமும் கட்டிக் கொள்வார். தீபாரா தனையைத் தொட்டுக் கொள்வார்.

கோவிலை விட்டு வெளியில் வந்த மறுநிமிடமே பழம்,தேங்காய், மாலைகளை யார் பக்கத்திலிருக்கிறார் களோ அவர்களிடம் கொடுத்துவிடுவார். விபூதி குங்குமத்தை வீட்டுக்கு எடுத்துப் போகமாட்டார். கேட்டால் "கோவில்ல செய்யற மரியாதையை வாங்கிக்கணும், அதுதான் மனுச நாகரிகம், குருக்கள் அறங்காவலர், ஊர் ஜனங்க மனசு புண்படக் கூடாதில்லையா... அதுக்கு மேல அதில ஒண்ணு மில்லை" என்பார்.

தலைவர் இந்தக் கோவிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்தக் கோயிலின் குருக்களும், அறங்காவலரும் வந்துவிட்டனர். பிரகாரத்தைச் சுற்றி வந்த தலைவர், குருக்களைப் பார்த்து "இந்த கோவிலக்கட்டி எவ்வளவு காலமாச்சு?" என்றார். குருக்களும், நிருவாகிகளும் பதில் சொல்ல முடியாமல் விழித்தனர்.

"ஏன்யா.. குருக்கள்.. நீங்க எவ்வளவு காலமாக இந்தக் கோவிலுக்கு மணியடிச்சிட்டு இருக்கீங்க. இந்தக் கோவில் பத்தின தல வரலாறே உங்களுக்கு தெரியாதா..? எந்த வருஷத்து பஸ், எத்தனை கிலோ மீட்டருக்கு எவ்வளவு பெட்ரோல் ஆகும்னு தெரியாம, ஒரு டிரைவர் அந்தக் காரை ஓட்டலா மான்னேன்?" என்று காமராஜ் ஆரம்பித்ததும் குருக்கள் உள்பட எல்லோரும் ஆடிப்போனார்கள்.

தலைவர் மேலும் தொடர்ந்தார், "இந்தக் கோயிலைக் கட்டி எண்ணூத்து எழுபது வருஷத்துக்கு மேலாகுது. சோழமாவதேவி தானமா கொடுத்த இறையிலி நிலங்கள்தான் இந்தக் கோவிலைச் சுத்தி இருந்தது. இந்த ஊரும் இந்த தாலுக்காவுமே இந்தக் கோவில் சொத்துத்தான். அதிலிருந்து வர்ற வருமானத்துக்குத் தான் சாமிக்குப் பூஜை, புனஸ்காரமெல்லாம் பண்ணணும். குத்தகைதாரர்கள் அளக்கிற பகுதி நெல்லை வாங்கித்தான் சாமியாடி களுக்கும், தேவரடியார்களுக்கும், பூக்கூடையைத் தூக்குறவங்களுக்கும் சம்பளம் போடணும். சாமி நெலத்த விவசாயம் பண்ணிச் சாப்பிட்டுக் கிட்டிருக்கிற ஒருத்தனும் ஒரு பிடி நெல்லைக் கூட கோவிலுக்கு அளக்கலப் போலிருக்கு.. அதனாலதான் சாமி இருட்டில கிடக்குன்னே...! என்று காமராஜ் பேசப் பேச அத்தனைபேரும் அதிர்ந்து போய் நின்றனர். அந்தக் கோவில் சொத்தைச் சாப்பிட்டு ஏப்பம்விட்டுக் கொண்டிருந்த பெருச் சாளிகள் பலரும் அங்கே நின்று கொண்டிருந்தனர்.

தங்கள் அடிமடியில் கைவைக்கிறாரே என்று அந்தக் குத்தகைத்தார் நடுங்கிப் போயிருக்கக்கூடும். இதற்குள் குருக்கள் சிலர் வந்து பிரசாதம், பொங்கல், வடையெல்லாம் தயாரா இருக்கு என்று ஆரம்பித்தனர்.

"சாமியை இருட்டில போட்டுட்டு ஆசாமி யெல்லாம் சாப்பிட்டு கிட்டிருக்கீங்க, பொங்கல் வடை யெல்லாம் ஏழை ஜனங்களுக்கும் சேரிப்பிள்ளை களுக்கும் கூப்பிட்டுக் கொடுங்க ...!" என்று சொல்லிவிட்டு வேகமாகத் தலைவர் கோவிலைவிட்டு வெளியேறி விட்டார் அறங்காவலர் குழு திகைத்துப் போய் நின்றது.

தலைவர் அடுத்த ஊர் நிகழ்ச்சிக்குப் போவதற்காகக் காரில் ஏறினார். நானும் அவரோடு பயணம் செய்தேன், கடவுள் பற்றி காமராஜ் என்ன நினைக்கிறார்? பூஜை, வழிபாடு, நெம, நைவேத்தியங்கள் பற்றி அவரது கருத்து என்ன? இதையெல்லாம் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது என் நெடுநாளைய ஆவல். இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணி நான் தலைவரிடம் மெல்ல ஆரம்பித்தேன்.

**அதுலே என்ன பிராமணன் சூத்திரன்...? ரொம்ப அயோக்கியத்தனம்!**

கடவுள்னு ஒருத்தர் இருக்கார்னு உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

இருக்கு, இல்லைங்கிறதைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் கிடையாதுன்னேன். நாம செய்றது நல்ல காரியமா இருந்தாப் போதும். பக்தனா இருக்கிறதை விட யோக்கியனா இருக்கணும். அயோக்கியத்தனம் ஆயிரம் பண்ணிகிட்டு கோவிலுக்குக் கும்பாபிஷேகம் பண்ணிட்டா சரியாப் போச்சா..? என்றார்.

கடவுள் விஷயத்துல நேரு கொள்கையும் உங்க கொள்கையும் ஒண்ணாயிருக்கும் போலிருக்கே. என்று நான் ஆரம்பித்ததும் காமராசர் சொன்னார்:

“நேரு கடவுளைப் பத்தி கவலைப்படாதவர் தான். ஆனா.. மனிதனை முன்னேற்றனும் சமூகம் வளரணும்கறதுல அவர் கவனமாயிருந்தார். அதுக்கு மதமோ, கடவுளோ தடையாயிருந்தா அதைத் தூக்கி குப்பையில போடணும்கிற அளவுக்கு அவர் தீவிரவாதி. எப்படி யோசிச்சிப் பார்த்தாலும் சாதாரண மனிதனைக் கைதூக்கிவிடணும்கிறதத்தானே எல்லா மதமும் சொல்லுது. சமுதாயத்துல பேதம் போகணும்.. ஏற்ற தாழ்வு இருக்கக் கூடாதுங்கிறத்தானே மகான்கள் சொல்றாங்க. ஆனா இன்னிக்கு நம்ம மதங்கள் அதைப்பத்திக் கவலைப்படுதான்னேன்... ? எவன் தலையைத் தடவியாவது. எவனை அழிச்சாவது தான் முன்னேறணும்தானே ஒவ்வொரு மடாதிபதியும் நினைக்கிறான். இதுக்குக் கடவுள் சம்மதப் படுகிறாரா?” என்று கேட்டார்.

நான் உடனே “அப்படியானா ஆண்டவன்னு ஒருத்தர் இல்லேன்னுதான் நீங்களும் நினைக்கி றீங்களா..? இருந்திருந்தா இந்த அயோக்கியத் தனத்தையெல்லாம் ஒழிச்சிருப்பாரே..! தன்னோட எல்லா பிள்ளைகளையும் மேல் ஜாதி, கீழ் ஜாதின்னு படைச்சிருக்க மாட்டாரே..? என்றேன்.

மேல் ஜாதி, கீழ் ஜாதியெல்லாம் இடையிலே வந்த திருட்டுப் பயலுக பண்ணினதுன்னேன். சுரண்டித் திங்கிறதுக்காகச் சோம்பேறிப் பசங்க பண்ணின ஏற்பாடுன்னேன்.

எல்லோரும் ஆயா வவுத்துல பத்து மாசம் இருந்துதானே பொறக்கிறான். அதுலே என்ன பிராமணன் சூத்திரன்...? ரொம்ப அயோக்கியத்தனம்...!” என்றார் காமராஜ்.

எனக்குள் பெருமையும், பூரிப்பும் பிடிபட வில்லை. காமராஜரைக் கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்ய வேண்டும் போலிருந்தது. இவருக்குள் இவ்வளவு சிந்தனை ஊற்றா? இத்தனை கம்பீரமா? அடங்காத சீற்றமா? ஆத்திர நெருப்பா? அவர் பேசப் பேச நான் வானுக்கும், பூமிக்குமாய்க் குதித்தேன்.

“நீங்கள் ஏன் உங்களை ஒரு முழு நாத்திகராய் அறிவித்துக் கொள்ளவில்லை..” என்று கேட்டேன்.

நான் ஒரு சமுதாய தொண்டன் நாத்திகவாதி ஆத்திகவாதி எல்லோருக்கும் சேவை செய்கிறவன். எனக்கு எதிரே வர்ரவனை மனுஷன்னுதான் பாக்குறேனே தவிர, அவனைப் பிராமணன் சூத்திரன்னு பாக்குறதில்லை... அப்படி எவனும் என்கிட்டே பேசிகிட்டு வரவும் முடியாது.

நாத்திகவாதம்கிறது ஒரு தனி மனிதக் கொள்கை. அரசியல்வாதி பொதுவானவன், ஒரு கோவிலை நிர்வாகம் பண்ண நிதி கொடுக்க வேண்டியது அரசியல்வாதியோட கடமை. அந்தக் கோயில்ல ஆறுகால பூஜை ஒழுங்கா நடக்குதா, விளக்கு எரியுதான்னு பார்க்க வேண்டியது ஆட்சி பண்றவனோட வேலை. நான் நாத்திகவாதி எனவே கோயிலை இடிப்பேன்னு ஆட்சியிலிருக்கிற எவனும் சொல்ல முடியாது. கம்யூனிச சமுதாயத்திலே கூட கோவிலும் பூஜையும் இருக்கே. நான் பூஜை, புனஸ்காரம்னு பைத்தியம் பிடிச்சி அலையிறதில்ல: மனிதனோட அன்றாடக் கடமைகள்தான் முக்கியம்னு நெனைக்கிறவன்” என்று மிகத் தெளிவாக பேசினார்.

“அப்படின்னா நீங்க பூஜை, பிரார்த்தனை யெல்லாம் பண்றதில்லையா? என கேட்டேன்.

“அதெல்லாம் வேலை வெட்டியில்லாதவன் பண்றதுன்னேன். அடுத்த வேளை சோத்துக் கில்லாதவன், கடன் வாங்கி ஊர், ஊரா “ஷேத்ராடனம்” போறவன், எந்தக் கடவுள் வந்து நீ ஏண்டா என்னப் பாக்க வரலைன்னு இவன்கிட்டே கோவிச்சுகிட்டான்...? அபிஷேகம் பண்றதுக்காக கொடம் கொடமாப் பாலை வாங்கி வீணாக்குறானே மடையன் அந்தப் பாலை நாலு பிள்ளைங்களுக்கு குடிக்கக் கொடுத்தா அதுங்க புஷ்டியாவது வளருமால்லியா..?

“பதினெட்டு வருஷமா மலைக்குப் போறேன்னு பெருமையா சொல்றான். அதுக்காக அவனுக்கு பி.எச்.டி. யா கொடுக்கிறாங்க ..? பதினெட்டு வருஷமா கடன்காரனா இருக்கான்னு அர்த்தம். பணம் படைச்சவன் போடுற பக்தி வேஷம் சமூக அந்தஸ்துக்காக. நாலு பேர் தன்னைப் பத்திமான் பெரிய மனுஷன்னு பாராட்டணும்கிறதுக்காக. ஒரு அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்துக்கோ கொடுக்கலாமில்லியா.... ஊருக்கு நூறு சாமி ....வேளைக்கு நூறு பூஜைன்னா...... மனுஷன் என்னிக்கு உருப்படறது...? நாட்டுல வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, சுகாதாரகேடு, ஏற்றத்தாழ்வு இத்தனையும் வச்சிகிட்டு பூஜை என்ன வேண்டி கிடக்கு பூஜைன்னேன்....? ஆயிரக்கணக்கான இந்த சாமிகள் இதப்பாத்துகிட்டு ஏன் பேசாம இருக்குன்னேன்....?

**மதம் மனிதனுக்குச் சோறு போடுமா?**

தலைவர் போடு போடு என்று போட்டுக் கொண்டு வந்தார். அவருக்குள் ஆயிரம் இங்கர்சாலை, ஆயிரம் பெரியாரை நான் கண்டெடுத்தேன். “அப்படியானா நீங்க பல தெய்வ வழிபாட்ட வெறுக்கிறீங்களா? இல்ல தெய்வ வழிபாட்டையே வெறுக்கிறீங்களா...?” என்று கேட்டேன்.

அவர் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல்... “லட்சுமி, சரஸ்வதி, பார்வதி, முருகன், விநாயகர், பராசக்திங்கிறதெல்லாம் யாரோ ஓவியர்கள் வரைஞ்சி வச்ச சித்திரங்கள். அதையெல்லாம் ஆண்டவன்னு நம்மாளு கும்பிட ஆரம்பிச்சுட்டான். சுடலைமாடன், காத்தவராயன்கிற பேர்ல அந்த வட்டாரத்துல யாராவது பிரபலமான ஆசாமி இருந்திருப்பான். அவன் செத்ததும் கடவுளாக்கிட்டான் நம்மாளு. கடவுள்ங்கிறவரு கண்ண உருட்டிகிட்டு நாக்கை நீட்டிக்கிட்டுதான் இருப்பாரா? அரேபியாவில் இருக்கிறவன் அல்லான்னான், ஜெருசலத்தில் இருக்கிறவன் கர்த்தர்னான். அதிலேயும் சில பேரு மேரியக் கும்பிடாதேன்னான். கிறிஸ்துவ மதத்லேயே ஏழு எட்டு பிரிவுகளை உண்டாக்கிட்டான்.

மத்திய ஆசியாவிலிருந்து வந்தவன். அக்கினி பகவான், ருத்ரன், வாயு பகவான்னு நூறு சாமியைச் சொன்னான். நம்ம நாட்டு பூர்வீகக் குடிமக்களைத்

திராவிடர்கள், காத்தவராயன், கழுவடையான், முனியன், வீரன்னு கும்பிட்டான். எந்தக்கடவுள் வந்து இவன்கிட்டே என் பேரு இதுதான்னு சொன்னான் ..?

அவனவனும் அவனவன் இஷ்டத்துக்கு ஒரு சாமிய உருவாக்கினான். ஒவ்வொரு வட்டாரத்துல உருவான ஒவ்வொரு மகானும் ஒரு கடவுளை உண்டாக்கி, எல்லாரும் தம் கட்சியில சேரும்படியா செஞ்சான்.

காங்கிரஸ் கம்யூனிஸ்ட் - தி.மு.க மாதிரி ஒவ்வொரு மதமும் ஒரு கட்சி. யார் யாருக்கு எதிலே லாபமிருக்கோ அதுல சேந்துக்குறான்... மதம் மனிதனுக்குச் சோறு போடுமா? அவன் கஷ்டங்களப் போக்குமா...? இந்தக் குறைந்தபட்ச அறிவுகூட வேண்டாமா மனுஷனுக்கு...? உலகத்துல இருக்கிற ஒவ்வொரு மதமும் நீ பெரிசா, நான் பெரிசான்னு மோதிகிட்டு ரத்தம் சிந்துதே...! நாட்டுக்கு நாடு யுத்தமே வருதே...! இப்படியெல்லாம் அடிச்சிகிட்டுச் சாகச்சொல்லி எந்த ஆண்டவன் சொன்னான்...?"

தலைவர் காமராசர் தெளிந்த நீரோடை மாதிரி பேசிக்கோண்டே வந்தார். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஒரு அழுத்தமான முடிவை அவர் வைத்திருப்பதைப் பார்த்து நான் வியந்தேன்.

**இராமன், கிருஷ்ணன்கிறது கற்பனைக் கதா பாத்திரம்னேன்**

அப்படின்னா... உங்களுக்கு புராணம்,இதிகாசம் போன்ற விஷயங்கள்ல நம்பிக்கையோ, ஈடுபாடோ கிடையாதா...? என்று நான் கேட்டேன்.

புராணம், இதிகாசமெல்லாம் அந்தக் காலத்துல இருந்த மகான்கள் எழுதிவச்சது. அவங்களுக்கு எந்த உள்நோக்கமும் இருந்திருக்காது. பாரதம், ராமாயணத்துல பல நல்ல விஷயங்கள் மனுஷனுக்கு இருக்கு... பாவ,புண்ணியத்துக்குப் பயப்படணும். கெட்டவன் அழிஞ்சு போவான். நல்லவன் வாழ்வான்னு சொல்லப்பட்டிருக்கு.மண்ணாசை, பொன்னாசை கூடாது. அடுத்தவன் மனைவியைத் தப்பாப் பார்க்கக் கூடாதுன்னு எச்சரிச்சிருக்காங்க. ராமன் மாதிரியா ஒரு யோக்யனை சிருஷ்டிச்சு, அவனை நல்லவனுக்கு உதாரணமா காட்டியிருக் காங்க.

" நல்லதையெல்லாம் மனுஷன் எடுத்துக்கணும். அரசாங்கம் போடுகிற வெறும் சட்டதிட்டங்கள் மட்டும் மனுஷனுக்குப் போதாது. தீமையைச் செஞ்சவனுக்குச் சட்டத்துல தண்டனை உண்டு. தீமையை நெனைக்கிறவனுக்கு தண்டனை உண்டா? மனசாலேயும் தப்பு நெனக்காதேன்னு நம்ம இதிகாசங்கள் சொல்லுது?"

நான் இடை மறித்து "அந்த இதிகாசங்களிலும் பல நம்ப முடியாத விஷயங்கள், மூட நம்பிக்கைகள் மலிந்து கிடக்கே...? என்று கேட்டேன்.

உடனே அவர் "எது எது ஆகாதோ அதையெல்லாம் விட்டுவிட வேண்டியதுதான். எத்தனை ஆயிரம் வருஷத்துக்கு முன்னே எழுதி வைக்கப்பட்ட விஷயங்கள் அவை. இன்னிக்கு அதெல்லாம் அப்படியே பொருத்தமா இருக்குமான்னேன்...? சமுதாயத்துல அன்னிக்கு இருந்த நடைமுறையை வச்சி எழுதியிருப்பாங்க. சாரத்த எடுத்துக்கிட்டு சக்கையைத் தூக்கிப் போட்டுடணும்னேன்..." என்றார்.

நீங்க சொல்றதப் பார்த்தா இராமன், கிருஷ்ணனையெல்லாம் கடவுளாக்கிட்டானே... அதை ஏத்துக்கிறீங்க போலிருக்கே...?" என்று வினாத் தொடுத்தேன்.

தலைவர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். "டேய் கிறுக்கா! நான் சொல்றது ஒனக்கு விளங்கலி யான்னேன்...? இராமன், கிருஷ்ணன்கிறது கற்பனைக் கதாபாத்திரம்னேன். அதையெல்லாம் நம்மாளு கடவுளாக்கிட்டான்னேன்...! இன்னிக்கு நம்ம சினிமாவுல வர்ர கதாநாயகனுக்குக் கட் அவுட் வைக்கிறானில்லியா... அது மாதிரி அந்தக் காலத்துல கதாநாயகன் மாதிரி வருணிக்கப்பட்ட ராமனுக்கும், கிருஷ்ணனுக்கும் கோவில் கட்டிபுட்டான். அந்தப் புத்தகங்கள்ல சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களை எடுத்துக்கணும். ஆசாமிய விட்டப்புடணும்.

காலப்போக்குல என்னாச்சுன்னா... லட்சக் கணக்கான மக்கள் ராமனை, கிருஷ்ணனைக் கும்பிட ஆரம்பிச்சிட்டான்னு தெரிஞ்சதும் அவுங்களை வச்சி கட்சி கட்ட ஆரம்பிச்சிட்டான் அரசியல்வாதி. அவனுக்குத் தெரியும் ராமன் ஆண்டவன் இல்லேன்னு. ஆனா, அதை வச்சப் பொழப்பு நடத்தப் பாக்குறானுங்க களவாணிப் பசங்க... புராணங்கள்லே சொல்லப்பட்டிருக்கிற கதாபாத்திரங்கள வச்சித்தான் நம்ம ஜனங்கள அடிமையா ஆக்கி வச்சிருக்கான் நரகாசுரன் கதையை வச்சி தீபாவளி கொண்டாடுறான். நவராத்திரி கதையைச் சொல்லி சரஸ்வதி பூஜை பண்றான். விக்னேஸ்வரனைச் சொல்லி விநாயகருக்குக் கொழுக்கட்டை பண்றான். இது மாதிரி ஏற்பாடுகளை செஞ்சு ஏழை ஜனங்களையும், பாமர ஜனங்களையும் தன்னோட மதத்தின் பிடிக்குள்ளேயே வச்சிப் பொழப்பு நடத்தறான்.

நான் தீபாவளி கொண்டாடுனதுமில்ல... எண்ணெய் தேச்சிக் குளிச்சதுமில்ல... புதுசு கட்டினதுமில்ல... பொங்கல் மட்டும்தான் நம்ம பண்டிகைன்னேன். நம்ம சமூகம் விவசாய சமூகம். அது நம்ம கலாச்சாரத்தோட ஒட்டுன்ன விழான்னேன்..." என்று விளக்கினார்.

**மனிதனைச் சிந்திக்க வைக்காத எந்த விஷயமும் சமுதாயத்துக்குத் தேவையில்ல**

"மதம் என்பதே மனிதனுக்கு அபின்...! அப்படிங்கிற கருத்து உங்களுக்கும்உடன்பாடுதான் போலத் தோணுதே...!" என்று ஒரு கேள்வியைப் போட்டேன்.

தலைவர், "நான் தீமிதி, பால்காவடி அப்படீன்னு போனதில்ல. மனிதனைச் சிந்திக்க வைக்காத எந்த விஷயமும் சமுதாயத்துக்குத் தேவையில்ல. பெத்த தாய்க்குச் சோறு போடாதவன் மதுரை மீனாட்சிக்குத் தங்கத்தாலி வச்சிப் படைக்கலாமா? ஏழை வீட்டுப் பொண்ணுக்கு ஒரு தோடு மூக்குத்திக்குக் கூட வழியில்ல. இவன்

லட்சக்கணக்கான ரூபாயில வைர ஒட்டியாணம் செஞ்சி சாமி இடுப்புக்குக் கட்டி விடறான். கறுப்புப் பணம் வச்சிருக்கிறவன் திருப்பதி உண்டியல்ல கொண்டு போய்க் கொட்றான். அந்தக் காசில ரோடு போட்டுக் கொடுக்கலாம்.ரெண்டு பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கலாமில்லையா? அதையெல்லாம் செய்யமாட்டான். சாமிகுத்தம் வந்திடும்னு பயந்துகிட்டு செய்வான். மதம் மனிதனை பயமுறுத்தியே வைத்திருக்குதே தவிர, தன்னம்பிக்கையை வளர்த்திருக்கா? படிச்சவனே அப்படித்தான் இருக்கான்னேன்...”என்றார்.

“கோவில், பிரார்த்தனை, நேர்த்திக்கடன் கழிக்கிறதுன்னு எதாவது நீங்க செஞ்ச அனுபவமுண்டா...? அதிலிருந்து எப்போ விலகுனீங்க...? இது நான்.

“சின்னப் பையனா இருந்தப்போ விருதுநகர்லே பத்ரகாளியம்மன் கோவில் திருவிழா நடக்கும். அந்தக் கோயில் சிலைக்கு ஒரு நாடாரே பூஜை செய்வார். அதிலே நான்கலந்துகிட்டிருக்கேன்.1930க்கு முன்னாலே சஞ்சீவரெட்டியோட திருப்பதி மலைக்குப் போனேன். அவர் மொட்டை போட்டு கிட்டார். என்னையும் போட்டுக்கச் சொன்னார். நானும் போட்டுகிட்டேன். அப்புறம் யோசிச்சுப் பார்த்தேன். இதெல்லாம் வேலையத்த வேலைன்னு தோணிச்சு. போயும்,போயும் கடவுள் தலைமுடியைத் தானா கேக்குறாரு... எல்லாம் பார்பர்ஷாப் காரன் செட்அப். அப்படீன்னு சிந்திச்சேன் விட்டுட்டேன். ஆனா சஞ்சீவரெட்டி அதை விடல்ல. அடிக்கடி மொட்டை போடுவார்.

தலையில் இருக்கிற முடியை எல்லாரும் கொடுப்பான். ஆண்டவனுக்காகத் தன்னையே கேட்டா கொடுப்பானா...? என்று கேட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார்.

“அப்படின்னா... மனிதர்களுக்கு வழிபாடு, பிரார்த்தனை முக்கியம்னு சொல்றாங்களே... அதப்பத்தி...?”என்று கேட்டேன்.

“அடுத்த மனுஷன் நல்லாருக்கணும்கிறதுதான் வழிபாடு. ஏழைகளுக்கு நம்மாலான உதவிகளைச் செய்யணும்கிறதுதான் பிரார்த்தனை. இதுல நாம சரியா இருந்தா, தெய்வம்னு ஒண்ணு இருந்தா அது நம்ம வாழ்த்தும்னேன்...! காமராஜ் என்கிற அந்த மனிதாபிமானி என் மனத்தில் அந்த நிமிடமே சிம்மாசனம் போட்டு உட்காருகிறார்.

சட்டென்று காரை நிறுத்துகிறார். வழியில் காலில் செருப்போ மேலுக்கு சட்டையோ இல்லாமல் நடந்துபோன சிறுவர்களைப் பார்த்து, “ஏன் பள்ளிக் கூடம் போகலியா...?” என்கிறார். அவர் இவ்வளவு நேரம் பேசிய பேச்சின் விளக்கம் எனக்குக் கிடைத்துவிடுகிறது.

இந்நிகழ்வைச் சொன்னவர் தோழர். சீர்காழி பெ.எத்திராஜ். தமிழக முன்னாள் மேலவை உறுப்பினர். இக்கட்டுரைக்கு உதவிய தோழர் வீரபாண்டியன் எழுதிய ‘ஆகட்டும் பார்க்கலாம்’ என்ற நூலுக்கு ‘காட்டாறு’ நன்றிகள்.

## திராவிடர் கழகத்தின் குற்றாலம் பயிற்சிப் பட்டறை

திராவிடர் கழகம் கடந்த 38 ஆண்டுகளாகப் புதிய இளைஞர்களுக்கான பயிற்சி வகுப்பைக் குற்றாலத்தில் நடத்திவருகிறது. 39 வது ஆண்டாக இந்த 2016 ம் ஆண்டு ஜூலை 2 முதல் 5 வரை குற்றாலம் வி.கே.என் கட்டிடத்தில் வகுப்பு நடத்தப்பட்டது.

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், துணைத்தலைவர் கலி.பூங்குன்றன், பொதுச்செயலாளர்கள் அன்புராஜ், துரை.சந்திரசேகரன், தி.க மாநில மாணவரணிச் செயலாளர் பிரின்ஸ், பேராசிரியர் காளிமுத்து, பேராசிரியர் நீலகண்டன் உள்பட பலரும் இந்த முகாமில் வகுப்புகளை நடத்தினர். காட்டாறு குழு தோழர் தி.தாமரைக்கண்ணன் 03.07.16 அன்று வேத எதிர்ப்பு வரலாறு என்ற தலைப்பில் வகுப்பு நடத்தினார். 150 க்கும் மேற்பட்ட மாணவர்களும், 50 க்குமே மேற்பட்ட பெரியவர்களும் இந்த முகாமில் பங்கு பெற்றனர்.புதிய மாணவ, மாணவியர் ஏராளமாகப் பங்கேற்றது குறிப்பிடத்தக்கதாகும். 200 தோழர்களை நான்கு நாள் தங்க வைத்து, உணவளித்து, பயிற்சி நடத்துவது என்பது மிகவும் மலைப்பான காரியம். ஏற்பாடு செய்த தோழர்களுக்கும், பணியாற்றிய தோழர்களுக்கும் வாழ்த்துக்கள்.

## வங்கி அலுவலர்களுக்கான பயிலரங்கம்

Union Bank OBC Welfare Association என்ற வங்கி அலுவலர்கள் அமைப்பு 2016 ஜூலை 9, 10 ஆகிய தேதிகளில் மாமல்லபுரத்தில் சமூகநீதிப் பயிலரங்கை நடத்தியது. திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் இந்தப் பயிலரங்கைத் தொடங்கி வைத்தார்.

முதல்வகுப்பாக ஆசிரியர் வீரமணி அவர்கள், ‘தமிழ்நாட்டு முன்னேற்றத்தில் திராவிடர் இயக்கத்தின் அடிப்படை’ என்ற தலைப்பில் 2 மணி நேரம், ஏராளமான வரலாற்றுத் தகவல்களோடு வகுப்பு நடத்தினார்.

பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை காட்டாறு குழு தோழர். தி.தாமரைக்கண்ணன், ‘வேத எதிர்ப்பு அமைப்பு களின் எழுச்சியும், வீழ்ச்சியும்’ என்ற தலைப்பில் வகுப்பு நடத்தினார். மாலை 6 மணிக்கு திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் அவர்கள் நீதிக்கட்சியின் சாதனைகளை விளக்கி கருத்துரையாற்றினார்.

மறுநாள் தமிழ்நாட்டு முன்னாள் திட்டக்குழுத் தலைவர் பேராசிரியர் நாகநாதன் அவர்கள் பெரியார், காமராசர் மற்றும் நீதிக்கட்சித் தலைவர்களின் பணிகளையும், மருத்துவர் எழிலன் அவர்கள் மூடநம்பிக்கைகள் பற்றியும் விரிவான, விளக்கமான தகவல்களோடு உரையாற்றினர். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து Union Bank OBC Welfare Association என்ற அமைப்பிலுள்ள மாவட்டப் பொறுப்பாளர்கள் இப்பயிலரங்கில் பங்கு பெற்றனர். அதன் தலைவர் தோழர் கருணாநிதி அவர்கள் காலத்திற்கேற்ற மிகச்சரியான பணியைத் தொடங்கியிருக்கிறார். வாழ்த்துகள்.



# கங்கை நீர் வாங்கலியோ வாங்கலியோ!

'புனித கங்கை நீர்' என்று சொல்லி மத்திய அரசுக்குச் சொந்தமான அஞ்சல் அலுவலகங்களில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப் பட்டுள்ள விஞ்ஞான மனப்பான் மையை வளர்க்க வேண்டும் என்ற சரத்துக்கு விரோதமாக மத்திய அரசே முன்வந்து இத்தகைய ஏற்பாடுகளைச் செய்வது வெட்கக்கேடும், வேதனையுமாகும். நோய்க் கிருமிகளின் சாக்கடையாக விளங்கும் கங்கை நீரை விற்பது மக்கள் நலனுக்குக் கேடாக, ஓர் அரசே செயல்படுவதாகும்.

**மருத்துவக் குழு ஆய்வு அறிக்கை என்ன கூறுகிறது?**

மும்பையைச் சேர்ந்த மருத்துவக் குழு ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. அக்குழுவில் இடம்பெற்ற டாக்டர் ஜெகன் நாத் கீழ்க்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

பீகார், உத்தரப்பிரதேச மாநிலங்களில் மட்டும் ஆண்டு ஒன்றிற்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான மக்கள் பித்தநீர்ப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட் டுள்ளனர். மும்பையில் டாடா நினைவு மருத்துவமனையில் பித்த நீர்ப்பை புற்றுநோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட நோயாளிகளில் பெரும்பாலோர் பீகார், உத்தரப்பிரதேச மாநிலங் களின் கங்கைக்கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த வர்கள் ஆவார்கள்.

கங்கையில் நச்சுக்கலவைக் கழிவுநீர் அதிகம் கலப்பதால் கங்கை நதிக்கரையில் உள்ள நிலத்தடி நீரும் கடுமையாக மாசுபட்டுள்ளது. அந்த நிலத்தடி நீரில் அளவுக்கு அதிகமான இரும்புக்கழிவும், மற்ற நச்சுப் பொருள்களும் மலிந்துள்ளன என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

**எய்ட்ஸ் நோய் தொற்றுகிறது**

சுவிட்சர்லாந்து அரசு ஓர் ஆய்வு நடத்தி உலக சுகாதர நிறுவனத்திடம் சமர்ப் பித்தது. அதில், அய்ரோப்பிய நாடுகளில் போதைப்பொருள் பயன்பாட்டிற்குக் கடுமையான தடைவிதிக்கப் பட்டிருப்ப தால், ஆன்மீகப் பயணம் என்ற பெயரில் பல அய்ரோப்பிய இருபால் இளைஞர்கள் வட இந்திய நகரங்களான வாரணாசி, அரித்துவார், ரிஷிகேஸ், அலகாபாத் போன்ற நகரங்களுக்கு வந்து, கடவுளின் பிரசாதம் என்று கருதப்படும் கஞ்சா உடன் அபின், ஹெராயின் மற்றும் சரஸ் போன்ற போதைப் பொருள்கள், போதை ஊசிகள் தங்குதடையின்றி சாமியார் மடங்களில் கிடைக்கின்றன.

போதை ஏறிய பிறகு பாதுகாப்பற்ற உறவு கொள்கிறார்கள். இதனால் புனித கங்கை ஓடும் பகுதிகளில் வாழ்வோரிடையே எய்ட்ஸ் நோய் தொற்றியவர்கள் எண்ணிக்கை அதிகம். இது உலக சுகாதார நிறுவனம் அதிகார பூர்வமாக வெளியிட்ட செய்தியாகும்.

கங்கை நீரில் குரோமியம் கலந்திருந்ததாக அய்தராபாத்தில் உள்ள அணுசக்தி தேசிய மய்யத்தின் பொருள்கள் இயைபு குண நலப்படுத்துதல் மய்ய அறிக்கை தெரி வித்துள்ளது. நச்சுத்தன்மை நிறைந்த குரோ மியம் கங்கை நீரில் - அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் 50 மடங்கு அதிகமாக இருந்ததாக என்சிசிஎம் தலைவர் டாக்டர் சுனில் ஜெய்குமார் தெரிவித்துள்ளார்.

**புற்றுநோய் வரும் – எச்சரிக்கை**

மேலும், இதில் காணப்படும் நச்சுத் தன்மையானது புற்றுநோய் உள்பட பல உடல்நலக் கேடுகளை ஏற்படுத்தும் வல் லமை கொண்டது என்றும் கூறியுள்ளார். மக்களின் நலனைக் காப்பது அரசின் கடமையில்லையா? மதக் கிறுக்கேறி சாக்கடைத் தண்ணீரைப் புனித நீர் என்று கூறி அஞ்சல் அலுவலகம் மூலம் விற்பது விவேகமான செயலா? மதச்சார்பற்ற அரசு என்பதன் இலட்சணம் இதுதானா? மக் களிடம் விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்கவேண்டியது ஒவ்வொரு குடி மகனின் கடமை என்று இந்திய அரசமைப்புச் சட்டம் கூறுகிறதே (51ஏ-எச்) அதனையும் கங்கைச் சாக்கடையில் வீசியெறிந்து விட்டார்களா? ஏற்கெனவே மாட்டு மூத்திரத்தை அரசு அலுவலகங் களில் கிருமி நாசினியாக பயன்படுத்த வேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட் டுள்ளது.

போகிற போக்கைப் பார்த்தால் மாட்டு மூத்திரம், சாணி,பால், தயிர், வெண்ணெய் இவற்றை ஒன்று சேர்த்து பஞ்ச கவ்யம் என்று பரிதாபத்துக்குரிய பக்தர்களை தட்சணை பெற்றுக்கொண்டு குடிக்க வைக்கிறார்களே - அந்தப் பஞ்ச கவ்யத்தை பாட்டிலில் அடைத்து அரசு மருத்துவமனைகளில் விற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நன்றி: மின்சாரம் – விடுதலை – 16.07.2016

தாராபுரம் பூங்கொடி




# பெண் விடுதலையின் முதல் எழுத்து

**ஒரு ஆணுக்கு ஒரு சமையல்காரி, ஒரு ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி - ஒரு ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை, ஒரு ஆணின் கண் அழகிற்கும், மனபுளகத்திற்கும் ஒரு அழகிய அலங்காரிக்கப் பட்ட பொம்மை என்பதெல்லாமல், பெண்கள் பெரிதும் எதற்குப்பயன் படுகிறார்கள்.?, பயன்படுத்தப் படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.**

**- குடி அரசு 21.9.46**

சில நாட்களுக்கு முன்னால் பணம் செலுத்துவதற்காக தேசியமயமாக்கப் பட்ட வங்கி ஒன்றிற்க்குச் சென்றேன். காலை நேரம் என்பதால் சற்று கூட்டத்துடன் வங்கி பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. நானும் எனக்குரிய வரிசையில் போய் நின்றேன். சற்று நேரம் கழித்து நான் பணம் செலுத்தும் முறை வந்தது எனக்கு முன் ஒரு ஆண் பணத்தை செலுத்தி விட்டு அதை புத்தகத்தில் வரவு செய்வது சம்பந்தமாக வங்கி அதிகாரியிடம் ஏதோ வாக்கு வாதத்தில் இருந்தார். நானும் என்னவென்று சற்று என் காதைத் தீட்டிக் கொண்டு (நமக்குத்தான் அடுத்தவர் விடயம் என்றால் அலாதிபிரியமாச்சே) கேட்டேன்.

அப்போது அந்த நபர் தன்னுடைய மனைவியின் சேமிப்புப் புத்தகத்தில் மனைவியின் முதல் எழுத்தை அப்பா பெயருக்கு பதிலாக தன்னுடைய பெயரை போட்டிருப்பதாகவும் மாற்றித் தரும்படி கேட்டார். அதற்கு அந்த அலுவலர் (ஒரு பழைய பஞ்சாங்கம்) அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, எல்லாம் சரியாத்தான் இருக்கிறது. கணவர் பெயரைத் தான் போடவேண்டும் என்றார்.

அதற்கு அந்த நபரும் விடாமல் திருமணத்திற்குப் பின் கணவர் பெயரைத்தான் போடவேண்டும் எந்த G.O வும் இல்லாதபோது ஏன் என்னுடைய பெயர் முதல் எழுத்தாகப் போட்டீர்கள் என்று வாதிட்டும் மேலும் இது சம்பந்தமாக ஒன்றிரண்டு பேர் சேரவும், அந்த அதிகாரியும் வேறு வழியில்லாமல் ஏதோ அப்பாவின் முதல் எழுத்தைப் போட்டால் அந்த வங்கியே இரண்டாகப் பிளந்து பூமிக்குள் போய் விடுவதைப் போல் அந்த நபரை ஒரு பார்வை பார்த்து, முணங்கிக்கொண்டே மாற்றிக்கொடுத்தார். வந்தவரும் நினைத்ததை அடைந்த மகிழ்ச்சியில் கிளம்பி விட்டார். நமக்குத் தான் ஒரு குழப்பமான மன நிலை.........???

தன் மனைவிக்குத் தன்னுடைய முதல் எழுத்தைப் போடச் சொல்லாமல் அந்தப் பெண்ணின் தகப்பனாரின் முதல் எழுத்தைப் போடச் சொன்னதை எண்ணி நாம் மகிழ்ச்சி அடைந்தாலும், அந்த முடிவு அவரின் சிந்தனை மாற்றமா? அல்லது பின்னால் ஏற்படும் நிர்வாக கோளாறு காரணமா? ஏனென்றால் அவரின் மனைவி வேலைக்குச் செல்பவராக இருந்து, அவரின் ஓய்வுக்குப் பிறகு வரும் பலன்களை அனுவிப்பதில் சிக்கல் ஏற்படும் என்றும் நினைக்கலாம். பரந்த மனப்பான்மை உள்ளவராக இருந்தால் வங்கிக் கணக்கு துவங்கும் போதே விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்திருக்கலாம். மேலும் இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட பெண்ணே வங்கிக்கு வந்து கையாண்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

திருமணமாகி வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்களது அப்பாவின் முதல் எழுத்தைத் தான் பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பிரச்சனை திருமணமாகி வேலைக்குச் செல்லாமல் வீட்டில் அடிமைகளாக வாழும் பெண்களுக்குத் தான். இவர்கள் தான் காலம் முழுவதும் கணவரின் முதல் எழுத்தைப் போட்டுக் கொள்வதோடு மட்டுமில்லாமல்,குடும்பத்தின் ஆயுட்கால அடிமையாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தப் பெண்களின் அனைத்துவிதமான அடையாளங்களிலும் (ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வங்கிப் புத்தகம்) கணவரும் அவர்களின் முதல் எழுத்தும் தான் இருக்கும். நூறு நாள் திட்ட வேலைக்குச் செல்லும் பெண்கள் மற்றும் முதியோர் உதவித்தொகைப் பெறும் பெண்கள், தவிர வீட்டில் இருக்கும் நிறைய படித்த மனைவிமார்களுக்கு வங்கிக் கணக்குக் கூட இல்லை என்பது தான் வருத்தமான செய்தி.

இந்தச் சமூகத்தில் திருமணமான பெண்கள், ஏன் கணவனை இழந்தப் பெண்களை விட, கணவனை விட்டுப் பிரிந்து குழந்தைகளுடன் தனித்து வாழும் பெண்களின் நிலைமை தான் மிகவும் கொடூரமானது. கணவனே வேண்டாம் என்று வந்தாலும் அந்தப் பெண்ணையும், குழந்தையும் அந்த முதல் எழுத்து எப்போதும் விடுவதாக இல்லை. மாற்றிக் கொள்ள சட்டத்திலும் இடமில்லை. சமூகத்தின் அத்தனை வினாக்களும் அந்த முதல் எழுத்தையே நோக்கியே இருக்கும்.

மறக்க வேண்டும் என்று நினைக்கின்ற வாழ்வின் அந்த மோசமான பகுதியை இவர்களின் கண்முன்னே காட்சியாய் வந்து நிறுத்திக் கொண்டே இருக்கும். இதைத் தான் இந்தச் சமூகமும் விரும்புகிறது. இந்த நடைமுறைக்கு பயந்துதான் சில பெண்கள், கணவன் எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும் கூட அவனுடனே சேர்ந்து வாழத் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். பெண்ணைப் பெற்ற பெற்றோரும் தங்கள் பெண்களை நிர்ப்பந்திக்கிறார்கள்.

### தாயின் பெயருடைய முதல் எழுத்து நமக்கான Initial

என்னைப் பொருத்தவரை பெண்களுக்குத் தீர்வாக இருப்பது, தங்களின் முதல் எழுத்து கணவருடையதோ? அல்லது அப்பாவினுடையதோ அல்ல, ஏனென்றால் இருவரும் ஆண்கள் தான். மேலும் அப்பாவின் முந்தைய கதாபாத்திரம் கணவர் தானே!. ஆகையால் பெண்கள் இந்தச் சமூகத்தில் தனித்துவமாக வாழத் தேவையானது அம்மாவின் முதல் எழுத்து தான். அது தான் பாதுகாப்பாகவும் இருக்கும். அம்மாவின் பெயரை முதல் எழுத்தாக வைத்தால் தான், நம் 'ஈரோட்டுக் கிழவன்' சொன்னது போல் இவன் இன்னாருடைய கணவன், இவன் இன்னாருடைய மகன் என்ற நிலைமை மாறும். பெண்களுக்கான அடிமை விலங்கும் உடைபடும்.

ஆதி காலத்தில் பெண்கள் தான் குடும்பத் தலைவராகவும், குடும்பத்தை வழி நடத்திச் செல்பவராகவும் இருந்திருக்கிறார்கள். தாய் வழிச் சமூகமாக இருந்த காலத்தில், கூட்டமாக ஆண்கள் விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருக்க, பெண்கள் தான் குழுவுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று, குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் தனித் தனி வேலைகளைப் பிரித்துக் கொடுத்து, தலைமைப் பொறுப்பைச் சிறப்பாக நடத்தி வந்தனர்.

வேட்டையாடும் சமூகமாக இருந்தவர்கள், மெல்ல நதிக்கரை நாகரீகத்திற்கு வந்து விவசாயத்தில் ஈடுபட்டு ஒரே இடத்தில் தங்கவும் செய்கிறார்கள். அப்போதும் பெண்கள் தலைமையில் கீழ் தான் ஆண்கள் காவல், மற்றும் கால் நடை பராமரிப்பு பணியைச் செய்து வந்தனர். பெண்கள் பயிர் பராமரிப்பு, விளைந்த பொருட்களை பிரித்துக் கொடுப்பது ஆகிய பொறுப்புகளை வகித்துவந்தனர். மண் பயிரையும் பெண் உயிரையும் விளைவிப்பதால் இரண்டையும் மதிக்கும் இனமாகத் தான் ஆண் சமூகம் இருந்து வந்தது.

நீண்ட காலமாக ஒரே இடத்தில் வசித்ததால் நிலத்தை தன் சொந்த நிலமாகப் பாவித்தார்கள். அதே போல் பெண்கள் தாய்மையடைந்த காலத்தில் ஓய்வுக்காகவும், பிள்ளை பிறப்புக்காகவும், ஆண்களின் பாதுகாப்பில் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர். நாளடைவில் அந்த பிள்ளைகளை வளர்ப்பதற்கும் பெண்கள் வீட்டில் நிரந்தரமாக அடைத்து வைக்கப்பட்டனர். பெணகளைப் பாதுகாக்கவும், மற்றும் நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் ஆண்களின் வசம் மாறியது.

தலைமைப் பொறுப்பின் மூலம், தனக்குக் கிடைத்த சமூக அந்தஸ்து, வசதி, மரியாதை இவையனைத்தும் வாரிசு என்ற அடிப்படையில் ஆண் குழந்தைகளுக்குத் தான் என்று முடிவெடுத்து, தனக்குத் தெரிந்த அனைத்து திறமைகளையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, பெண்களைத் தனிமைப் படுத்தினார்கள். அதுவரை சமுதாயத்தை உருவாக்கிய பெண்கள் சமுதாயத்திலிருந்து விலகி வீட்டுக்குள் அடங்கும் சூழல் ஏற்பட்டது.

மொழித்திறன், ஆளும் திறன், சூழ் நிலையைக் கையாளுதல் போன்ற பன்முகத் திறமை கொண்ட பெண்களுக்கு மீண்டும் இவை எதுவும் கிடைக்காமல் பார்த்துக் கொண்டது. இதனால் வேறு வழியின்றி பெண்களும் ஆண்களையே நம்பியே வாழ்ந்து வந்தார்கள். பவுத்தம் பரவிய காலத்தில் பெண்களின் நிலை சற்று முன்னேறியது. ஆனால் மீண்டும் வேத காலத்தில் பெண்கள் முழு அடிமையாக மாற்றப் பட்டார்கள். ஆண் சொல்லைக் கேட்காமல் நடக்க மறுப்பவர்கள் அடங்காப் பிடாரிகளாக சித்தரிக்கப் பட்டு ஆணுக்கு அடங்கி நடப்பேதே நல்ல பெண்ணுக்கு அழகு என்று மூளைச் சலவை செய்யப்பட்டது. பெண்கள் விலங்கினும் கீழாய் நடத்தப் பட்டார்கள்.

காலப் போக்கில் உலங்கெங்கும் நடந்த பல போராட்டங்கள் மூலமாகவும், குறிப்பாக பெண்களால் பெண்களுக்கு நடந்த போராட்டங்கள் மூலம், பெண் இனம், சற்று விடுதலையடையத் தொடங்கியது. தமிழகத்தில் பெண் கல்வியும் அறிவும் பெற்று, சுயமரியாதையுள்ளவளாக மாற பெரிதும் காரணமாக இருந்தவர், அந்தப் பெண்களாலேயே பெரியார் என்று பாசத்தோடு அழைக்கப்பட்டவர் எங்கள் அறிவு ஆசான் தந்தை பெரியார்.

இதன் தொடர்ச்சி 25-ஆம் பக்கம்

பிரபாகரன் அழகர்சாமி

# பிராய்லர் கோழி உண்போம்!

பிராய்லர் கோழிக்கறி தின்னாதீங்க நாட்டுக்கோழியின் கறிதான் நல்லது என்கிற பிரச்சாரம் ரொம்பகாலமாக நம்மவூர்ல நடக்குது. அதுலயும் நம்ம ஊர்ல இப்ப இயற்கை ஆர்வலர் அப்படிங்கிற பெயர்ல பழமைவாதிகள் எண்ணிக்கையும் ரொம்ப பெருகிடுச்சு. ஜாதிக் கட்சி நடத்துறவன்ல இருந்து போலி டாக்டர் வரைக்கும் எல்லாருக்கும் இந்த இயற்கை ஆர்வலர் முகமூடி நல்லா செட் ஆகுது.

பிராய்லர் கோழி திங்கிறதாலதான் நம்ம நாட்டுல இப்பல்லாம் 9 வயசுலயே பொண்ணுங்க வயசுக்கு வந்துடுறாங்க. அப்படின்னு கிளப்பிவிட்டாப் போதும் நம்ம ஆளுங்களைப் பயமுறுத்துவதற்கு...பிராய்லர் கோழிகளுக்கு அவை சீக்கிரம் வளர்வதற்காக ஹார்மோன் ஊசிகள் போடப்படுகின்றன என்று நீண்ட நாட்களாக ஒரு குற்றச்சாட்டு கூறப்படுகிறது. ஆனால் சமீபகாலமாக பிரபலமாகிவரும் பேலியோ டயட்டைப் பின்பற்று வரும் குழுவினர் இதை மறுக்கிறார்கள்.

“கோழிகளுக்கு ஹார்மோன் ஊசிகள் போடுகிறார்கள் என தவறான தகவல்கள் செய்திகள் பரப்பப்படுகிறது; ஹார்மோன்கள் என்பது பெப்டைட் எனப்படும் புரதம்; அது எந்த உடலுக்குள் போனாலும் உடனடியாக உடம்பு ஒரு விதத் தற்காப்பு முறையைக் கையாளும்; அப்போது உடலில் எதிர்ப்பு சக்தி குறைந்து அதிகரிக்க ஆரம்பிக்கும். அதற்கு, குறைந்தது 14 நாட்கள் ஆகும்; இப்படி இருக்கும் பட்சத்தில் 40 நாள் வளர்க்கப்படும் கோழிகளுக்கு எப்படி அந்த ஊசியை போட முடியும்?;



மேலும் முக்கியமான உண்மை என்னவென்றால், கறிக்கோழி மற்றும் முட்டைக் கோழி இரண்டுமே தன் உற்பத்திகளை எதிர்ப்பு சக்திகளை (Immunity) வைத்தே நடக்கிறது. எதிர்ப்பு சக்தி குறையும் போது கோழிகளின் உற்பத்தி குறையும். மேலும் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் போது உற்பத்தியும் அதிகரிக்கும்; ஹார்மோன் ஊசி போட்டால் எதிர்ப்புச்சக்தி குறையும்; கோழிகள் இறந்து விடும்.”

என்று தெரிவிக்கின்றனர். அவர்களது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்ற முகநூல் குழுவிலும் சில கால்நடை மருத்துவர்கள் இதைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

2015ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 80 சதவீத மக்கள் புரதச்சத்துக் குறைபாடு கொண்டிருக்கின்றனர். அதிலும் மரக்கறி உணவுமட்டுமே உண்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம்.

புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளில் முதன்மையானவை மாமிச கறிகள், குறிப்பாக மாடு, ஆடு, மீன், கோழி, முட்டை ஆகியவை. மரக்கறி (Vegetarian) உணவுகளில், குறிப்பாக பருப்பு வகைகள்.

இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் மாட்டுக்கறியும் பன்றிக்கறியும் உண்பதில்லை. இறைச்சிக்காக மாடு,பன்றி வளர்க்கும் தொழிலும் இந்தியாவில் அதிகம் இல்லை. ஆடு, மீன் கறிகளின் விலையும் சாமானிய மக்களின் வாங்கும் சக்திக்குள் இல்லை. தற்போதைய பருப்பு விலையும் அப்படிதான்.

இந்த நிலையில் நமக்கு கிடைத்திருக்கும் முக்கியமான உணவு, இறைச்சிக்காக வளர்க்கப்படும் பிராய்லர் கோழிகள்தான்.

2012 கணக்குப்படி, அமெரிக்காவில் சராசரியாக ஒருவர் ஆண்டொன்றுக்கு 50 கிலோ கோழி இறைச்சி உண்கிறார். எல்லாம் ப்ராய்லர் கோழிதான். இதுதவிர மாடு, பன்றி, வான்கோழி, மீன் மற்றும் பல வகையான மாமிச உணவு வகைகளைத் தின்று ஆரோக்கியமாக வளர்கிறார்கள் அமெரிக்கர்கள். இந்தியாவின் நிலைமையோ மிகவும் பரிதாபம். இந்தியாவில், சராசரியாக ஒருவர் ஆண்டொன்றுக்கு 2.4 கிலோ கோழிக்கறி மட்டுமே உண்கிறார்.

இந்த இலட்சணத்தில், ப்ராய்லர் கோழி திண்ணாதீர்கள் என்று பிரச்சாரம் செய்பவர்களைச் சமூகவிரோதிகள் என்றுதான் சொல்லமுடியும். ஒருவேளை பிராய்லர் கோழியை உண்ணாதீர்கள், அதற்குப் பதிலாக மாட்டுக் கறியையோ, பன்றிக்கறியையோ உண்ணுங்கள், இறைச்சிக்காக மாடு, பன்றி வளர்க்கும் தொழிலை வளர்க்கவேண்டும் என்று சொன்னால்கூட அவர்களை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.. ஆனால் பெரும்பாலான பிராய்லர் எதிர்ப்பு இயற்கை ஆர்வலர்கள், மாட்டுக்கறி விசயத்தில் கள்ளமவுனம் காப்பவர்கள்தான் என்பதை கவனிக்கவும்!

**பிராய்லர் கறி உண்போம்...**
**மாட்டுக்கறி உண்போம் ..**
**வலிமையான ஆரோக்கியமான**
**மக்கள் சமூகம் படைப்போம்!**



சேவூர் கு.செந்தில்குமார்

# தீண்டாமையிலிருந்து விடுதலையடைந்த நாடார் ஜாதியினர் தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் மீது நடத்திய வன்கொடுமை

தமிழ்நாட்டில் மேற்கு மாவட்டங்களில் தொடர்ந்து ஜாதி, தீண்டாமை வன்கொடுமைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இடைநிலை ஜாதிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமை வன்கொடுமைகளை நிகழ்த்தி வந்தார்கள். ஆனால் இப்பொழுது, கடந்த நூற்றாண்டில் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபட்ட நாடார் ஜாதியைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட சக்கிலியர் சிறுவர்கள் இருவரை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

ஈரோடு மாவட்டம் கோபி அருகே கோட்டுப் புள்ளாம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மகேஸ்வரன் 5-ம் வகுப்பும், தாமோதரன் 6-ம் வகுப்பும் படித்துவருகிறார்கள் அருகில் உள்ள நைனாம்பாளையத்தில் இராஜேந்திரன் என்பவர் 15 வருடமாக மளிகைக் கடை நடத்தி வருகிறார். 18.06.2016 அன்று காலை 11.30 மணியளவில் மகேஸ்வரனும் நண்பர் தாமோதரனும், இராஜேந்திரனின் கடையில் ஜூஸ் குடித்துவிட்டு, தவறுதலாகப் பணம் தராமல் சென்றதால் இராஜேந்திரன் அவர்களைக் கடைக்குள் அழைத்துச் சென்றுள்ளார். அங்கு இராஜேந்திரனின் பெரிய மகள் மரியா வசந்தி மற்றும் இளைய மகள் மரியா அந்தோணி லிசியா ஆகிய இருவரும் சிறுவர்களது கன்னம், தலை மற்றும் காதில் ரத்தம் வரும் வரை கொலை வெறியுடன் அடித்து உதைத்துள்ளனர்.

அது மட்டும் இன்றி, தகாத வார்த்தைகளால் திட்டியும் உள்ளனர். இரண்டு சிறுவர்களும் காதிலும் வாயிலும் ரத்தம் ஒழுக வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இதைப்பார்த்த மகேஸ்வரனுடைய அப்பா சுந்தரம் (எ) மோகன சுந்தரம் தாமோதரனுடைய அப்பா பொன்னுச்சாமி இவர்கள் இருவரும் மளிகைக் கடைக்காரர் இராஜேந்திரனிடம் போய் எங்கள் குழந்தைகளை ஏன் அடித்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் ஜூஸைக் குடித்துவிட்டு பணம் கொடுக்காமல் சென்றதால் அடித்தேன் என்று சொல்லித் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதுபோன்ற தாக்குதலில் ஈடுபடுபவர்கள் பற்றி விடுதலைச்சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் அவர்களிடம் தலித்துகளும் தவறு செய்கிறார்கள் என்று கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதிலின் சுரக்கம்.

> "தலித் இளைஞன் தவறு செய்தால் அவன் மீது காவல் துறையில் புகார் கொடுக்கலாம். சட்ட நடவடிக்கை எடுக்கலாம். ஆதிக்க சாதிகளைப் பொறுத்த வரையில் தலித் பிரச்சனைகளில் அவர்கள் காவல் துறையை நாடுவதே இல்லை. எடுத்த எடுப்பிலேயே அவர்களாகவே தண்டனையைத் தீர்மானித்து விடுகிறார்கள். அவ்வளவு மோசமான ஜாதிய சமூக இறுக்கம் இங்குள்ளது"
>
> (தமிழ் இந்து - 13.06.2016)

### வன்கொடுமை வழக்குப் பதிவு

தாக்குதலுக்கு உள்ளான சிறுவர்களைக் கோபி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டார்கள். அங்கு இரண்டு நாள் சிகிச்சைக்குப் பின்பு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கும் இரண்டு நாள் சிகிச்சை அளிக்கப்பட்டது.

19.06.2016 அன்று கோபி காவல் நிலையத்தில் சிறுவர்களைத் தாக்கியவர்கள் மீது தோழர்களின் முயற்சியால் வன்கொடுமைத் தடுப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் ஆனந்தராஜ், சமூக நீதிக்கட்சி பொதுச்செயலாளர் இராஜேந்திரன், மாவட்ட செயலாளர் கோபால் மற்றும் காட்டாறு குழு தோழர் இரவி ஆகியோர் அன்று இரவு 8.30 மணிக்கு இராஜேந்திரன் மற்றும் அவரது மகள்கள் மீது வன்கொடுமைத் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2015ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது (அதன் விவரம் குற்ற எண். 434/16 பிரிவுகள் 3(1)(R)(S) and 3(2)(va) (of Sc and St (POA) Amendment Act 2015 R/W 342, 294(B), 323 IPC)

## பொய்யான எதிர்வழக்கு

அன்று மாலை 5 மணிக்கு இராஜேந்திரனை மட்டும் சிறையிலடைத்துவிட்டு, அவரது மகள்களை பொய்யான காரணத்தைக் கூறி தப்பவிட்டுள்ளது காவல்துறை. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உறவினர்கள் மற்றும் தோழர்கள் காவல் நிலையத்திலிருந்து கலைந்து சென்றுவிட்டனர். அதன்பிறகு கோட்டுப்புள்ளாம்பாளையம் அதிமுக ஒன்றிய கவுன்சிலர் சின்னச்சாமியின் ஏற்பாட்டில், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் மீது எதிர்வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

சிறுவர்கள் மகேஸ்வரனின் தந்தை மோகனசுந்தரம் மற்றும் தாமோதரனின் தந்தை பொன்னுச்சாமி, சிறுவர்களைத் தாக்கிய போது பார்த்ததாகச் சாட்சி சொன்ன பருவதம், செண்பகம் சாந்தி, குருநாதன் இவர்கள் ஆறுபேர் மீதும் இராஜேந்திரன் கடைக்குள் அத்துமீறி நுழைந்த தாகவும், தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், பொய்வழக்குப் பதிவு செய்துள்ளது காவல் துறை. (குற்ற எண்: 439/16, 143, 347, 294(B), 223 IPC) இத்தகவல் வழக்குப் பதிவு செய்த 10 நாளுக்குப் பிறகு தான் தெரியவருகிறது.

தாக்குதலுக்கு உள்ளான மகேஸ்வரனின் தந்தை மோகனசுந்தரத்திடம் பேசியபோது அவர், "18.06.2016 அன்று எனது மகன் அவர் நண்பர் தாமோதரன் தாக்கப்பட்ட செய்தியை எனக்கு அறிமுகமான பல உதவிகள் செய்தவருமான ம.தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளர் கந்தசாமி அவர்களிடம் தகவல் சொன்னோம். அவர் சிறுவர்களை கோபி அரசு மருத்துவமனையில் உள்நோயாளி களாகச் சேர்க்க அனைத்து உதவிகளும் செய்தார். காவல்துறை சிறுவர்களிடம் விசாரணை நடத்தியதில், இராஜேந்திரன் மற்றும் இரண்டு மகள்கள் தகாத வார்த்தைகளில் திட்டி அடித்துள்ள செய்தி தெரியவந்துள்ளது.

அதன் பிறகு, "வன்கொடுமை வழக்குதான் பதிவு செய்ய வேண்டும். அதனால் வழக்கு வேண்டாம் சமாதானமாக சென்றுவிடுங்கள்" என வலியுறுத் தினார். மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. அப்போதும் வழக்கு வேண்டாம் என்று வலியுறுத் தினார். நாங்கள் வழக்குப் பதிவுசெய்ய வேண்டும் என டி.எஸ்.பி. அவர்களிடம் கேட்டுக் கொண்டோம். இனிமேல் இந்த வழக்கு சம்மந்தமாகத் தொடர்பு கொள்ளக் கூடாது என்று சொல்லிப் பின் வாங்கினார்" என்று கூறினார்.

## தள்ளுபடி செய்யப்படும் தீண்டாமை வன்கொடுமை வழக்குகள்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் காவல் நிலையத்திற்குச் சென்று வழக்கு கொடுக்கும் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராகப் பொய் வழக்குப்பதிவு செய்வதை ஆதிக்க வெறிபிடித்த இடைநிலை ஜாதிகளின் சங்கத்தலைவர்கள் பொறுப்பாளர்கள், அரசியல் கட்சி பொறுப்பாளர்கள் காவல் துறை துணையுடன் நாடு முழுவதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

வன்கொடுமை வழக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லாமல், புகார் பொய்யானது ( Mistake of Fact) என்று கூறித் தள்ளுபடி செய்து விடுகிறது காவல்துறை. இதுபோன்று பொய்வழக்கு என்று காவல்துறை தள்ளுபடி செய்த ஒரு வழக்கை பற்றி பார்ப்போம்.

ஈரோடு மாவட்டம், வரப்பாளையம் காவல் நிலையத்தில் பட்டான் என்பவர் 13.10.2015 அன்று சுப்பராவ் கவுண்டரால் தாக்கப்பட்டு வழக்குக் கொடுத்தார். F.I.R.No.231/2015 U/S 295(B) 506(ii) IPC,R/W,3(i) (X) SC/ST POA Act 1989. உடனே பட்டான் அவர்கள் மீதும், அவரது மனைவி ரங்காள் அவர்கள் மீதும் பொய்யாக ஒரு எதிர் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

திரு. பட்டான் அவர்கள் மீது போடப்பட்ட எதிர்பொய்வழக்கு விவரம், FIR No.324/2015 U/S294(B)506(I) IPC Act வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பட்டான் கொடுத்த தீண்டாமை வன்கொடுமை வழக்கு, பொய்யானது, என்று தள்ளுபடி ( MF ) தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனால், பட்டான் மீதும் அவரது மனைவி மீதும் போடப்பட்ட பொய்வழக்கில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு கோபி நீதி மன்றத்தில் விசாரணை நடைப்பெற்றுக்கொண்டி ருக்கிறது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்துக்குச் சென்றால் இது போன்று அலைக்கழிப்பு ஏற்படுத்துவோம் என்று காவல் துறையும் இடைநிலை ஜாதியினரும் தாழ்த்தப்பட்ட மக்களை எச்சரிக்கை செய்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் மீது எதிர் பொய்வழக்குச் செய்வதைக் கருத்தில் கொண்டு வன்கொடுமைத் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2015-ல் எதிர் பொய் வழக்குத் தொடுத்தால், சட்ட அலைக்கழிப்பு செய்தால் பிரிவு 3 (1) (P) இப்பிரிவு களின் கீழ் வழக்குப் பதிவு செய்யலாம் என்று சட்ட விதிகள் மட்டுமே உள்ளது. இதை நடைமுறைப் படுத்துவதும் மிகவும் சவாலாக உள்ளது.

பட்டியல் ஜாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டத்தை வலுப் படுத்துவதற்கான தேசிய கூட்டமைப்பு வெளியிட்ட ஆவணத்தைப் பார்ப்போம்.

> "வன்கொடுமை செய்தவர்கள் நீதிமன்றத் தண்டனை பெறுவது என்பது மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுகிறது அது 0.5 சதவீதத்தில் இருந்து 8 சதவீதம் வரை உள்ளது. தமிழகத்தில் 5 .2% பேரே தண்டனை பெற்றிருக்கிறார்கள்"

பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்றங்கள் பெருக்கிக்கொண்டே வருவதைக் குற்றப்பதிவு களுக்கான இந்தியாவின் தேசிய ஆணையம் (என்.சி.ஆர்.பி.) வெளியிட்ட தரவுகள் தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை 2013 -ஐ விட 2014-ல் 19 % அதிகரித்து இருப்பதாக அந்தத் தரவுகள் சொல்கின்றன. ஜாதியப் பாகுபாடு பற்றிய ஐ.நா. அறிக்கையிலும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

( தமிழ் இந்து 25.4.2016 )

வன்கொடுமைத் தடுப்பு வழக்குகள் மேலே குறிப்பிட்ட நிலைமையில் தான் உள்ளன. ஆனால் ஆதிக்கவெறி பிடித்த இடைநிலை ஜாதிகளின் சங்கத் தலைவர்கள் இவ்வழக்குகளைப் பற்றித் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள்.

"பார்ப்பனர்கள் வித்தியாசம் காட்டுவதுடன் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் பற்பல ஜாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். 'மேல் ஜாதியார்கள்' நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்களானால், உங்களுக்குக் 'கீழேயுள்ள ஜாதியார்' களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை பார்ப்பனர்கள் காட்டும் கொடுமைகளை விடச் சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும்."

–தோழர் பெரியார் - குடி அரசு 09.12.1928

கடந்த நூற்றாண்டில் நாடார் சமூகத்தினர் உயர் சாதிக்காரர்களின் தெருக்களில் செருப்பு அணியக்கூடாது. வீடுகளில் திண்ணை அமைத்துக் கொள்ளக்கூடாது, பெண்கள் தண்ணீர்ப் பானைகளை இடுப்பில் எடுத்துச் செல்லாமல் தலையில் தான் சுமந்து செல்ல வேண்டும்.

உயர் ஜாதியினரிடம் உரையாட வேண்டுமெனிலோ, அவர்களுடன் செல்ல வேண்டுமெனிலோ ஒரு குறிப்பிட்ட அடி தூரம் விலகித்தான் செல்ல வேண்டும். நாடார் பெண்கள் இடுப்புக்கு மேலே தோள் சேலை அணியலாகாது நாடார் பெண்கள் காதுகளில் இரும்புக் கொத்து வளையல்கள் தான் அணிய வேண்டும். கோயில்களில் நுழையக்கூடாது.

இதுபோன்ற தீண்டாமைக் கொடுமைகளை அனுபவித்து வந்த நாடார் சமூகத்தைத் திராவிடர் இயக்கமும், பெரியாரும் போராடி, தீண்டாமையிலிருந்து விடுதலை செய்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள்மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளுக்கு எதிராகவும் களத்தில் இருந்தனர். இன்று ஆதிக்க ஜாதியாகி விட்டோம் என்ற கற்பனையில், ஜாதிவெறியில் இதுபோன்ற வன்கொடுமைகளில் ஈடுபடும் நாடார் சமூகத்தினரின் காட்டுமிராண்டி காலச் செயல்பாடுகளுக்கு எதிராகவும் திராவிடர் இயக்கங்கள் களமிறங்கவேண்டும். குறிப்பாக கோபி, ஈரோடு பகுதிகளில் இயங்கும் பெரியார் இயக்கங்கள் உடனடிப் பணியாகக் களமிறங்க வேண்டும்.

- கள ஆய்வுக்கு உதவிய தோழர்கள்:
கோபி கோட்டுப்புள்ளாம்பாளையம் சூரியா,
கோபி ஆனந்தராஜ், காட்டாறு குழு இரவி,
அர்ச்சுனன்,
சேவூர் முதலிபாளையம் இரவி

21-ஆம் பக்க தொடர்ச்சி

பெண்கள் கல்வி அறிவு பெற்று, சமூகத்தில் மீண்டும் தலை நிமிர்ந்து இன்று கால் பதிக்காத துறையே இல்லை என்றாகி விட்டது. இவ்வளவு முன்னேறிய காலத்திலும் கூட பெண்கள் ஆண்களைச் சார்ந்தே இருக்க வைப்பது என்பது மிகவும் மோசமானது. ஒரு பெண் தான் வேலைபார்க்கும் அலுவலகத்தில் பெரிய அதிகாரியாக இருந்தாலும் கூட (அவருக்கு கீழே பல ஆண்கள் வேலை பார்ப்பார்கள்) வீட்டில் கணவனுக்கு பணிவிடைச் செய்பவளாகத் தான் இருக்கிறார்கள். தன்னுடைய பணம் எடுக்கும் அட்டையை கணவனிடம் கொடுத்துவிட்டு தன்னுடைய சின்னச் சின்னத் தேவைகளுக்குக்கூட கணவனிடம் கேட்டுப் பெறுவது என்பது ஆண்களுக்கு அழகாக இருக்கலாம்.

ஆனால் பெண்களுக்கு சுயமரியாதைக் கேடான விடயமாகும். நான் என் துணைவரை ஊருக்கு அனுப்ப பேருந்து நிலையம் சென்றிருந்தேன் (பேருந்து நிலையம் சற்று தூரம் என்பதால் நான் தான் எனது வாகனத்தில் கூட்டிக்கொண்டு செல்வேன்) பேருந்து வர 10 நிமிடமானது. இந்த இடைப்பட்ட நேரத்தில், அவரவர் பேருந்தைப் பிடித்துப் பணிக்குச் செல்ல ஒவ்வொருவரும் ஓடிக்கொண்டிருந்தார்கள், அதில் கொடுமை என்னவெனில் ஒரு பத்துப் பெண்களாவது இருக்கும், அனைவரும் தங்கள் கணவரோடு வேகமாக இரு சக்கரத்தில் வந்து பேருந்தைப் பிடிக்கிறார்கள். அந்தப் பெண்கள் அனைவரும் செய்வது தங்களின் பேருந்துக்கான கட்டணத்தை கணவன்மார்களிடம் கேட்டுப் பெறுவது தான். இதில் வயது வித்தியாசமே இல்லை. அது என் மனதை மிகவும் பாதித்தது

இந்த நிலை மாற நாம் என்ன செய்ய வேண்டும். முதலில் நமது முதல் எழுத்தை மாற்ற வேண்டும், அது அப்பாவோ, கணவரோ இரண்டும் வேண்டாம். ஒன்றின் தொடர்ச்சி மற்றொன்று. இரண்டுமே ஆணாதிக்கச் சிந்தனை தான். நமக்கான முதல் எழுத்து நம் அம்மாவின் முதல் எழுத்தாக இருக்கட்டும். ஏனென்றால் அம்மா தான் நம் வலியறிந்தவள், நம் இனமானவள். நம்மால் மட்டுமே ஒரு ஆண் மகனை நல்ல மனிதராகவும், அதன் தொடர்ச்சியாக நல்ல கணவராகவும், அதன் மூலம் ஒரு மேம்பட்ட சமுதாயத்தையும் உருவாக்கவும் முடியும்...

"பெண்களே; வீரத்தாய்மார்களாக ஆக ஆசைப்படுங்கள், நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்கள், மற்ற ஆண்கள் மாற்றம் அடைவது வெகுசுலபம். ஆண்கள் உங்களைத் தான் பிற்போக்காளிகள் என்று உங்கள் மீது பழிசுமத்தி வருகிறார்கள். அப்பழிச்சொல்லுக்கு ஆளாகாதீர்கள்; எதிர் காலத்தில் 'இவள் இன்னாருடைய மனைவி' என்று அழைக்கப்பட மாட்டாது. 'இவர் இன்னாருடைய புருஷர்" என்று அழைக்கப் படவேண்டும்."

பெரியார் - குடிஅரசு 5.6.1948

அரசூர் அ.ப.சிவா

# 4 பேரு விதுமாப் பேசியது. ௬



## சமபந்தி விருந்து வேண்டாம்: சம்மந்தி விருந்துக்குத் தயாரா?

இனி நீங்கெல்லாம் எப்படிக் கட்சி நடத்தப் போறீங்களோ. உங்க பொழப்புல மண்ணுதான் என்றபடி வாட்ஸ் - அப் பில் வந்தார் தம்பி கார்த்தி. என்னாச்சு தம்பி நீங்கெல்லாம் திருந்திட்டீங்களா? என்றவனிடம் அதுக்கெல்லாம் சான்ஸே இல்லை, உங்க வேலையை பா.ச.க. தமிழ் மாநிலத்தலைவர் தமிழிசை அக்கா செய்ய ஆரம்பிச்சுட்டாங்களே இனி நீங்க எப்படி பொழப்ப ஓட்டுவீங்க என்றான்.

அதாவது, அமித்ஷா சொல்லிட்டாருன்னு அந்தக்கா இனி வருசத்துல 365 நாளும் தலித் வீடுகளில் தான் சாப்பிடுவேன் அப்படின்னு சொல்லிட்டு, சாப்பிட ஆரம்பிச்சுட்டாங்க, இனி உங்க பருப்பு வேகாது. அப்படின்னு தம்பி சொல்லி முடிக்கலை, எந்நேரம் பார்த்தாலும் போனை நோண்டிட்டு பருப்பு வெந்துடுச்சு வந்து சாப்பிட்டு விட்டு போடா என அம்மா சத்தம்.

உணவு முடித்து தெம்பா வந்து உட்காந்தா, மீண்டும் தம்பி கார்த்தி பதில் என்னாச்சு என்றபடி ம் .. ஏதோ அந்தம்மா அய்யரம்மா மாதிரியில்ல பேசறாங்க, பார்த்தாலே தீட்டு சொல்லப்பட்டவங்க, தொட்டால் தீட்டு அப்படின்னு சொல்லப்பட்டவங்க வீட்டில் சாப்பிடுவதில் என்ன ஆச்சரியம் என்றேன். தெரியுமே எச்.ராஜா, இல.கணேசன், கே.டி.ராகவன் இவங்க போய் சாப்பிடனுமுண்ணு சொல்ல வர்றீங்களா? என்றான் தம்பி கார்த்தி . இதைத்தான் நீங்க எப்பவும் சொல்றீங்க .


இந்த சமபந்தி விருந்து காலமெல்லாம் மலையேறியாச்சு, அதனால் சம்மந்தி விருந்து போடச் சொல்றோம். எச்.ராஜா, இல.கணேசன், கே.டி.ராகவன் போன்ற பா.ச.க. தலைவர்கள் எல்லாம் சேரியில் சம்மந்தி விருந்து சாப்பிடச் சொல்றோம். அப்புறம் தமிழிசை அக்காவுக்கு ஒரு கோரிக்கை கொங்கு மண்டலம் பக்கம் ஒரு பழமொழி இருக்கு அதை பாலோ பண்ணச்சொல்றோம் . அப்படி என்ன பழமொழி அது .. சம்மந்தம் செய்யாமல் கை நனைக்காதே .



## ‘கிளப்புல மப்புல திரியுற பொம்பள’

‘கிளப்புல மப்புல திரியுற பொம்பள’ என்ற சங்கத் தமிழ்ப் பாடலை இயற்றி இசையமைத்த ஆம்பள மற்றும் ‘ஆம்பள’ படத்தின் இசையமைப்பாளர் ஹிப்-ஹாப் தமிழா, தன் மீசையை முறுக்கி விட்டுக் காட்டுல கழனியில திரியுற ஜல்லிகட்டு காளைகளைப் பற்றி ஒரு பாட்டெழுத, பொறுக்காதே இந்த பீட்டாவுக்கு கண்டனம் தெரிவிக்க, இவரும் திருப்பி மீசையை முறுக்க மறுபடியும் முதலில் இருந்தா .. கண்ணைக் கட்டி வர .

இதுல சில பேரு மீசையை முறுக்கி விட்டு வீரத்தின் அடையாளமெனத் திரிய, நீங்க மீசையை முறுக்குங்க அல்லது முறுக்காமல் போங்க, காளையை அடக்குங்க அடக்காமல் போங்க. தமிழர் அடையாளம் தமிழர் அடையாளம் அப்படின்னு ஜல்லிகட்டை புதிதாய் தூக்கி செங்குத்தா நிறுத்த வந்தவரிடம் நம் சந்தேகமெல்லாம் தமிழா அப்படிங்கறது நீங்க வாசிச்சு வாங்கின பட்டம் அந்த ஹிப்-ஹாப் அப்படிங்கறது தொல்காப்பியத்திலா, கலித்தொகையிலா, புறநானூறிலா எதில் வருதுன்னு சொல்லுங்க ஆதி.




பெண்களுக்கெதிரான குற்றங்கள் குறைய ஆன்மீகக் கல்வி அவசியமுன்னு மத்திய மனித வள மேம்பாட்டுக் குழுத் தலைமை ஆலோசகர் இராமகோபாலன் அய்யர் சுலபமாச் சொல்லிட்டுப் போயிட்டாரு. அப்படி ஒரு ஆன்மீகக் கல்வி முறையை ஏற்படுத்தினால் அதில் என்னென்ன பாடங்கள் இருக்குமென யோசிச்சுப் பார்த்தா...

தசரத மகாராஜாவுக்கு 60,000 மனைவிகள் இருந்தது, ஆத்து மேட்டுல குளிக்கிற பெண்களிடம் சேலை திருடிய கிருஷ்ணனின் கதை, முனிவன் மனைவியிடம் வந்த இந்திரன் கதை, பார்வதியிடம் சிவன் காலை தூக்கி நடனம் ஆடிய கதை, இதையெல்லாம் தாண்டி கலியுகத்தில் சங்கராச்சாரியார், தேவநாதன் போன்றோர் கதை என அப்படி இப்படி வைத்தாலும் போதும். நிச்சயமாக பெண்களுக்கெதிரான குற்றங்கள் வெளியில் குறைய நிறைய வாய்ப்புண்டு.

தமிழகத்தில் திராவிட கட்சிகள் இருக்கும் வரை இந்த மாதிரியான புனிதப் பாடத்திட்டங்களைக் கொண்டுவர முடியாது. அதனால் மத்திய அரசு இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசுப் பாடத் திட்டத்தில் நிறைவேற்றினால் நல்லது எனச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அது முடியாதே. ஸ்ம்ருதி இராணியை மனித வள மேம்பாட்டு துறையில் இருந்து தூக்கிட்டாங்களே என்றபடி வந்து நின்றார் கலைக் குழு நாரயணமூர்த்தி.

வர வர உங்களுக்குக் கண் தெரியமாட்டிங்குது. உங்களுக்கு இராமகோபாலன் அய்யர் சொன்னது ஆன்மீகக் கல்வி அல்ல ஆன்மீகக் கலவி அதை தப்பா புரிஞ்சுட்டு...

இதே மாதிரி தப்பாவே புரிஞ்சுக்கிட்ட விசயம் இன்னொன்னு இருக்கு அன்னிக்கு வானொலியில் சேகர் நாடகம் ஓடிட்டு இருந்துச்சு மலர் மாமாவும் நானும் கேட்டுட்டு இருந்தோம். நாடகத்தில் .. ஒரு வசனம்...

இனிமேல் நீ என்னை அப்பா அப்படின்னு கூப்பிடாதே- அப்பா

சரிடா, இராமசாமி - மகன்

கேட்டீங்களா? மாப்ள சேகரு அய்யாவை வாடா போடா அப்படின்னு கூப்பிடற மாதிரி வசனம் எழுதி இருக்கிறார். இந்தப் பார்ப்பானுக புத்தியைப் பாருங்க என்றார். அட போங்க மாமா. எப்பப் பார்த்தாலும் சேகர் மாமாவைத் தப்பாவே பேசறது உங்களுக்கு வேலையாப் போச்சு, அவரு அப்பா பேரு சோ.இராமசாமி அதை தான் அவா அப்படி சொல்றாள் நோக்கு இப்ப புரியுதா?

அது சரி போன வாரம் சரவண பவனில் தோசை ஆர்டர் செய்யனுமுன்னா கூட இந்தி தெரிந்து இருக்கணும் அப்படின்னு சொல்றாளே என்றார் மலர் மாமா. அட இதுல என்ன தப்பு சேகர் நடைமுறையைத் தான் சொல்லி இருக்காரு. ஓ... நீங்களும் அவாளுக்கு சப்போர்ட்டா? ஆமா உண்மையை யார் சொன்னாலும் கேட்டுத்தான் ஆகனும் .

சேகர் என்ன சொல்ல வர்றார்ன்னா இந்தி படிச்சவங்கெல்லாம் ஓட்டலில் சர்வர் வேலைக்கு தான் வர முடியும். இதைப் போய் தப்பா நெனச்சுட்டு ..

## அடுத்த எலக்சனில் மோடித்தள்ளுபடி

ஊர் பக்கம் 30 தறிவச்சு ஓட்டுற மாமன் பா.ச.க. வில் முக்கிய புள்ளி, 2014 க்கு முன்னாடி அடிக்கடி சொல்லுவாரு, நீ வேணுமன்னா பாரு மாப்ள 2014 மே மாசம் நாங்க ஆட்சிக்கு வர்றோம் அப்புறம் நீயெல்லாம் ஆடித்தள்ளுபடியில் ஆடி காரே வாங்கலாம் அந்தளவுக்கு பொருளாதாரத்தை உயர்த்தி விடுவோம் என்பார் .

போன வாரம் ஒப்பனக்கார வீதியில அக்காவோட நடந்து வந்துட்டு இருந்தாரு. என்ன மாமா இந்தப்பக்கம் என்றதுக்கு ஆடித்தள்ளுபடி போட்டாச்சுல்ல என்றார். அட ஆடி கார் ஷோரூம் அவநாசி ரோட்டு பக்கமுல்ல இருக்கு எனச் சொல்லி முடிக்கல, அக்காவை முன்னாடி போகச்சொல்லிட்டு மெதுவாகச் சொன்னார். மோடி வந்தா ஆடித் தள்ளுபடியில் ஆடி கார் வாங்கலாமுன்னு சொன்னது என்னவோ உண்மைதான் மாப்ள. ஆனா இன்னிக்கு தறி ஓடுற ஓட்டத்துல ஆடித்தள்ளுபடியில அண்டர்வேர் தான் வாங்க முடியும் போல என்றார்.

ஒரு யோசனை சொன்னாக் கேட்டுக்குங்க ஆடித்தள்ளுபடி முடிஞ்சதும் அடுத்த எலக்சனில் மோடித்தள்ளுபடி செய்து பாருங்க என்றபடி நடையைக் கட்டினேன் .

# ஒரு சுதந்திரப் பறவைப் போல் இருக்கிறேன்

## கவிதா–குணசேகரன் நேர்காணல்



என்பெயர் கவிதா. நான் பிறந்தது பழனி. திருமணம் செய்து கொடுத்தது பெதப்பம்பட்டி என்கிற ஊருக்கு. எனது அம்மா பெயர் சரோஜினி. அப்பா பெயர் நடராஜ். எனது சகோதரி திலகவதி. நான் பத்தாம் வகுப்புவரைதான் படித்தேன். குடும்பச் சூழ்நிலை காரணமாக மேற்கொண்டு படிக்க முடியவில்லை. வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டேன். அதன் பிறகு திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

**மாப்பிள்ளை பார்க்க வரும்போது உங்கள் எதிர்பார்ப்பு எப்படி இருந்தது?திருமணம் எப்படி நடக்க வேண்டும் என்று நினைத்தீர்கள்?**

என் கணவர் எப்படி இருக்க வேண்டுமென்று நினைத்தேன் என்றால், என் தந்தை மாதிரி இருக்கக்கூடாது என்று நினைத்தேன். பெண் அடிமைத்தனம் என்பது எங்கள் வீட்டில் மிகவும் அதிகமாக இருக்கும். அம்மா, அப்பா சொல்வதை மட்டும் தான் கேட்கவேண்டும் என்று நினைப்பார். மற்றபடி வேறொன்றும் நான் நினைக்கவில்லை. என் திருமணம் ஐயர் எல்லாம் பூசை செய்து வாத்தியங்களுடன் நடைபெறவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் குணா அவர்கள் அப்படியெல்லாம் இருக்கக்கூடாது. தாலி கட்டக் கூடாது, ஐயர் வைக்கக்கூடாதென்று சொன்னார். ஆனால் குணாவோட அப்பா ஐயர் வேண்டாம், ஆனால் தாலி கட்டி தான் திருமணம் செய்ய வேண்டும் என்று உறுதியாய் இருந்தார்.

**திருமணத்திற்கு முன்பு உங்க வீட்ல இருந்ததற்கும் திருமணத்திற்கு பிறகு கணவர் வீட்டில் இருப்பதற்கும் வேறுபாடு என்ன?**

எங்க வீட்டில் இருக்கும்போது முழுக்க முழுக்க அப்பாவோட கட்டுப்பாட்டில் இருந்தேன். ஆனால் இங்க அப்படியெல்லாம் இல்லை. குணா என்னைச் சுதந்திரமாக விட்டுவிட்டார். பெரியாரியலைப் பற்றி அறிந்திருப்பதால் என்னைச் சுதந்திரமான பெண்ணாக மாற்றினார்.

**தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டீங்க. பிறகு எப்படி தாலி அறுத்து எறிய முன் வந்தீங்க?**

எனது விருப்பமே தாலி கட்டித் திருமணம் செய்ய வேண்டும் என்பதுதான். அவரின் தந்தையும் கடுமையாகச் சொல்லிவிட்டார். அதனால் தாலிகட்டித் திருமணம் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிறகு பெரியார் இயக்க நிகழ்ச்சிகளுக்கு கூட்டிச் செல்லும்போது அங்கு வரும் தோழர்கள் யாரும் தாலியும் கட்டிக்கொள்ளவில்லை, மெட்டியும் போடவில்லை.

அதைக் கேட்கும் போது சொன்னார்கள், ஆணுக்குப் பெண் அடிமையுமில்லை பெண்ணுக்கு ஆண் எஜமானும் இல்லை என்ற வாசகத்தையும் சொல்லி அதன் விளக்கத்தையும் சொன்னார். நானும் அந்த அடிமைச் சங்கிலியை எடுக்க விரும்பினேன். பின்பு 2012 டிசம்பரில் மனுசாஸ்திர எரிப்பு மாநாட்டில் தாலியை அறுத்துவிட்டேன். என்னுடன் சாந்தி-விஜயன், சுபா-பிரகாஷ் ஆகிய தோழர்களும் அறுத்துவிட்டனர்.

**தாலியை அறுத்த பிறகு உங்களுக்கு எந்த மாதிரிப் பிரச்சனைகள் வந்தன?பொது இடங்களில் எப்படி எதிர்கொண்டீர்கள்?**

எங்க சொந்த ஊர்லையே ஒரு மாதம் வேலை செய்தேன் . அப்போது என்னுடன் வேலை செய்தவர்கள் இத்தனை நாள் தாலி கட்டிக்கொண்டு வந்தாய், இப்பொழுது எங்கே? தாலியைக் காணவில்லை என்றனர். நான் சொன்னேன், பெண்களுக்கு மட்டும் எதுக்குத் தாலி? ஆண்களுக்குப் பெண்கள் அடிமையில்லை என்று சொன்னேன்.

பின்பு ஒருநாள் மின்சார வாரியத்தில் வேலை செய்யும் ஒரு அதிகாரி ஒருவர், கொஞ்சம் வயதானவர், பெரியார் அமைப்பில் இருப்பவர்களெல்லாம் தாலி கட்டவேண்டாம் என்றால், யார் யாருடன் வேண்டுமானாலும் போய்க் கொள்ளலாமா? என்று கேட்டார். நான் கூறினேன், யார் யாருடன் வேண்டுமானாலும் அவர் விரும்பினால் போய்க்கொள்ளலாம் என்று சொன்னேன் அவர் பதில் பேசவில்லை.

**தாலியை அகற்றிய பின்பு குடும்பத்தில் எப்படி ஏற்றுக்கொண்டார்கள்?**

தாலியை அகற்றியது எங்கள் வீட்டிற்குத் தெரியாது. அதைப் பெரியார் முழக்கம் என்ற பத்திரிக்கையின் மூலமாகதான் அறிந்துகொண்டனர். என் அத்தை கோபத்தில் அது அவர்களது விருப்பம். நாமெல்லாம் அதை கேட்கமுடியாது என்று சொல்லிவிட்டார். அம்மா இரண்டு வருடமாகத் தாலி கட்டுனாத் தான் வீட்டுக்கு வருவேன் என்று சொன்னார்கள். ஆனால் நான் இப்படி இருக்கத்தான் விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டேன். திரும்ப அந்த வாழ்க்கைக்கு என்னால் வர முடியாது பெரியார் வாழ்வியலைத் தான் கடைப்பிடிப்பேன் என்று சொல்லிவிட்டேன்.

**தாலியை கட்டிய மாப்பிள்ளையே தாலியை அறுத்துவிட்டார் என்று உங்கள் வீட்டில் ஏதேனும் சொன்னார்களா?**

அவர்கள் அந்தக் காலத்து ஆட்கள் என்பதால் அவர்கள் கணவரிடம் அதிகமாகப் பேசமாட்டார்கள் என்னிடம்தான் கேட்பார்கள். ஒரு நாள் என்னிடம் ஒரு கையில் தாலியையும் ஒரு கையில் விஷ மருந்தையும் வைத்துக்கொண்டு மிரட்டினார்கள். தாலியைக் கட்டவில்லை என்றால் நான் விஷத்தைக் குடித்துவிடுவேன் என்று கூறினார்கள். என்னால் எதுவும் பேச முடியவில்லை. அழுகைதான் வந்தது. அதற்குப் பிறகு எனது அம்மாவிடம் நாங்கள் இருவரும் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம் நீங்க தேவையில்லாத விஷயத்துக்கெல்லாம் மனசக் கொழப்பிக்க வேண்டாம் என்று சொல்லிச் சமாதானப் படுத்தி விட்டேன். அன்று முதல் இன்று வரை நான் தாலி கட்டக் கூடாதென்று உறுதியாக இருக்கிறேன்.

**தாலி இல்லாமல் இருப்பதை உங்கள் தோழிகள் எவ்வாறு எடுத்துகொண்டனர்?**

என்னோட தோழிகள் தாலியில்லாம நீ முண்டச்சி மாதிரி, அதாவது கணவனை இழந்தவர் மாதிரி இருக்க என்று சொன்னார்கள். என்னுடன் பணிபுரியும் ஒரு பார்ப்பனப்பெண் வந்து சொன்னாங்க, தாலி இல்லாமல் நீ எப்படி தைரியமா இருக்க? நான் குடும்பச் சூழ்நிலை காரணமா தாலியை அடகு வச்சதுக்கே மனநிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் சென்று வந்திருக்கேன் என்று சொன்னாங்க. அதுக்கு நான் சொன்னேன், ரெண்டு பேரும் ஒருவரைஒருவர் புரிதலோடும், அன்போடும் இருக்கும் போது தாலி ஒரு பெரிய விசயமே இல்லை அப்படினு சொல்லிட்டேன்.

**நீங்கள் பெரியாரியல் இயக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ளக் காரணமாய் இருந்தவர்கள் யார்?**

என்னை நிகழ்ச்சிகளுக்குக் கூட்டிச் சென்றது எல்லாமே குணா, விஜியண்ணன், மூர்த்திஅண்ணன் தோழர்கள்தான் காரணம். அதன்பிறகு 2014-ல் ‘அகமணமுறையை அகற்றுவோம் ஆரோக்கியமான தலைமுறையை வளர்ப்போம்’ என்ற பிரச்சாரப் பயணம் தமிழ்நாடு முழுவதும் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடைபெற்றது. சூலூர் தமிழ்ச்செல்வி அக்கா அவர்களின் தலைமையில் பிரச்சாரம் செய்தோம். பிரச்சாரத்திற்கு குணாவே 10 நாட்கள் அனுப்பிவைத்தார். தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றிருந்தோம். என்னால் முடிந்த கருத்துக்களை மக்களுக்கு நாடகங்கள் மூலமாக எடுத்துச் சொன்னோம்.

**10 நாள் பிரச்சாரத்தில் எந்த மாதிரியான கருத்துக்களை எடுத்துச் சொன்னீர்கள்?**

ஒரே ஜாதியிலும், இரத்த சொந்தத்திலும் திருமணம் செய்வதால் பிறக்கும் குழந்தைகள் ஊனமாகப் பிறக்கும் என்று நாடகங்கள் மூலமாக நடித்துக் காண்பித்தோம். அதைப் பார்த்து நிறைய

கிராமத்து பெண்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். எங்கள் குழந்தைகளும் ஒரே ஜாதி இரத்த சொந்தத்திலும் திருமணம் செய்து கொடுத்ததால் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஊனமாக பிறந்து உள்ளார்கள் என்று சொல்லி அழுதார்கள். இதன்மூலமாக எங்கள் பிரச்சாரப்பயணம் வெற்றி பெற்றதாக உணர்ந்தோம்.

**நாடகங்கள் மூலம் நீங்கள் கற்றது என்ன?**

நான் கற்றது ஒரே சாதியில் திருமணம் செய்யக்கூடாது என்பதை தான். திருமணம் செய்துவிட்டதால் இனிவரும் தலைமுறை இது மாதிரி செய்யக்கூடாதென்று நான் விரும்புகிறேன். அகமண முறை வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

**இந்த காலத்துப் பெண்கள் விடுதலை அடைய வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?**

தன் கையே தனக்கு உதவி என்பதைத்தான் நான் சொல்வேன். கடவுளை நம்புவதை விடுத்து தன்னம்பிக்கையுடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வேன். பிறரை நம்பி வாழவேண்டாம் என்பேன்.

**பெரியாரியலில் வாழ்வதை எப்படி உணர்கிறீகள்?**

பெரியாரியலைக் கற்றுக்கொண்டதால் நான் இப்போது தைரியமாகவும் தன்நம்பிக்கையுடன் இருக்கிறேன். அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கமுடியும். நான் என் குழந்தையையும் சுதந்திரமாய் வளர்ப்பேன் என்று உறுதியுடன் இருக்கிறேன்.

முன்பு எங்கள் வீட்டில் என் தந்தையின் கட்டுப்பாட்டிற்குள் அதாவது கூண்டில் அடைப் பட்ட கிளிபோல் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் இப்போது சுதந்திரமாக உணர்கிறேன். கூண்டை விட்டு வெளியே வந்த ஒரு சுதந்திரப் பறவைபோல் இருக்கிறேன். பெண்விடுதலையை உணர்த்தும் பெரியாரியலைதான் நான் கடைப் பிடிப்பேன்.

## தோழர் குணசேகரன்

என்னுடைய பெயர் குணசேகரன். உடுமலை அருகில் பெதப்பம்பட்டி என்ற ஊரில் பிறந்தேன். நான் பத்தாம் வகுப்புவரை படித்தேன். பெற்றோருக்கு ஒரே மகன் தந்தை இறந்து எட்டாண்டுகள் ஆகின்றது.

**உங்கள் திருமணம் எந்த முறையில் நடந்தது?எந்த ஊரில் நடந்தது?**

திருமணம் எங்க சொந்த ஊரில்தான் நடந்தது. பெண் பார்க்கும்போது நான் தாலி கட்டமாட்டேன். சாதி மறுப்புத் திருமணம்தான் செய்வேன் என்று கூறினேன். பார்ப்பானைக் கூப்பிடமாட்டேன் என்று கூறினேன். ஆனால் எங்கள் வீட்டில் இதைக் கடுமையாக எதிர்த்தனர். அப்படியெல்லாம் முடியாது இல்லையென்றால் திருமணமே வேண்டாம் என்றேன். அப்பாவும், அம்மாவும் நாங்கள் தற்கொலை செய்துகொள்வோம் என்று மிரட்டினார்கள். ஆனால் பார்ப்பனரைக் கூப்பிடக் கூடாதென்று உறுதியோடு இருந்தேன். ஆனால் தாலி கட்டித்தான் திருமணம் நடந்தது. சாதி மறுப்பு திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்ததும் நிறைவேறவில்லை. பின்பு என் துணைவியாரும் சாதி மறுப்புக் கொள்கையில் ஆர்வம் கொண்டிருந்தார் எனக்குக் கொஞ்சம் மகிழ்ச்சியாய் அமைந்தது.

**2012- ல் நடந்த மனுசாஸ்திர எரிப்பு மாநாட்டில் தாலி அகற்றக் காரணம் என்ன?ஆர்வம் எப்படி வந்தது?**

நான் ஆரம்பத்திலேயே தாலிக்கயிறு போன்றதைக் கட்டுவதில் எனக்கு விருப்பமில்லை. அமைப்பு நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது தோழர்கள் எங்கள் இருவரிடமும், நீங்க ஏன் இன்னமும் தாலிக்கயிறு கட்டியிருக்கீங்க என்றெல்லாம் கேட்பார்கள். அதன்பிறகு நானும், பல்லடம் விஜயன், அனுப்பட்டி பிரகாஷ் ஆகிய தோழர்களுடன் தாலியை அகற்ற வேண்டும் என்று முடிவெடுத்தோம். ஈரோட்டில் மனுசாஸ்திர எரிப்பு மாநாட்டில் தாலியை அகற்ற முடிவு எடுத்தோம் அதில் தாலியை அகற்றி நமக்குப் பின்வரும் இளைஞர்களுக்கு முன் மாதிரியாக திகழவேண்டும் என்று நினைத்தோம்.

**தாலியை அகற்றிய பின்பு உங்க வீட்டிலும் உங்கள் துணைவியார் வீட்டிலும் எப்படி எடுத்துக் கொண்டனர்?**

தாலியை அகற்றும்போது யாருக்கும் தெரியவில்லை. வீட்டில் கேட்கும்போது அது சும்மா கழட்டி வைச்சுட்டோம் அப்படின்னு சொல்லி விட்டோம். அதற்கு அப்புறம் புத்தகத்தில் பார்த்து அறிந்து கொண்டனர். பிறகு கவிதா வீட்டில் இருந்து அவங்க அம்மாவிடம் இருந்து கடும் எதிர்ப்பு வந்தது. அந்த நிகழ்வுக்கு பின்பு ஒரு வருடம் இருக்கும். அப்போது இருவரையும் வைத்து ஒரு கையில் தாலியையும், மறு கையில் விஷத்தை வைத்துகொண்டு தாலியை கட்டிக்கொள் இல்லைனா நான் விஷத்தை குடிச்சிடுவேன் என்று மிரட்டினார்.

அதற்கு நான் சொன்னேன் அந்த முடிவை நான் உங்க மகள் கிட்டையே விட்டுவிடுகிறேன் என்று சொல்லி விட்டேன். அதற்கு அப்புறம் அவங்க அம்மா சொன்னாங்க, சொந்தக்காரர்கள் எல்லாம் என்ன சொல்லுவாங்க? அவங்க வீட்டுக்கு எல்லாம் எப்படிப் போறதுன்னு கேட்டாங்க. நம்ம சாதிக் கலாச் சாரத்துக்கு எல்லாம் இது ஒத்துவராது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் கூறுவதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கலை நாங்க.

**இறுதியாக....**

தாலிமறுப்பு, ஜாதிமறுப்பு, சடங்குகள் மறுப்பு, பண்டிகைகள், மூடநம்பிக்கைகள் என நம் இனத்தின் மீது இந்து மத வேதங்களும், இந்து மதச் சட்டங்களும் திணித்துள்ள எல்லாவற்றையும் எதிர்த்து வாழ்கிறோம். ஊருக்கு உபதேசம் மட்டும் செய்து வாழ்வதைவிட இயன்றதைச் செய்து காட்ட நினைக்கிறோம்.



# காதல்: பிரிவும் இயல்பானது

அதி அசுரன்

காதலை ஏற்க மறுத்த மென்பொருள் வல்லுநர் ஸ்வாதி கடந்த மே மாதம் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் வெட்டிக்கொல்லப்பட்டார். அவர் படுகொலை செய்யப்பட்டதற்கு காதல் மறுப்பு காரணமல்ல; இது ஒரு ஜாதி ஆணவக்கொலை என்ற ரீதியில் சமூகவலைத்தளங்களில் செய்திகள் பரவுகின்றன. ஆனால் அவை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் காதலை ஏற்க மறுத்த மாணவிகள், இளம் பெண்கள் படுகொலைகள் என்பவை மிகச்சாதரணமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இராஜஸ்தான் மாநிலத்தின் பிகானிர் நகரில் உள்ள அரசு கால்நடை மருத்துவக்கல்லூரியில் தினேஷ் சங்லா என்ற மாணவன் முதலாம் ஆண்டில் படித்து வந்தான். அவனுடன் படித்த மீனு சவுத்ரி என்ற பெண்ணை ஒருதலையாகக் காதலித்தான். அவனது காதலை ஏற்றுக் கொள்ள மீனு சவுத்ரி மறுத்தார். எனவே, மீனு சவுத்ரி தங்கியிருந்த மாணவிகள் விடுதிக்குள் பெண் வேடத்தில் நுழைந்து, அவர் மீது ஆசிட்டை ஊற்றினான். மீனு தப்பியோட முயன்றபோது மடக்கிப் பிடித்து கத்தியால் வெறித்தனமாக குத்திக் கொன்றான். ஆசிட் வீச்சில் முகம் சிதைந்து போன மாணவி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபமாக உயிரிழந்தார்.

சேலத்தில், வாழப்பாடி அருகே உள்ள பவளத்தானூர் என்ற பகுதியைச் சேர்ந்த 20 வயதுப் பெண் சுஜாதா. அதே ஊரைச் சேர்ந்த 24 வயது நபர் விஜயக்குமார். இவர் எலக்ட்ரீசியனாக இருக்கிறார். சுஜாதா மீது காதல் கொண்டார் விஜயக்குமார். ஆனால் அதை அவர் நிராகரித்து விட்டார். இதனால் கோபமடைந்த விஜயக்குமார், பஸ் ஸ்டாப்பில் சுஜாதா மீது ஆசிட் வீசி விட்டார். இதில் சுஜாதாவின் முகம், தலை, மார்பு என பல பகுதிகளில் தீக்காயம் ஏற்பட்டது.

சென்னை ஆதம்பாக்கம் திருவள்ளுவர் சாலையில் உள்ள ஒரு இணையதள மையத்தில் ஒன்றில் பணியாற்றி வந்த ஒரு இளம் பெண்ணிடம் அதே பகுதியைச் சேர்ந்த விஜயபாஸ்கர் என்பவர் காதலிப்பதாக கூறியுள்ளார். அதற்கு அந்த பெண் மறுப்பு தெரிவித்துள்ளார். காதலை ஏற்க மறுத்த பெண் மீது கோபமடைந்தார். அந்தப் பெண் வேலை பார்க்கும் இணையதள மையத்திற்கு வந்த விஜயபாஸ்கர் திடீரென அந்த பெண் மீது ஆசிட்டை வீசியுள்ளார்.

காரைக்காலைச் சேர்ந்தவர் வினோதினி. பி.இ. முடித்த இவர், சென்னையில் உள்ள மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இவரை திருவேட்டக்குடியில் கட்டட உபகரணங்களை வாடகைக்கு விடும் சுரேஷ்குமார், ஒருதலையாகக் காதலித்து, திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளார். வினோதினி மறுத்துவிட்டார். எனவே வினோதினி மீது சுரேஷ்குமார் ஆசிட் வீசினார். பலத்த காயம் அடைந்த அவர் காரைக்கால் அரசு மருத்துவமனையிலும், பின்னர் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். 2013-ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ல் அவர் உயிரிழந்தார்.

இவையெல்லாம் கடந்த 2012 லிருந்து நடந்து வரும் ஒருதலைக்காதல் கொலைகள் ஆகும். இந்தப் பட்டியல் மிக நீளமானது. சான்றாகச் சிலவற்றைக் கூறியுள்ளோம். காதலை ஏற்க மறுத்தால் காதலைச் சொல்லியவன் வெட்டுகிறான். காதலித்தால் பெற்றோர்கள் வெட்டுகிறார்கள். ஆக, பெண்கள் சொந்தமாக சிந்தித்து ஒரு முடிவெடுத்தால் அதை ஏற்றுக் கொள்ள இந்தச் சமூகம் தயாராக இல்லை என்பதையே இவை காட்டுகின்றன.

பெண்கள் குழந்தைப் பருவத்தில் தகப்பனின் கட்டுப்பாட்டிலும், இளமையில் கணவன் கட்டுப்பாட்டிலும், கணவன் இறந்தபின் பிள்ளைகள் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டியதல்லாமல் ஒருபோதும் தன்னிச்சையாக முடிவெடுக்கவோ, சிந்திக்கவோ கூடாது என்கிறது மனுசாஸ்திரம் (மனுசாஸ்திரம் அத்தியாயம் 5 சுலோகம் 148 )

சுதந்திரமாகச் சிந்திக்கின்ற பெண்ணை - தன் வாழ்க்கையைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் பெண்ணை - சுதந்திரமாகப் பெண்கள் எடுக்கும் முடிவுகளை புரிந்துகொள்ளும் ஆணை - இந்து மத இலக்கியங்களோ, புராணங்களோ காட்டியதில்லை. தமிழ் இலக்கியங்களின் நிலையும் இதுதான். திருவள்ளுவர்கூட தோழர் பெரியாரின் பார்வையில் கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்.

இதுபோன்ற இலக்கியங்களைத் தொடர்ந்து, தற்காலத்தில் வெளியாகும் திரைப்படங்கள், திரைப்படப்பாடல்கள் வரை பெண்களை மட்டம் தட்டியும், சுயமாக முடிவுகளை எடுக்கும் பெண்களை கொல்லச்சொல்லியும் அறிவுறுத்துகின்றன. அடிடா அவள, வெட்றா அவள என்பது போன்ற பாடல்கள் தான் இன்று இளைஞர்களின் ட்ரெண்டாகியுள்ளன.

அண்மைக்காலமாக, பெண்கள் விடுதலைச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு வருகிறார்கள். ஆண் சமுதாயம் மீண்டும் கற்காலத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஆறடிக் கூந்தல், சீவி, சிங்காரித்து, சேலை, தாவணிகளைக் கட்டிக் கொண்டு வரும் பெண்களே தமக்கு மனைவியாக வரவேண்டும் என்ற சிந்தனையுள்ள மாணவர்கள், இளைஞர்கள் ஏராளமாக உருவாகியுள்ளனர். சுயசிந்தனையுள்ள பெண்களை ஒழுக்கக்கேடானவர்களாகவம், திமிர் பிடித்தவர்களாகவும் பார்க்கும் இளைஞர்கள் பெருகிவருகின்றனர்.

நமது கல்விமுறை முழுக்க முழுக்க மதிப்பெண் களை மட்டுமே குறிவைத்துச் செல்கின்றது. பெற்றோர்களும் சம்பாதிப்பதிலேயே முழுநேரத்தை யும் செலவிடும் நிலையில் வாழ்கின்றனர். குறைந்த பட்சம் டிவி பார்க்கும் நேரங்களையாவது குறைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு சமூகக்கல்வியைக் கொடுக்கவேண்டும்.

முக்கியமாக ஆண் குழந்தைகளைப் பெற்றவர்கள் மிகுந்த சமூக அக்கறையோடு குழந்தைகளை வளர்க்க வேண்டும். பெண் என்பவள் வெறும் உடல் மட்டுமல்ல; அந்த உடலுக்கும் நம்மைப்போலவே உணர்வுகள் இருக்கின்றன. அந்த உடலுக்கும் உயிர் இருக்கும். அந்த உயிர் தனக்கு வேண்டியதைத் தானே நிர்ணயித்துக்கொள்ளவும், தனக்கு வேண்டாததை விலக்கிக்கொள்ளவும் நம்மைப் போலவே உரிமை படைத்ததுதான்.

அந்த உடலும், உயிரும், உணர்வும் யாரோ ஒரு ஆணுக்குச் சொந்தமானவை அல்ல. அது தகப்பனோ, அண்ணனோ, தம்பியோ, காதலனோ, கணவனோ எவனுக்கும் எந்தப் பெண்ணும் சொத்து அல்ல; உடைமை அல்ல என்பவை போன்ற கருத்துக்களைப் புரிய வைத்து வளர்க்க வேண்டும்.

பெண் பிள்ளைகளாக இருந்தால் முன்பைவிடக் கூடுதலாக அவர்களையே முடிவெடுக்க வைக்க வேண்டும். தன் வாழ்க்கையைத் தானே நிர்ணயிக்கும் திறனை வளர்த்துவிட வேண்டும். முதலில், சுயமாக முடிவெடுக்கும் தன்மையைத் தாய் வளர்த்துக்கொள்ள வேண்டும். தந்தை என்ற ஆண் அதற்கு தடையாக வரக்கூடாது. தம் பெற்றோரிடம் சமத்துவத்தைக் காணும் ஆண் குழந்தை தானும் அவ்வாறே வளர வாய்ப்பாக இருக்கும்.

காதல் என்பதைப் பற்றி ஆண் பெண் இருபாலரிடமும் விரிவாக விளக்கமாகப் புரியவைக்க வேண்டும். தோழர் பெரியார் காதலைப் பற்றிக்கூறுகிறார்.

“ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை என்றும், அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அஃறிணைப்பொருள்கள் இடத்திலும் மற்ற உயர் திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லையென்றும் அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதிலிருந்து, நடவடிக்கையில் இருந்து, யோக்கியதையில் இருந்து, மனப்பான்மையில் இருந்து, தேவையில் இருந்து, ஆசையில் இருந்து உண்டாவதென்றும் அவ்வறிவும் நடவடிக்கையும் யோக்கியதையும் மனப்பான்மையும் தேவையும் ஆசையும் மாறக்கூடிய தென்றும் அப்படி மாறும் போது அன்பும் நட்பும் மாறவேண்டியது தான் என்றும், மாற கூடியதுதான் என்றும் நாம் கருதுகின்றோம்.”

குடி அரசு - தலையங்கம் - 18.01.1931

காதலில் இணைவைப் போல பிரிவும் இயல்பானது எனப் புரிய வைக்கிறார் பெரியார். காதலின் வெற்றியில் கல்வியையும், எதிர்கால வாழ்க்கைக்கான வாய்ப்புகளையும் உதறித்தள்ளி விட்டு திருமணம் என்ற புதைகுழியில் விழும் பெண்களையும், ஆண்களையும் பார்க்கிறோம். அதேபோல, காதலின் தோல்வியில் எதிர்காலத்தைப் பெரும் சுமையாக எண்ணி தற்கொலை செய்து கொள்ளும் இருபாலரையும் பார்க்கிறோம். ஒருதலைக் காதலால், தன் சுயமரியாதைக்குக் கேடு விளைந்தாக எண்ணி பெண்களைக் கொலை செய்யும் ஆண்களையும் பார்க்கிறோம்.

பெரியார் ‘காதல்’ பற்றியும் ‘ஒழுக்கம்’ பற்றியும் பேசியவையும், எழுதியவையும் தமிழ்நாட்டில் பாடத்திட்டத்தில் வைக்கப்பட வேண்டும். தொடக்கக் கல்வியிலிருந்தே பாலியல் கல்வி, பாலின சமத்துவக்கல்வி ஆகியவற்றைப் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும். தொடக்கக் கல்வியிலிருந்தே கோ-எஜுகேஷன் என்ற இருபாலரும் இணைந்தே படிக்கும் முறை கட்டாயப்படுத்தப்பட வேண்டும். ஒருபாலினம் மட்டுமே படிக்கும் கல்வி நிலையங்கள் இழுத்து மூடப்பட வேண்டும்.

குறிப்பாக, பெற்றோர் குழந்தைகள் கேட்டதை எல்லாம் வாங்கிக்கொடுப்பவர்களாக, குழந்தைகள் வீம்பு பிடித்தால் உடனே அதைச் செய்து கொடுப்பவர்களாக இருக்கக்கூடாது. அளவுக்கு மீறிய பாசம், செல்லம் கொடுத்து வளர்க்கக் கூடாது. இழப்புகளையும், தோல்விகளையும், ஏமாற்றங்களையும் - அவற்றிலிருந்து மீள்வதையும் பழக்கிக்கொடுக்காத பெற்றோர் இந்தச் சமுதாயத்திற்கு ஒரு விஷவிதையை விதைக்கிறார்கள்.



# பல்லடத்தில் கருந்திணை இல்லங்கள் திறப்பு விழா



கடந்த 19.06.2016 ஞாயிறு அன்று பல்லடம் காட்டாறு குழுத் தோழர்கள் பெரியார்செல்வி-அ.ப.சிவா இணையர், பல்லடம் சாந்தி - விஜயன் இணையர் பல்லடத்தில் கட்டியுள்ள கருந்திணை இல்லங்களின் திறப்பு விழாவும் பெரியார்செல்வி - அ.பசிவா இணையரின் மகள் பெ.ப.நறுமுகை, மடத்துக்குளம் தோழர் கலீலின் இணையர் தோழர். ரசப்நிசா ஆகியோரின் பிறந்த நாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தோழர்கள் பெரியார்செல்வி - அ.ப.சிவா ஆகியோரின் இல்லத்தை பெரியாரியல் போராளி தோழர். ஆசிட் தியாகராசன் அவர்கள் திறந்து வைத்தார். தோழர்கள் சாந்தி - விஜயன் ஆகியோரின் இல்லத்தை திருச்சி தோழர் முனைவர் புரட்சிக்கொடி அவர்கள் திறந்து வைத்தார்.

தோழர் ஆசிட் தியாகராசன் அவர்கள் விழாவில் கருந்திணை, காட்டாறுக் குழு இளைய தோழர்களிடம் தம்முடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், தோழர்களின் பங்களிப்பையும், அவர்களின் செயல்பாடுகளையும் கேட்டறிந்து நெகிழ்ச்சியுற வாழ்த்துகள் கூறியதோடு இப்படியான விழாக்களுக்கு அடிக்கடி அழைக்க வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டார்.

திறப்புவிழாக்களிலும், பிறந்தநாள் விழாக்களிலும் பெண்கள், குழந்தைகள் அனைவரும் முழுமையாக ஈடுபாட்டுடன் பங்கேற்றதோடு, தோழர்கள் ஆசிட் தியாகராஜன், விஜயராகவன் ஆகியோரிடம் பல்வேறு தலைப்புகளில் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டது சிறப்பாக அமைந்தது.

விழாவில் காட்டாறு வெளியீட்டாளர் தோழர். விஜயராகவன், ஆசிரியர் இராவணன், பாவேந்தர் பேரவை தோழர்.பன்னீர்செல்வம், காட்டாறு குழு, கருந்திணைக் குடும்பங்கள், தி.வி.க., உட்பட பெரியாரியக்கத் தோழர்கள் கலந்துகொண்டனர். விழாவில் அசைவ உணவு பரிமாறப்பட்டது.






Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com